www.padippakam.com

# வழி



## தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வழி

## தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்



படிப்பகம்

www.padippakam.com

# விழி

(தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்)


கப்டன் வானதி வெளியீடு - 07

முதற்பதிப்பு:
2005 ஆவணி

அட்டை ஓவியம்:
கார்திகேயினி திருநாவுக்கரசு

அட்டை வடிவமைப்பு:
க. ரணேஸ்

ஓவியங்கள்:
சூரியநிலா

வெளியீடு:
கப்டன் வானதி வெளியீட்டகம், கிளிநொச்சி.

அச்சுப்பதிப்பு:
மல்ரி விஷன் அச்சுக்கலையகம்,
73D, 2ம் குறுக்குத்தெரு, வவுனியா.

**மீள் வெளியீடு:**
**வெளியீட்டுப் பிரிவு**
**அனைத்துலகத் தொடர்பகம்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

ஏப்பிரல் - 2006




படிப்பகம்

www.padippakam.com



தாயாய் கண்டோம்
தமிழை சுவையாய் ஆக்கும்
புதிய எழுதுகோலாய் கண்டோம்
தேசப்பற்றின் ஊற்றாய் கண்டோம்
பெண்ணின் பெருமை எனவாய் கண்டோம்
'வழி'யை எமக்கு தந்தாய் தாயே
விழியை மூடிக்கொண்டாய் நீயே
உந்தன் அடிக்கோர் மாலை
நெய்தம் இங்கு நாமே.

அமரர் திருமதி சந்திரா அற்புதலிங்கம் (மலர்வு. 12.07.1961 உதிர்வு. 29.11.2004)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முதல் பயிரின் நினைவோடு ஆண்டு ஐந்தில்...

படைப்பார்வம் மிக்க பெண் படைப்பாளர்களை இனங்கண்டு, வழிப்படுத்தி, களமமைத்துக்கொடுத்து, அவர்களை வெளிக்கொண்டுவரும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பல வெளியீடுகளையும், இலக்கியப் போட்டிகள், பயிலரங்குகள், கௌரவிப்பு நிகழ்வுகள் எனப் பணியைத் தொடர்ந்த கப்டன் வானதி வெளியீட்டகம், தனது ஐந்தாவது வயதில் கால்பதிக்கும் இந்த வேளையில் 'வழி' என்ற எமது ஏழாவது வெளியீட்டுடன் உங்களைச் சந்திக்கின்றது.

கப்டன் வானதி வெளியீட்டகம் என்ற எமது நாற்று மேடையில் முதல் விதையாக முளைத்து வளர்ந்து பயிராகி செழிப்பாக வளர்ந்து வரும்போது விபத்தொன்றில் காலனால் பிடிங்கியெறியப்பட்ட படைப்பாளி திருமதி சந்திரா அற்புதலிங்கம் அவர்களை இவ் 'வழி' வழியே நினைவில் கொள்கிறோம்.

'எழுதாத உன் கவிதை' என்ற இருபத்தியாறு பெண் கவிஞர்களின் சிறுகதைத் தொகுதியை எமது முதல் வெளியீடாகக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, அடுத்து சிறுகதைத் தொகுதியை வெளியிடத் தீர்மானித்தோம். எழுத்தார்வமுள்ள பெண்களைத் தேடினோம், அதில் எமக்குக் கிடைத்தவர்தான் இலக்கியப்படைப்பாளி திருமதி சந்திரா அற்புதலிங்கம். சில வருட காலங்களாக எழுத்துலகில் அறியப்பட்ட இளம் படைப்பாளியான இவர், தனது பாடசாலைப் பராயத்திலிருந்து சமூகப்பற்றுடன் செயல்பட்டு வந்ததோடு தொடர்கின்ற தேச விடுதலைப் போராட்டத்திற்கும் உறுதுணையாகச் செயலாற்றியவர்.

தமிழீழப் பெண்கள் மேம்பாட்டுப் பிரிவு, தமிழீழத் தேசிய பேரெழுச்சிப் பேரவை, மாதர் சங்கம் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

அமைப்புக்களுடன் இணைந்து இயங்கிக்கொண்டிருந்தவர். 'கை மாறிய இலக்கு' (கனவுக்கு வெளியேயான உலகு தொகுப்பு), 'சொன்னால்தான் புரியுமா...?' (மீண்டும் துளிர்க்கும் வசந்தம் தொகுப்பு), 'வழி' (வழி தொகுப்பு) போன்ற சிறந்த சிறுகதைகளைத் தந்தவர்.

தனது கதைகளூடாகப் போராளிகளின் உணர்வுகளை, விலைமதிக்க முடியாத தியாகங்களை, கதாபாத்திரங்களுடன் பிணைந்து, தானும் ஒரு போராளியாக நின்று வெளிப்படுத்தும் அவரது ஆற்றல் அபாரமானது. இவரை ஒரு போராளி எழுத்தாளர் என்றே விமர்சகர்கள் கருத்துக்கூறும் அளவுக்கு தனது போராளிக் கதாபாத்திரங்களுடன் ஒன்றிப்போகின்றவர்.

தன் எழுத்தின் மூலமும் தேசவிடுதலைக்கான செயற்பாடுகள் மூலமும் தன்னை தனித்துவமாக இனங்காட்டிய திருமதி சந்திரா அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. பெண் படைப்பாளர்கள் குறைவாகவேயுள்ள இந்தக் காலத்தில் சந்திரா அற்புதலிங்கம் அவர்கள் பலராலும் பேசப்படுகின்ற ஒரு சிறந்த சிறுகதையாசிரியராக, நாவலாசிரியராக, விமர்சகராக மிளிர்வார், எமக்கு இன்னும் பல படைப்புக்களைத் தருவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் யாருமே எதிர்பாராத விதத்தில் அவரின் சாவு நடந்து முடிந்துவிட்டது.

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் அறிமுகத்தில் வளர்ந்த முதல் பயிர் அமரர் திருமதி சந்திரா அற்புதலிங்கம் அவர்களுக்கே அவரின் இறுதிப்படைப்பான 'வழி' சிறுகதையைத் தாங்கிவரும் 'வழி'யை காணிக்கையாக்குகின்றோம்.

ஆ. உலகமங்கை
10.07.2005

கப்டன் வானதி வெளியீட்டகம்,
இல. 61, கனகபுரம்.
கிளிநொச்சி.



படிப்பகம்

www.padippakam.com

# ஆத்மாக்களின் துடிப்பு

கதை உருவாக்கம் என்பது தமிழ் இலக்கிய உலகிற்குப் புதிய விடயமல்ல. நீதிக்கதைகள், பஞ்சதந்திரக்கதைகள், உருவக, குட்டிக்கதைகள், கிராமியக்கதைகள் என்று வழிவழியாகவே பரிச்சம் கொண்டது தமிழ் இலக்கிய உலகு. தமிழ்ச் சிறு கதைகளின் தோற்றம், வளர்ச்சி என்பன மிகமிகத் தொன்மையானவை என அறிகிறோம். சிறுகதைகளுக்கு அளவு, பரிமாணங்கள் கிடையாது. கதைக்காகத் தெரிவுசெய்யப்படுகின்ற கருவும், கதையை அமைக்கின்ற முறை, பாத்திரங்களின் தெரிவு, கதையை நகர்த்துகின்ற திறன் எல்லாம் சேர்ந்தே கதையை ஆழமாக்குகின்றன.

இங்கே நூலுருப் பெற்றுள்ள பதின்மூன்று சிறுகதைகள் முழுமையும் பெண்களால் படைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து கதைகள் போராளிப் படைப்பாளிகளுடையவை. இங்கே கதைகளுக்கு வருமுன் கப்டன் வானதி வெளியீட்டகத்தின் முயற்சியைப் பாராட்ட வேண்டும். தொடர்ச்சியாக நூல்களை வெளியிட்டு வருகின்றது. கப்டன் வானதி வெளியீட்டகத்தின் கரங்களை படைப்பாளிகள் இறுகப் பற்றிக்கொள்ளுதல் நன்று.

தங்கள் மனங்களை ஊடுருவிய அல்லது உள்நுழைந்த கருக்கள் பலவற்றை இங்கு இவர்கள் கதையாக்கியிருக்கிறார்கள். வன்னிமகளின் 'கௌரவம்', சிவாஜினி சிவசங்கரின் 'மனிதத்துள்', கிருஷ்ணவேணியின் 'பூ ஒன்று புயலானது', குமுதினியின் 'பயணம்' சமூகத்தின் மனசாட்சியைத் தொட்டு உலுப்புவனவாய் இருக்கின்றன. 'பயணம்' அவலத்தின் உச்சமாய் அமைந்திருக்கிறது. ஒரு பெண்



படிப்பகம்

www.padippakam.com

ணின் அகவலிமை நேர்த்தியான முறையில் வெளிக்காட்டப்பட்டி ருக்கிறது. அலையிசையின் 'மௌனத்திரை விலக'வில் வரும் சறோ– எத்தனையோ சறோக்கள் இன்னமும் 'சட'மாக இருக்கிறார் கள். "சட" நிலை உடைக்கப்பட்டு உயிர்த்தல் நிகழும்போதுதான் இந்த அவலமும் தீரும்.

கிருஷ்ணவேணியின் 'பூ ஒன்று புயலானது'வில் தேசத்துரோ கம் செய்யும் துணைவனுக்குத் தண்டனை வழங்கும் பெண். வியப் பும், கேள்வியும், ஐயப்பாடும் ஏற்பட்டபோதும்– நிகழ்வதற்கான சாத் தியங்கள் அதிகம். சிவாஜினி சிவசங்கரின் 'மனிதத்துள்' வரும் "அகிலன்" ஒரு குறியீடு. காலங்காலமாய் சமூகத்தில் புரை யோடிக்கிடைக்கும் ஓர் அநாகரிகத்தைச் சுட்டி நிற்கிறது.

ஆதித்தநிலாவின் 'எங்கே கண்ணைத் திறவுங்கோ' நகர்வுப் போக்கில் தன்னை வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது. அவருக்கே உரிய தனித்துவமான படைப்பு அது. அமரர் சந்திரா அற்புதலிங் கத்தின் 'வழி' சில கேள்விகளுக்கும், குற்றச்சாட்டுக்களுக்கும் பதி லிறுக்கிறது. இரு போராளிகளின் மத்தியில் ஏற்பட்ட மென்மை யான காதலுணர்வை குறைக்காமலும், மிகைப்படுத்தாமலும் தந்துள் ளார் சந்திரா. கதையைப் படித்துமுடிக்க முகம் தெரியாத அவ்விரு போராளிகள் மீதும் மரியாதை கூடுகிறது.

காந்தாவின் 'நெஞ்சுக்குள்ளே', மலைமகளின் 'புலிவாலைத் தேடி' அம்புலியின் 'உள்ளே எரியும் தீ' மூன்றும் போர்க் காலத்தை; களத்தை நினைவில் நிறுத்துபவை. மலைமகள் தன் மனதிலுள்ள எண்ணக் கருவை தனக்கே உரிய தொனியில் சொல்லும் ஆற்றல் கைவரப் பெற்றவர். இந்தக் கதைகளிலும் இவரின் ஆற்றல் மிளிர்கின்றது. இக் கதைமூலம் ஒரு காலத்தைப் பதிவு செய்கின்றார் மலைமகள்.

அம்புலியின் 'உள்ளே எரியும் தீ' மெல்லிய உணர்வொன்றை கதை முடியும் வரை நூலிழையாய் இழுத்துச் செல்கிறது. கதையின் நிறைவுப் பந்தி கதைக்கு ஒரு கதையைக் கொடுக்கிறது.

சில கதைகளில் ஆசிரியர் பேசும் தன்மை தூக்கலாக இருக்கிறது. இது படிப்போருக்குச் சலிப்பை ஏற்படுத்தும். ஆனாலும் கதை நகர்வு



படிப்பகம்

www.padippakam.com

கள் நன்றாகவே உள்ளன. காலத்தை வென்றுநிற்பவை இலக்கியப் படைப்புக்கள். எமது இலக்கியப் படைப்புகளுக்கும் நின்று வாழும் பேறுபெறவேண்டும். இலக்கியத்துக்கு முன்னுதாரணமாய் காட்டக் கூடிய எத்தனையோ படைப்புக்கள் இங்கு இருந்த போதும் அவை கண்டுகொள்ளபடாமலே இருக்கின்றன. அவையும் அவைபோன்ற படைப்புக்களும் கண்டுகொள்ளப்படுவதற்கு கப்டன் வானதி வெளி யீட்டகமும், ஏனைய வெளியீட்டு நிறுவனங்களும் நூல்களை வெளி யிடுவதோடு மட்டும் நின்று விடாது, அதற்கப்பாலும் பணியாற்ற வேண்டும். ஏனென்றால் இங்குள்ள இலக்கியப் படைப்புக்களின் கருக்களில் இரத்தமும், தசையும், நிணமும், ஆன்மாவின் துடிப்பும் நிறைந்துள்ளன. கற்பனைகள் என்பதற்கு இடமில்லை. உண்மை யின் பிரதிபலிப்பாய் அவை இருக்கின்றன என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதில் வெளியீட்டு நிறுவனங்கள் அக்கறைகொள்ள வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

இதேவேளை, படைப்பாளர்களும் தங்களுடைய படைப்புக்களின் தரத்தை உயர்த்துவதில் அக்கறை காட்டவேண்டும். இந்தத் தொகுதி யைப் போலே பல படைப்பாளர்களின் படைப்புக்கள் ஒரே தொகுதியில் வெளிவருவது ஆரோக்கியமாக அமையும்.

இங்கு சிறுகதைகளை எழுதியுள்ள படைப்பாளிகளையும், இவர்க ளின் படைப்புக்களை வெளிக்கொண்டுவந்திருக்கும் கப்டன் வானதி வெளியீட்டகத்திற்கும் எனது நன்றிகளும் வாழ்த்துக்களும்.

ஆதிலட்சுமி சிவகுமார்.

10-5-2005



படிப்பகம்

www.padippakam.com

# வழியின் உள்ளே...


மெட்டி .................... 11

உள்ளே எரியும் தீ .................... 26

மௌனத்திரை விலக .................... 38

எல்லைக்கோடு .................... 44

கௌரவம் .................... 49

மனிதத்துள் .................... 58

புலிவாலைத்தேடி .................... 68

வழி .................... 76

நெஞ்சுக்குள்ள .................... 92

வதையின் கதை .................... 102

பூ ஒன்று புயலானது .................... 113


எங்கே கண்ணைத் திறவுங்கோ .................... 123

பயணம் .................... 131




படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# மெட்டி

தாட்சாயினி

மூச்சின் இழையில் உஷ்ணம்.

பயத்தின் வீச்சும் நாளுக்கு நாள் காற்றிலேறும் கந்தக வாடை மாதிரி கிடுகிடு வென்று ஏறிக் கொண்டிருந் தது.

தூக்கமுமில்லாமல், விழிப்புமில்லாமல் ஏதோ ஒரு மயக்கநிலை. அந்த மயக்க நிலையில் மேகத் திரை மாதிரி வெள்ளுடை அணிந்த ஒரு சோக விம்பம். அதனூடே கிளம்புகின்ற ஒரு அவல ஒலி மௌனத்தின் திரையைக் கிழித்தெறிகின்ற ஒரு ஆவேசத்தோடு...

"சுந்தா... சுந்தா..."

யாரோ கூப்பிடுகிறாற் போல... அந்த அவலத் தொனிதான் இவனை உத



படிப்பகம்

www.padippakam.com

விக்குக் கூப்பிடுகிறதோ?

யாருமற்ற அந்தகாரத்தில் தனித்து தவறிவிடப்பட்ட அந்த ஒற்றைக்குரல் சோகம் சுமந்து இவனை உசுப்பி உதவிக்குக் கூப்பிடுகிறதோ?

பன்னிரெண்டு வயதுச் சிறுவன்.... இவனுக்கு என்ன முடியும்? ஆயுதங்களே அரசாளத் தொடங்கிய பிறகு.... ஆண் மகனாயிருந் தாலென்ன...? அவனும் வாய் பொத்தத்தானே முடியும் இங்கு....?

பற்கள் உதடுகளோடு தேய்ந்து சண்டையிட கால்கள் நிலத்தை உதைத்துப் பிரிந்தன.

"டேய் சுந்தா..."

குடிசை வாயிலைத் தட்டி ஒரு குரல் எட்டிப் பார்க்கிறது. இது தேவதைக் குரலல்ல. மழலை மாறாத குரல். மாலினி போல... மாலு.... மா... மனதில் அசையும் குரல் வெளியே விழுந்ததாய்த் தெரியவில்லை.

தூரத்துக் கிணற்றிலிருந்து பிளாஸ்ரிக் வாளியில் நீரை அள் ளிக்கொண்டு வந்த பாக்கியம் வாயிலோரம் வாளியை வைத்து விட்டு நெற்றி சுருக்கி மாலுவை ஏறிட்டாள்.

"ஊருக்குப்போய் வந்ததிலையிருந்து உப்பிடித்தானடி கிடக்கி றான். என்ன காத்துக் கறுப்புப் பட்டுதோ... தெரியா...."

மனம் நிறைந்த சுமையோடு பாக்கியம் குடிசைக்குள் நுழைந் தாள். முன்பு இப்படியல்ல. அவர்களுக்கு ஊர் இருந்தது. ஊரில் வளவு நிறைந்த வீடு இருந்தது. சண்டை என்று ஒன்று வந்தபிறகு ஊரில் இருக்க முடியவில்லை. உயிர் பிரதானமாயிருந்தது. உயி ரைப் பாதுகாக்க வேண்டுமாயிருந்தால், வருங்கால சந்ததியை வளமாகப் பேணவேண்டுமாய் இருந்தால் விலகி விலகிப் போக வேண்டியிருந்தது. போர்ப் பிரதேசங்களை விட்டு பாதுகாப்பான நிலங்களில் குடிசைகளை அமைத்து நாடோடிகளைப்போல ஒரு வாழ்க்கை. வெறும் மணலில் சாக்குத்துணியை விரித்து, கொட்டு கின்ற மழைக்குளிரிலும் கையே தலையணையாய், புழுதியே



படிப்பகம்

www.padippakam.com

போர்வையாய்.... காலம் நகர்ந்தது.

எத்தனையோ வண்ணங்களில் உடையணிந்த மாலினி இப்போது அழுக்குப்பிடித்த சாம்பல் வண்ணத்துச் சட்டையோடே நின்றாள். குடிசைக் கதவின் கப்பைப் பிடித்து முகத்தைத் தேய்த்தபடி நகரமனமில்லாமல்.... சுந்தாவைத் தேடியபடி....

“அந்தப் பொம்மை டான்ஸ் ஆடுற பொம்மை...” என்பதாய் அவள் மனதினுள் அங்கலாய்த்து எதிரொலிக்கின்ற ஆர்வத்தின் பிரதிபலிப்பு....

அந்த பதினைந்து குடில்களுக்கும் சொந்தமான சின்ன முற்றத்தில் எல்லாக் குடிசைகளுக்கும் சொந்தமான இருபதிற்கும் மேற்பட்ட சிறுசுகளின் ஆரவாரம் காதைப் பிய்த்துக் கொண்டிருந்தது. காற்சட்டைகளோடும், பாவாடைகளோடும், அரை உடுப்புகளோடும், பால்பேதமின்றி ‘பாடி வந்தேன்’ சொல்லிப் பறந்து கொண்டிருந்தன காலத்தால் பகைக்கப்பட்ட அந்தப் பறவைக்குஞ்சுகள், மாலினிக்கும் அந்த வயதுதான். அந்தக் கூட்டத்துக்குள் அவளும் கலந்திருக்க வேண்டியதே நியாயம். இல்லையேல் மெலிந்து போன கால்களுக்கு வலுவில்லையென்றால் அதோ குடிசையோரம் குந்தியிருந்து ஆரவாரிக்கின்ற மற்றச் சிறுசுகளைப் போலவேனும் இருக்கலாம். ஆனால் மாலினியின் மனது இவற்றையெல்லாம் தாண்டி வேறு யோசித்தது. அந்தச் சின்ன மனதிற்கு ஊரின் நினைப்பு துயரைக் கிளப்பியது. அவளது ரசனை வேறு. அவளது உணர்வுகள் வேறு. அவளது விளையாட்டுக்களும் வேறு. அவளது ரசனைக்கும் உணர்வுகளுக்கும் கிடைத்த இனிய நண்பன் சுந்தா. தூரத்துச் சொந்தம்தான் என்றாலும் பக்கத்து வீடு இருவரையும் நெருக்கியிருந்தது.

சுந்தா எப்பவும் அம்மாவுக்கும் நல்ல பிள்ளை. சுள்ளி பொறுக்கி வரச்சொல்லி அம்மா சொன்னால் முகம் சுழிக்காமல் பொறுக்கி வருவான். ஊரில் அப்பவெல்லாம் தேங்காய் உரித்துக் கொடுப்பான். தென்னம்மட்டை பிளந்து கொடுப்பான். சமயத்தில் பாக்கியத்துக்கு இடியப்பம்கூட பிழிந்து கொடுப்பான். மாலுவிற்கு இனிய சினேகிதன் சுந்தா.... கோவில் திருவிழாக்களில் மாலுவுக்குப் பிடித்த விளையாட்டுச் சாமான்களைத் தெரிவு செய்வது



படிப்பகம்

www.padippakam.com

அனேகமாய் சுந்தாதான். அவளுடைய சின்னச்சின்ன எண்ணங் களை ரசித்து அதற்கேற்றாப்போல் ஈடுகொடுத்து இடையிடையே அவளோடு செல்லமாய் சீண்டி சிணுங்கவைத்து.... சுந்தா இல்லா விட்டல்.... அந்தச் சிறுமியின் மனம் மரத்துத் தான் போயிருக்கும்.

அந்த நாட்டியமாடும் பொம்மை அதையும் அவள் அவனுக் குத்தான் காட்டவென்று ஓடோடி வந்தாள்.

"பார் சுந்தா எனக்கு மாமா திருவிழாவிலை வாங்கி தந்தவர் கண்ணைச் சிமிட்டி டான்ஸ் ஆடுது பார்"

சுவிச்சை தட்டியவுடன் கைகால்களை அசைத்து நாட்டிய மாடிய அந்தப் பொம்மையை பார்த்தபடி சொன்னாள்.

அதே பொம்மைதான் இடப்பெயர்வின்போது தவறிப் போயிற்று. உடுக்க உடுபுடவையுடன், சமைக்க பாத்திரங்களுமே கொண்டு வந்தபோது அந்தப் பொம்மையையா எடுத்து வரத்தோன்றும்?

ஆனால் அதற்காக அதை விட்டு வந்ததற்காக மாலு பலமுறை அழுதிருக்கின்றாள். தாயிடம் வாங்கிய திட்டுகளின் பின் சுந்தா விடம் முறையிட்டுத் தன் துயர் குறைத்திருக்கின்றாள்.

"இனி அங்கை போகேலாதோ.... போய் எடுத்து வரேலாதோ..." என்று ஏக்கத்தோடு அவன் முகம் பார்த்திருக்கிறாள். இவளது. தீவிரம் புரிந்து அவன் மௌனம் சுமக்கும் வேளைகளில் கண்கள் சுருக்கி கெஞ்சுவாள்.

"ஒருக்கா அவங்களிட்டைச் சொல்லுவமே, தங்கச்சியை விட்டிட்டு வந்திட்டம் எண்டு. இப்ப நிப்பாட்டிப் போட்டுப் பேந்து அடிக்கச் சொல்லி..."

ஏதோ இவன் சொன்னவுடன் அவர்கள் சண்டையை நிறுத்தி விடுவார்கள் என்கிற மாதிரி கெஞ்சுவாள்.

"போகலாம் போகேக்கை கட்டாயம் எடுக்கலாம்"

என்று அவளது திருப்திக்காக அவன் நம்பிக்கையூட்டியிருக்கி றான். அப்படி அவன் நம்பிக்கையூட்டியது எந்த விதத்தில் நிஜமா



படிப்பகம்

www.padippakam.com

யிற்றோ தெரியவில்லை. அவர்கள் போகக்கூடியவாறு சந்தர்ப்பங் கள் ஏற்பட்டது மட்டும் உண்மை. போர் சற்றுத் தணிந்திருந்த வேளைகளிலெல்லாம் சனங்கள் வீடு பார்க்கவென்று புறப்பட்டுப் போனார்கள்.

அப்படிப் போனபோதுதான் இவனும் வீடு பார்க்க ஆசைப் பட்டான். அதன் விளைவாக ஊரவர்களோடு புறப்பட்டான். அப் போது மாலினி மறுபடியும் ஞாபகப்படுத்தினாள்.

“சாமியறையுக்கை கிடக்கு சுந்தா மறக்காமல் எடுத்துவா...”

அவள் கேட்பதை அவனால் மறுக்கத்தான் முடியுமா? அதற்கா கத்தானே புறப்பட்டான்.

மாலுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சுந்தா கொண்டு வந்தி ருப்பானா...?

“டேய் சுந்தா, இஞ்சேர் எழும்படா மாலு வந்திருக்கு”

கேத்திலை மூட்டிவிட்டு மகனுக்கருகில் குந்தி அவனது தோளைப் பிடித்து உலுப்பினாள் பாக்கியம்.

“இல்லை இல்லை... நான் காணேல்லை...”

பாக்கியம் மகனை பயத்தோடு பார்த்தாள்

“என்னடா என்னத்தை நீ காணேல்லை?”

அலறிப்புடைத்தபடி எழுந்த சுந்தரன் தாயைக் கண்டு திருதிரு வென்று விழித்தான்.

“இல்லை... ஒண்டுமில்லை...”

பயம் அப்பிய முகத்தோடு குடிசைக்கு வெளியே இருண்டு போகின்ற பொழுதை வெறித்தவன் பார்வையில் கப்போடு கட் டுண்டிருந்த மாலுவின் பிஞ்சு விரல்களும் ஆவலான விழிகளும் பட்டன.

மாலு... மாலு... மனதிற்கு லேசாய் இதம் தடவின மாதிரி இருந்



படிப்பகம்

www.padippakam.com

தது. மெல்ல எழுந்து வெளியே வந்தான்.

"எப்ப பாக்கியம் பொடியன் வந்தவன்...? மற்றாக்களும் வந்திட்டினமோ....?"

பக்கத்துக் குடிசைக்குள் கொடியில் உலர்த்திய துணிகளைப் பொறுக்கிக் கொண்டு புகமுயன்ற கணத்தில் நின்று விசாரித்தாள் சரசு.

"எல்லோரும் வரீனமாம். வழியிலை எங்கையோ இளனி வெட்டிக் குடிச்சுக் கொண்டிருக்கீனை இவன் பாட்டுக்கு வந்திட்டான்"

அடுப்போடு மல்லுக்கட்டியபடியே உள்ளிருந்து சத்தமாய்ச் சொன்னாள் பாக்கியம்?.

"போனதுகளுக்கு உடனை வரோணும் எண்ட நினைப்பில்லை. நாங்கள் நெஞ்சுக்கை நெருப்பைக் கொட்டிக்கொண்டிருக்கிறம். இப்ப உவனும் வந்து சொல்லாட்டி நெஞ்சு திகீர் திகீர் எண்டு வெந்திருக்கும்"

சரசு உள்ளே போய் மறைந்தாள்.

மாலுவின் மெலிந்த விரல்களை பற்றியபடி அந்தக் குடிசையை விட்டு விலகி சற்றுத்தள்ளியிருந்த கோவிலின் கேணிப்படிகளில் போய் அமர்ந்தான் சுந்தா. பக்கத்திலே மாலு. அவள் விழிகளில் ஆவல் இவன் என்ன ஒன்றுமே சொல்லாமல் கேணித்தண்ணிரைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இவன் பொம்மையைக் கொண்டு வராமலா வந்தான்? இவளது கண்களில் சொட்டுக் கண்ணீர் எட்டிப்பார்த்தது.

"சுந்தா...சுந்தா...."

அவளது குரலின் அழைப்பில் திரும்பிய சுந்தா திடுக்கிட்டான்.

சிறு மழலை முகம் சற்றே முதிர்ந்து ஒரு இளம்பெண்ணாய்த் தோற்றம் காட்டியது. அந்த விழிகளில் வளையம் போடுகிற கண்ணீர் துளிர்கள் வளையம், வளையமாய் விழுந்து வெள்ளி மெட்டிகளாகி....



படிப்பகம்

www.padippakam.com

அவன் தன் கண்களில் விழுந்த அந்த தோற்றத்தை கலைக்க விரும்பினாள். பக்கத்தில் தென்பட்ட சில கற்களை எடுத்து வேக மாக கேணிக்குள் விட்டெறிந்தான். கேணிக்குள்ளேயே அந்த விம் பம் நிற்கிற மாதிரி... அந்த நினைப்பை விரட்டியடித்து விடுகிற மாதிரி... தண்ணீருக்குள் விழுந்த கற்கள் சலங்.... சலங்கென்று ஒலி எழுப்ப மெட்டியில் மோதிக் கற்கள் ஒலியெழுப்புகிறாற் போல.

இது அவன் செயலாக...? ஆபத்துக்கு அஞ்சி அழுகின்ற மெட்டியின் மீது அவனும் கல் வீசக் கற்றுக் கொண்டு விட் டானா....?

மனம் சுக்கல்களானது. அவன் எறிந்த கற்கள் அவன் இதயத் தையே சுக்கல்கள் ஆக்கினமாதிரி...

பக்கத்தில் திகைத்துப் போய் இருக்கின்ற மாலினி...

“அதாரடா அது...”

உறுமல்களோடான குரல் கோவில் வாயிற்புறத்தில் இருந்து எதிரொலித்தது.

“கேணிக்குள்ளை ஆரடா கல்லுப் போடுறது...?”

மீண்டும் உறுமல்

பயம் சிணுங்கல்களை முகத்தில் பிரசவிக்க சுந்தாவின் தோளைத் தொட்டுத் தயங்கி எழும்பினாள் மாலினி.

“இந்த அகதிச்சனங்களாலை பெருந் தொல்லையாப் போச்சு... இதுக்கை ஒருதரும் வரக்கூடா, அதுதான் உங்களுக்கெண்டு கொட் டில் போட்டுத் தந்துகிடக்கில்லே. பிறகென்னத்துக்கு இஞ்சை வாறியள். ஓடுங்கோ கெதியா.....”

அடிக்காத குறையாய் அதட்டியது அந்தப் பெரிய மனிதனின் குரல்.

எங்கை எங்கையோ வந்து ஆர் ஆற்றையோ சொல்லுக்கேக்



படிப்பகம்

www.padippakam.com

கும்படி ஆச்சே....

சுந்தாவுக்குள் திடீரென்று சன்மம் வெளிக்கிளம்பியது. அவனுக்குள் தெரிந்த விம்பங்கள் மறைந்து இப்போது சுத்தமாய் மாலுவின் விம்மல் முகம் கண்ணில் பட்டது.

"நீ அழாதை மாலு நாங்கள் போவம்..."

அந்தப் பளிங்கு முகத்தில் பட்ட கண்ணீர்க் கறைகளை வருடித் துடைத்து விட்டு அதட்டிய மனிதரைக் கோபமாய் முறைத்து விட்டு மாலுவின் கரங்களை ஆதரவாய்ப் பற்றியபடி திரும்பவும் நடந்து போய் குடிசைக்குப் பின் புறமாய்ச் சாய்ந்து உட்கார்ந்தான்.

"நாங்கள் எங்கட வீட்டை போவம் இனிமேல் இஞ்சை இருக்க வேண்டாம்...."

அந்த மிருதுவான கேவல் ஒலியோடு வந்த வார்த்தைகளின் அர்த்தம் திடுமென்று அவனைத் தாக்கிற்று.

"என்ன மாலு சொன்னனி..."

திரும்பிக்கேட்டான்.

"இஞ்சை இனி வேண்டாம். நாங்கள் எங்கடை வீட்டை போவம். நாங்கள் அங்க வடிவா விளையாடலாம். எங்கட கோயில் கேணிக்க கல்லெறியலாம். நாங்கள் எங்கட வீட்ட போவம். நீ போட்டு வந்தனிதானே."

"வேண்டாம், அங்க போகவே வேண்டாம். என்ர மாலுக்குட்டியெல்லே... அங்க போகேலாது, நாங்க இஞ்சையே இருப்பம் என்ன....?"

ஆவேசத்தோடு தொடங்கியவன் மாலினியின் முகம் பயத்தால் வெழுப்பது கண்டு செல்லமாக கதை பொழிந்தான்.

"அங்கை இன்னும் சண்டை முடியேல்லை. முடிஞ்சாப்பிறகு போவம் என்ன...?"



படிப்பகம்

www.padippakam.com

“அப்ப என்ர டான்ஸ் ஆடுற பொம்மை... அதைக் கொண்டு வந்தனியோ...?”

“அது.... அது வேண்டாம் மாலு. உனக்கு நான் வேறை பொம்மை வாங்கித்தாறன். அது வேண்டாம் உனக்கு...”

“ஏன் எனக்கு அதுதான் வேணும். அதையும் அவங்கள் கொண்டு போட்டாங்களோ... அதுக்கு டான்ஸ் ஆட மட்டும் தானை தெரியும். அதை ஏன் எடுத்தாங்கள்...”

“வேண்டாம் மாலு அதைப்பற்றிக் கதைக்காதை. அதை அவங்கள் என்ன செய்தாங்களோ....? நாங்கள் இனி அந்தப் பக்கம் போகக்கூடா... நான் உனக்குப் புதுசு வாங்கித்தாறன்...”

“என்ரை பொம்மை. டான்ஸ் ஆடுற பொம்மை....”

மாலுவின் முகத்தில் இன்னும் கண்ணீர்ச்சாயை நீங்கவில்லை.

முற்றத்தில் ஒரே ஆரவாரம். தேங்காய்களும், மட்டைகளுமாய் சைக்கிள்களில் கட்டிக்கொண்டு ஊர் பார்த்து வந்தவர்களின் நேரடி வர்ணனை தொடங்கிவிட்டது. அத்தனை குடிசைக்குரியவர்களும் முற்றத்தில் குழுமிவிட்டார்கள்.

அவனுக்குள் மீண்டும் அந்த ஞாபகம் திரண்டெழுந்தது. பாழடைந்து போய்கிடந்த வீடு சுற்றிவர கறையான் புற்றுகள் எழுந்திருந்தன. சற்றே ஈரலித்திருந்த மண் முதல்நாள் பெய்த மழையை ஞாபகமூட்டியது. கதவுகள் பெயர்க்கப்பட்டிருந்தன. ஓ...வென்று திறக்கப்பட்டிருந்த வீடு சாமான்கள் வழித்துத் துடைக்கப்பட்டிருந்தன. பிரயோசனமில்லாத பொருட்கள் மட்டும் அங்கங்கே சிதறுண்டிருந்தன.

இவன் அந்தப் பொம்மையைத் தேடினான்.

பொம்மை சாமி அறையில் இருக்கவில்லை.

சாமிபடத்தின் முன் குத்துவிளக்கு சரிந்து எண்ணெய் வழிந்து அழியாத ஒரு நிறப்படிவை ஏற்படுத்தியிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

வெளி விறாந்தையின் மூலைக்குள் மஞ்சள் நிறக் கற்றை யொன்று தெரிந்தது. அவன் அதிர்ச்சியோடு கிட்டப்போய்ப் பார்த் தான். கொத்தாய் பிடுங்கப்பட்ட பொம்மையின் தலைமுடி.

இன்னொரு மூலையில் சின்னச் சின்ன துணித்துண்டுகள்.

ஆசை ஆசையாய் தன் சின்ன விரல்களால் மாலினி தைத்துப் போட்ட பொம்மையின் சட்டை.

நாட்டியமாடும் அழகான பொம்மை...

இவன் விழிகள் பொம்மையைத் தேடின.

பின் முற்றத்தில் சடைத்திருந்த வேம்பின் கீழ் பொம்மை குப்பு றக் கிடந்தது.

இவன் ஓடிப்போய் பொம்மையைத் தூக்கி நிமிர்தியவன் அதிர்ந் தான். உடலெங்கும் சிராய்ப்புகள். வயிற்றுப்புறத்தே பெருங்குழி. கிறனைட் வைத்திருப்பார்களோ...?

இனி அந்தப் பொம்மைக்கு உயிர் இல்லை.

அது இனி நாட்டியமாடாது.

அந்த அழகிய பொம்மையின் உயிர்ப்பு சிதைக்கப்பட்டு விட்டது.

வயிற்றுப்புறமாய் 'பற்றரி' பொருத்தியிருந்த இடத்தை அப்ப டியே குடைந்து எறிந்து அந்தப் பொம்மையின் உயிர் வளையை நெரித்திருக்கிறார்கள்.

ஈரமணல் பட்டுச் சொரசொரப்பாகி மழைநீரில் சிலும்பல்க ளால் வயிற்றை நிரப்பியிருந்த அந்தப் பொம்மையை அப்பால் வைத்துவிட்டு அவன் ஒரு நொடி துக்கத்தோடு நின்றான்.

பக்கத்தில் எங்காவது புதைத்துவிடவேண்டும். சிரட்டைகளை யும், மரக்கொப்புகளையும் தேடிக்கொண்டு வந்தான். நேற்றுப் பெய்த மழைக்கு ஈரலித்திருந்த மண் சுலபமாய் தோண்ட முடியும் போலிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

சிரட்டைகள் மண்ணைத் தள்ளிக்கொண்டிருந்தன. இரண்டு, மூன்று சிரட்டை மண் தோண்டியிருப்பான்.

எதிலோ சிரட்டை உராய்வது போலிருந்தது. சண்டைநேரம் யாராவது நகைகளைப் புதைத்திருப்பார்களோ? இவன் அவதான மாய் நெருடிய இடத்தைச் சுற்றித் தோண்டினான். வெள்ளி மினுக் கமாய் ஏதோ தெரிய ஆர்வமேலீட்டால் மேலும் தோண்டினான். அந்த வெள்ளி மினுக்கம் இப்போது தெளிவாய் பிரகாசித்தது. ஒரு மெட்டி.... சுற்றிவர விரல்கள்.... கால் விரல்கள். மண் நெருடிய கறுப்பு விரல்கள். அழுக ஆரம்பித்திருக்கும் பாதங்கள்.

இவன் பார்வையை அச்சம் பாதி பாதியாய் மூடியது.

"ஐயோ, ஆற்றையோ சவம்..."

அவன் மனதுக்குள் எதிரொலித்த அவல வார்த்தைகளுடே மரங்கள் சலசலத்தன.

மெட்டி, இஞ்சை இருந்த மெட்டி போடுற ஆக்கள்...

வந்தனாக்கா, மைதிலியக்கா, மதுரம் அக்கா ....

இவன் பட்டியல்களில் நீண்ட உருவங்கள்...

"சுந்தா, சுந்தா காப்பாற்றடா..."

என்று அலறுவதாய் படவே இவன் கண்களில் தீனமாய் ஒரு அழுகை எட்டிப்பார்த்தது.

இலைகளின் சரசரப்பு இப்போது அண்டி வருமாப்போல...

'ஓடு... இங்கே நிற்காதே, உன்னையும் அவர்கள் ஏதேனும் செய்யமுதல் ஓடு...'

உள்ளெழுந்த எச்சரிக்கைக்குரல் கால்களுக்கு வேகம் கொடுக்க ஓடினான். பின்னால் யாரோ துரத்துவது போலிருந்தது.

'இங்கே பார்த்ததை நீ யாருக்கும் சொல்லக்கூடாது. சொன் னால்...'



படிப்பகம்

www.padippakam.com

கழுத்தில் துப்பாக்கிமுனை அழுத்துவது போலிருந்தது.

சைக்கிள்களில் மூட்டை கட்டி ஆயத்தமாய் நின்றவர்கள் வேர்த்து விறுவிறுத்து வந்த இவனைப் பார்வையில் வாங்கிக் கொள்ளாமல்....

"எங்கையடா சுத்தித் திரிஞ்சனி, இனியும் மிலாந்தாமல் வா... வா...."

என்றபடி சைக்கிள்களை உழக்கத்தொடங்கினர். இவனும் சைக்கிள் ஓடத் தொடங்கியவன் இடைவெளியில் சில நிமிடம் நிற்கக்கூட அஞ்சியவனாய் ஒரே ஓட்டத்தில் இங்கு வந்து விழுந்தான். அந்த நினைப்புத்தான் மரணக்கயிறுபோல் அவனை நெருக்கிக் கொண்டிருந்தது.

"இந்தாப்பன் வெறும் தேத்தண்ணி. ஏதோ பேயடிச்சமாதிரி இருக்கிறாய். குடி... எல்லாம் போன களைப்பு, குடிச்சவுடனை சரியாப்போம்..."

பரிவோடு பாக்கியம் தந்த தேநீரை வெறுமையோடு வாங்கியவன்,

"அம்மா வந்தனாக்கா... மதுராக்கா... எல்லாரும் எங்கையிருக்கினம்...." என்றான்.

"அதுகளும் உங்கினேக்கதான் எங்கையோ இருக்குதுகள், ஏனப்பு உனக்கிப்ப ஆற்றையேன் கதை..."

என்றபடி பாக்கியம் மாலுவின் அழுத விழிகளைப் பார்த்தாள்.

"என்ன சொன்னி. அவள் ஏன் அழுகிறாள்...."

அவளுக்கும் தேனீரைக் கொடுத்துவிட்டு பொழுதால் இருண்ட வானத்தைப் பார்த்து பெருமூச்செறிந்தாள்.

"எப்பதான் எங்களுக்கு விடியப்போகுதோ....?"

"மாலு ஒண்டும் யோசிக்கக்கூடாது. நான் பிள்ளைக்குப் புதுப் பொம்மை வாங்கித்தருவன் சரிதானே..." ஆறுதலாய் மாலினியை



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பிவிட்டு குடிசையின் கதவோரம் ஒண்டுகிறான்.

அந்த உருவம் அது யாராயிருக்கும்?

அந்த மெட்டி அது யாருக்குரிய மெட்டி?

இப்படி இன்னும் எத்தனை மெட்டிகள் இன்னும் யாருக்கும் தெரியாமலே அங்கு புதைந்து போயிருக்கின்றன?

இன்னும் எத்தனை பொம்மைகள் யாருக்கும் தெரியாமலே அங்கு நசுங்கிச் சிதைக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் எத்தனை துன்பமயமான ரகசியங்கள் அந்த ஊரின் மண்ணுக்கடியில் புதையுண்டிருக்கின்றன.

போர் தந்த வடுக்கள் இவ்வளவுதானா? இன்னுமிருக்கின்றனவா?

தூரத்திலே மேகங்கள் திரண்டன.

மேகத் துணுக்குகள் ஒன்றுசேர்ந்து வெள்ளைத்திரைச் சேலையாகி ஒரு பெண்ணுருவாய் மாறி சோக விம்பமாகி இவன் மனதை அலைக்கழித்தன.

மாலினியின் குழந்தைமுகம் ஒரு பெண்ணுருக் கொண்டாற்போல.... அந்த உரு வான்வெளியில் நின்று அழ ஆரம்பிக்கிறது.

அது வந்தனாக்காவோ, மதுரமக்காவோ.... இல்லாமல் போகும் பட்சத்தில் யாரோ ஒரு பெண்மகள்... இங்கு கயமைக்குப் பலியாகி... வானத்தில் தோன்றி அவனை உலுப்பிவிட்டபடி....

அந்த மெட்டி அலறிற்று....

மெட்டி கதறிற்று....

மெட்டி கடைசியில் குலுங்கிக் குலங்கி அழுதது.

என்னைக் காப்பாற்றத்தான் முடியவில்லை உன்னால். சரி என்னை உன்னால் அடையாளப்படுத்தவாவது முடியாதா?



படிப்பகம்

www.padippakam.com

என்னைக் கசக்கி அழித்தவர்களை பழிவாங்கவாவது முடியாதா... உன்னால்....?

வான் விளிம்பில் நிலவாய் வந்த மெட்டி கெஞ்சிற்று. சொல்லி விட வேண்டும். அந்த ஊரில், அந்த இடத்தில் அனாதையாய்க் கிடக்கின்ற அந்த மெட்டியின் துயரத்தை உலகக் கண்ணின் முன்னால் நிறுத்தத்தான் வேண்டும். அது வந்தனாக்கா அல்லது மதுராக்காவாய் இல்லாவிட்டாலும் கூட அதை வெளிப்படுத்தத் தான் வேண்டும்.

இவன் மனது தீவிரமாய் ஆவேசத்தோடு உன்னிய வேளையில் காதில் சபித்தது அந்தக் குரல்.

“சொல்லாதே, நீ சொல்லத் துணிந்தாயானால் உனது நாவு துண்டிக்கப்படும். உனது கரம் முறிக்கப்படும். உனது உயிர் பறிக்கப்படும். துணிவிருந்தால்... எங்கே சொல் பார்ப்போம்....”

அவன் கண் முன்னால் துப்பாக்கி முனைகளை நீட்டியபடி அரக்கர்கூட்டம் திரண்டு வருவது தெரிகிறது.

“சொல்லேல்ல... நான் சொல்லேல்ல....”

உரக்கக் கத்திய அவன் குரலின் நடுக்கத்தில் உள்ளிருந்து பாக்கியம் ஓடி வருகிறாள்.

“என்னடா தம்பி, உனக்கு என்ன நடந்தது...”

அழுகை தெறிக்கும் குரலில் வினவுகிறாள்.

“மெட்டி.... அம்மா.... மெட்டி...”


அவன் தாயின் மடியில் முகம் புதைத்து உரக்கக் கதற ஆரம் பிக்கிறான்.

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே எரியும் தீ

அம்புலி

டொம், டொம் டொமார்... தொடர்ந்து எறிகணைகள் வந்து விழுந்துகொண்டிருந்தன. 81மி.மீ, 82மி.மீ ஆட்டி என்று படையினர் வகை தொகையாய்ப் பீரங்கிகளை நிலைப்படுத்தி செறிவான சூடுகளைப் புலிகள் பக்கம் திருப்பியிருந்தனர்.

'ஷெல்' குத்தும் ஓசைக்குத் தலையைப் பதித்து பதுங்குகுழிக்குள் காப்பெடுத்தாள் நீலா. தொடர்ச்சியாக வந்தவையெல்லாம் அவளைக் கடந்தும், பக்கத்திலும் முன்னாலும் விழுந்து செம்பாட்டு மண்ணை கிளறி எறிந்துகொண்டிருந்தன. மழைக்குச் சேறாகிப்போன காப்பகழிக்குள் வாழையிலைகளைப் போட்டு அதற்குள் ஏறியிருந்தபடி சூழலை அவதானித்துக்கொண்டிருந்தது அந்தக் காவும் குழு அணி.

"கவனம் எல்லாரும் றெஞ்சுக்குள்ள இருங்கோ. ஒருத்தரும் தலையை வெளியில காட்ட வேண்டாம்"



படிப்பகம்

www.padippakam.com

சோபனா ஓடி ஓடி எல்லோரும் பத்திரமாக இருப்பதைப் பார்த்துவிட்டுத் தானும் காப்பகழிக்குள் நின்று வோக்கியில் வரும் தொடர்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

மூன்று நாட்களுக்கு முன் உரும்பிராய் நோக்கி முன்னேறி வந்த படையினரை மறித்துச் செய்த முறியடிப்புச் சண்டைக்குப் பின்பு அணிகளில் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப நீலாவும், கலையும் இன்னும் பத்துப்பேரும் அந்த இடத்திற்கு வந்திருந்த னர். நீண்ட நாட்கள் வேறு பிரிவுகளில் நின்றதால் சண்டைக்குரிய அணிகளில் காவும் குழுவில் அவர்கள் விடப்பட்டிருந்தனர்.

வந்து மூன்று நாட்களில் நல்ல சண்டை முட்டியது. அந்தச் சண்டைப் படைகள்தான் இப்போது எறிகணைகளைச் சரமாரி யாக வீசிக்கொண்டிருந்தன.

“ஏய் தலையைப் பதி”

நீலா கலைக்குப் பேசிவிட்டுத் திரும்ப இவர்களுக்குப் பக்கத் தில் எறிகணை ஒன்று வந்து விழுந்தது.

“நல்லவேளை வெடிக்கேல்லை. இல்லையெண்டா நீ அல்லது நான்தான்”

கலை சிரித்துக்கொண்டாள். சோபனாவின் வோக்கி இரையத் தொடங்கியது.

“ரெண்டு பேர் றமணியின் பொயின்ரடிக்கு ஸ்ரெச்சரோட ஓடுங்கோ. கவனம்”

சோபனா கூற காத்திருந்தவர்கள்போல் கலையும், நீலாவும் காப்பகழியிலிருந்து வெளியேறிப் பாய்ந்து அருகிருந்த ஸ்ரெச்ச ரையும் தூக்கிக்கொண்டு ஒருவர்பின் ஒருவராக இருநூறு மீற்றர் தூரத்திலிருக்கும் றமணியின் பொயின்ரடிக்கு ஓடிக்கொண்டிருந் தனர்.

கிட்டடியில் ராங்கிகளதும், பவள்களதும் உறுமல் கேட்டுக் கொண்டிருந்தது. வழியெங்கும் எறிகணைகள் விழுந்து வெடித்து மரங்கள் முறிந்து சிதறிக்கிடந்தன. கட்டிடங்களின் கொங்கிறிற்றுச்



படிப்பகம்

www.padippakam.com

சிதறல்கள் வழியெங்கும் இறைந்து கிடந்தன. பாதைகளிலும், காணிகளின் வேலிகளை ஏறிக்கடந்தும் ஓடிக்கொண்டிருந்த நீலாவின் 'பாட்டா' செருப்பு செம்பாட்டுச் சேற்றுக்குள்ளால் வர மறுக்கவே அதைக் கழற்றி எறிந்துவிட்டு ஒற்றைக்கால் செருப்புடன் ஓடினாள்.

கால் அந்தக் கலட்டித்தெருவின் கற்களில் இடறுப்பட்டு, வழியில் முறிந்துகிடக்கும் முள்முருக்கம் முட்களால் கீறுப்பட்டு எரிந்தது. ரமணியின் பொயின்ற் மோட்டார் பொயின்ற். மோட்டார் எறிகணைகள் புலிகளின் அணிகளுக்கு ஆதரவுச்சூடுகளைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருப்பதால் அந்தத் திசையை இனங்கண்டு படையினர் சரியான இலக்குப் பார்த்து எறிகணைகளை குவியப் படுத்தியிருந்தனர். நீலாவும், கலையும் இவ்விடத்திற்கு ஓடிவர முன்னுக்கிருந்த சண்டையணியிலிருந்து காயக்காரர்களையும் வேறு காவும் குழு அணியினர் தூக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

மோட்டார்ப் பொயின்ரில் கோகிலாவின் உடல் சிதைந்து கிடந்தது. தலையிலிருந்து இரத்தம் வடிந்து தலையெங்கும் சிவப்பாகிக் கிடந்தது. இரத்தவாடை குப்பென்று நீலாவின் மூக்கினுள் நுழைந்தது. குனிந்து கோகிலாவின் உடலைச் சீர்படுத்தினர் கலையும், நீலாவும். வெறுமனே தூக்கிவைக்க முடியாமல் இருந்தது அவளது உடல்.

சண்டைக்குப் போவதற்கான ஆயத்தமாக இடுப்பில் வரிந்து கட்டியிருந்த பச்சை 'பற்றிக்' சாரத்தை அவிழ்த்தாள் நீலா. அதனுள் கோகிலாவின் உடலை சேர்த்துக்கட்டி ஸ்ரெச்சரில் ஏற்றி தோளுக்குத் தூக்கினார்கள். கால்கள் ஓட்டம் எடுத்தன. பின்னுக்கிருக்கும் மருத்துவ ஆர்.வி. தாண்டி வாகனம் வரும் பாதைக்கு அரை மைலுக்கு மேல் சென்று வாகனத்துள் ஸ்ரெச்சரை ஏற்றிவிட்டு அங்கிருந்து வேறு ஸ்ரெச்சரை வாங்கி முன்னுக்கு ஓடினர்.

அன்று இன்னும் ஆறேழு காயக்காரரை மாறி மாறி அனுப்பிவிட்டு உரிய இடம் செல்ல எத்தனிக்கையில் நிலைகள் பின்னுக்கு நகர்ந்துகொண்டிருந்தன. முன்னரங்க நிலைகள் படையினரால் உடைக்கப்பட்டு, சண்டையிட்டவர்கள் காயப்பட்டும் வீரச்சாவடைந்தும் பின்னுக்கு அனுப்பப்பட, விரல்விட்டு எண்ணக் கூடிய



படிப்பகம்

www.padippakam.com

மீதிப்பேர் கட்டளைப் பணியகத்தின் கட்டளைக்கிணங்க அடுத்த நிலைக்கு வந்து நிலையெடுத்தனர். சண்டை செய்த களைப்பும், இழந்தவர்கள் பற்றிய நினைவுகளும் அகலமுன்னர் மண்வெட்டியும் துப்பாக்கியும் அவர்களது பணிக்காய்க் காத்திருந்தன.

காயப்பட்டவர்களைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தவேளை எறிகணைகள் விழுந்து வெடித்தாலும் நல்லவேளை கலைக்கும், நீலாவுக்கும் காயம்படவில்லை. அவர்களது அணியில் இரண்டு பேர் காயப்பட்டு பின் நகர்த்தப்பட்டனர்.

அன்று விடியற்காலையில் ஆறு மணிக்குத் தொடங்கிய அமர்க்களம் முடிய பொழுது சாய்ந்துவிட்டிருந்தது. காலையிலிருந்து பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்க நேரமில்லை. இனி அடுத்த 'செற்றப்' பார்த்து, வருகின்ற சாப்பாடுகளை முன்னிருக்கும் அணிகளுக்குப் பகிர்ந்தளித்து கொடுத்துவிட்டுவர எப்பிடியும் பத்து மணியாகும். இரவென்றாலும் ஓய்வெடுக்க நேரமில்லை. காலெல்லாம் வலித்தது. கீறல்கள்பட்டு காயப்பட்டிருந்தது. இன்று வலி தெரியாது. நாளை கால் தூக்க முடியாது. நீலா நினைத்துக் கொண்டாள். காயப்பட்டவர்களின் காலிலிருந்த ஒரு செருப்பை ஒருவாறு வாங்கிப்போட்டிருந்தாள்.

ராதா பக்கத்திலிருந்த கிணற்றிலிருந்து கானுக்குள் தண்ணீர் அள்ளி வந்தாள். நீலாவும், கலையும் தொண்டைக்குழி நிரம்பும் வரை தண்ணீரைக் குடித்தனர். பசி வந்ததாயும் இல்லை, வராததாயும் இல்லை. சாப்பிடவேண்டும் போலவும் இல்லை. இரத்த நெடி மூக்கினுள் இன்னமும் இருந்தது. கைகள் இரண்டிலும் இரத்தம் காய்ந்திருந்தது. உடைகளிலும் திட்டுத்திட்டாக இரத்தம் காய்ந்து கிடந்தது. வானம் நன்றாக இருட்டிவிட்டது.

இரவுக்கான தூரவீச்சு எறிகணைகளை 'சூரியக்கதிர் ஒன்று' படைகள் ஏவிக்கொண்டிருந்தனர். இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு அவை அவர்களைத் தாண்டி கோண்டாவில் சந்திக் கப்பால் எங்கோ போய் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன.

சோபனா எல்லோரையும் ஒன்றாக்கி புதிய நிலைகளில் காப்பகழிகளை வெட்டுவதற்குரிய மண்வெட்டிகளைப் பிரித்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொடுத்தாள்.

"ம்... இனி இவன் அடுத்த மூவ் எடுக்க இன்னும் நாலஞ்சு நாட்கள் செல்லும் அதுவரைக்கும் வெட்டவேண்டியதுதான்"

கலை சொல்லிக்கொண்டிருந்தாள். இருளின் கனத்த போர் வைக்குக் கீழ் அவர்களின் அணிகள் விழிப்போடு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அடுத்த நாள் காலை அணிகள் ஒன்றாக்கப்பட்டன. இழக்கப் பட்ட ஆட்தொகை நிரப்பீடு செய்யப்பட்டு புதிதாகக் குழுக்கள் பிரிக்கப்பட்டன. நீலாவுக்குப் புதிய ஒன்பது பேர் கொடுக்கப்பட்டு வோக்கியும், துப்பாக்கியும் கொடுக்கப்பட்டன. கலை சண்டை அணிகளோடு ஒருத்தியாக இணைக்கப்பட்டுவிட்டாள்.

"ஒருத்தரும் அங்க நிக்கப்போறன் இங்க நிக்கப்போறன் எண்டு கேக்காதேங்கோ. எல்லாரும் சண்டையிலதான் நிக்கிறியள். எல் லாரும் மாறி மாறி சண்டைக்குப் போகலாம். சண்டையில எல்லா வேலையும் சமமானதுதான்"

வாயை முதலிலேயே அடைக்குமாப்போல் பொறுப்பாளர் கதைத்துக் கொண்டிருந்தார்.

நீண்ட காலம் கலையோடு வெளியிலும் முதல் நாள் சண்டை யிலும் ஒன்றாயிருந்த நாட்கள் வெவ்வேறாக்கப்பட்டு விட்டன. இனி அவளை அடிக்கடி காண முடியாது. விழுந்து வெடிக்கும் எறி கணைப் புகையடங்கும் முன்பே கெக்கட்டமிட்டு சிரிக்க முடியாது. குழுத் தலைவியிடம் பேச்சு வாங்க முடியாது. நீலாவுக்கு மனது குறுகுறுத்தது. புதிய போராளிகளை ஒழுங்காக வழிநடத்த வேண் டிய பொறுப்பும் அவளுக்கு.

இனி கலையை உயிரோடு பார்ப்பேனா? மனது வலித்தது. சில வேளை காயப்பட்ட அவளையோ அவளது வித்துடலையோ நீலா தூக்கிச் செல்லக்கூடும். காலத்தின் கொடுமையைவிட இந்த நினைவு அவளை அதிகம் அலைக்களித்தது.

* * *



படிப்பகம்

www.padippakam.com

அடுத்த நகர்வை முறியடிக்கும் ஆயத்தத்தில் எல்லோரும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். வானத்தில் அடிக்கடி இரையும் சத் தங்களுக்கேற்ப காப்பெடுத்து பின்னர் ஒன்றாகி வேலை செய்து கொண்டிருந்தனர். அந்தப் பிரதேசத்திற்கான அணிகளைக் காட்டுவதற்கு வழிகாட்டியான கண்ணனின் பின்னே ராஜி, சபரி, நீலாவின் காவும் குழு அணிகள் சென்றுகொண்டிருந்தன. நீலா வின் அணி கடைசியில். அதிலும் நீலா கடைசியாகச் சென்று கொண்டிருந்தாள்.

"இது ரஞ்சனின் செக்ஷன் நிக்குமிடம். அந்தப் பத்தைக்கு அங்கால முரளியின்ர"

கண்ணன் எல்லோருக்கும் விளக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

சண்டையில் ஆண், பெண் என்று எல்லோருக்குமே சாப்பாடு, வெடிமருந்து, காயம், வித்துடல்கள் சுமக்கவேண்டிவரும். இப் போது நிற்கும் போராளிகளில் ஆரார் அடுத்த சண்டை முடிய இருப்பினமோ அவள் நினைத்துக்கொண்டாள். முரளியின் 'செக் ஷன்' இருக்கும் கடைசிக் காவலரண் அது.

காப்பரணை வெட்டிக்கொண்டிருந்தவர்களில் மண்வெட்டியில் மண்ணை அள்ளிப்போட்டுவிட்டு நிமிர்ந்த அவனைப் பார்த்து நிலைகுத்தியது அவளது பார்வை. கால்கள் நகர மறுத்தன. அவ னும் அவளையே சிறிது நேரம் இமைக்காமல் பார்த்துவிட அணி கள் நகர்ந்துகொண்டிருந்தன. அவளுக்குமுன் சென்று கொண்டி ருந்த யோகா அடுத்த வளவு தாண்டிப் போய்விட்டாள். கதைப்ப தற்கு அது நேரமில்லை. கதைக்கவும் அவளால் முடியாது நாலு காலில் அவளின் குழுவை எட்டிப்பிடித்துவிட்டாள் நீலா. மனம் மட்டும் அவனைச் சுற்றி வந்தது.

'ஹரி' அவன் எப்படி இங்கு வந்தான். வடமராட்சியில் வேறு நிர் வாகத்தில் அல்லவா இவ்வளவு நாளும் நின்றிருந்தான். நீலா வைப்போல் சூரியக்கதிர் ஒன்று சமர்க்களம் அவனையும் களத் துக்கு அழைத்திருக்க வேண்டும். எப்படியென்றாலும் அவளால் இனி ஒழுங்காகச் சாப்பிடவோ தண்ணீர் அருந்தவோ முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

அவள் அவனைக் காணாமல் இருந்த நாட்களும், காலமும் இப்போது அதிகரித்து விட்டிருந்தன. முன்பெனில் வீட்டில் ஒரு நாளைக்கு நாலைந்து தடவைகள் அவனைக் காணலாம். பேச லாம். பக்கத்து வீடுகளில் வசித்த அவர்களிருவரின் இதயத்தை யும் இணைத்துவைத்த காலம் போராட்டக்களத்தில் வெவ்வேறு திசைகளில் அவர்களைப் பிரித்து விட்டிருந்தது. நீலாவின் மனதில் ஏழு வருடங்களாகக் குடியிருக்கும் ஹரி அவளைவிட எட்டு வருடங்கள் மூத்தவன். தொண்ணூறாம் ஆண்டு தனது ஆதரவுப் பணியை முழுமையாக்க அவளிடம் சொல்லிவிட்டே அவன் இயக்கத்துக்குப்போக, அவனுக்குப் பின்பு அவனுக்கு மூச்சுக்கூட விடாமல் அவள் பயிற்சிக்குப்போக இடையில் பார்க்காமலும், பேசாமலும், அவனைத் தேடி அவளும், அவளைத் தேடி அவனும் போகாமலும் அவர்களுக்கும் இயக்கத்தின் சுயவிபரக் கோவைக் கும் தெரிந்த கதையாக அது உறைந்திருந்தது.

அவள் ஆகாயக் கடல் வெளியில் காயப்பட்டு விடுமுறையில் போக, அவன் பூவரசங்குளத்தில் பட்ட காயம் மாறி விடுமுறையில் வீடு வந்து போயிருந்தான்.

இனிக் கலையுடன் இவனையும் சிலவேளை தூக்கவேண்டி வரலாம். போராட்டத்தின் இயல்புகளில் ஒன்றாகிவிட்ட சாவும், விழுப்புண்களும் அவளைக் கலங்க வைக்கவில்லை. இருக்கி றானோ? இல்லையோ? அதை அவள் அறிவாளோ இல்லையோ இந்தச்சங்கதியை அறியமுடியாமல் தவிப்பதுதான் கடினமாக இருந்தது நீலாவுக்கு.

அணிகள் நகர்ந்து சென்று கோண்டாவில் டிப்போச்சந்தியை அடைந்துவிட்டன. அடுத்த 'செற்றப்பை' வெட்டிக்கொண்டு புதிதா கப் பயிற்சிபெற்ற பெண் போராளிகள் நின்றனர்.

* * *

யாழ். நகரப்பகுதிக்குரிய சண்டை நெருங்கிக்கொண்டிருந்தது. அரியாலைப்பக்கமாக படைகள் மேவி நகர்ந்து 'ட' வடிவத்தில் நகர்ப்பகுதியில் இருக்கும் புலிகளோடு சண்டையிட்டுக்கொண்டி ருந்தன. பலாலிப்பக்கமும், கொழும்புத்துறைப்பக்கமும், அது



படிப்பகம்

www.padippakam.com

போதாதென்று மண்டைதீவிலிருந்தும் படையினர் எறிகணை களை அனுப்பிக்கொண்டிருந்தனர். சுற்றிவர இராணுவம் நிற்க நடுவில் புலிகள். சூரியக்கதிரின் உச்சகட்ட நாட்களவை.

நீலாவின் அணி அந்தப் புளியமரத்துக்குக் கீழ் இருந்தது.

"இப்ப சாப்பாடு சண்டைபிடிக்கிற எங்களுக்கும், காயப்பட்டு மெடிக்சில நிக்கிறவைக்கும் மட்டும்தான்"

சாவித்திரி சாப்பாட்டுச் 'சொப்பிங்' பாக்கை கொடுக்கும்போது சொன்னாள். மரவள்ளி, கரட், வாழைத்தோட்டங்கள் என்று எல்லா வற்றையும் விட்டுவிட்டு, ஒன்றுமில்லாமல் ஓடிய மக்கள் சாப்பாட் டுக்கு அவலப்படும் காட்சி மனதுள் ஓடியது. மக்களும் வெளியில் நிற்கும் போராளிகளும் படும் இடப்பெயர்வு அவலத்தை நினைத் துக்கூடப் பார்க்க மறுத்தது இதயம்.

"அதைவிட நாங்கள் இங்க நிற்கிறது எவ்வளவோ மேல்"

சொப்பிங் பாக்கிலிருந்த பாணை அரைவாசியாகப் பிய்த்து பாணைக் கோறையாக்கி, இன்னொரு பையிலிருந்த குழம்புக் கறியை அதற்குள் ஊற்றி, பஞ்சுப்பாணை தொட்டுத்தொட்டு சாப் பிட்டுக் கொண்டிருந்தபோது உயிர் மீண்டும் வந்து ஒட்டிக்கொண் டது போலிருந்தது.

"ஆகா என்ன சுவையான சாப்பாடு"

இந்த நெருக்குவாரச் சண்டைக்குள்ளும் ஒரு நாளைக்கு ஒரு தடவையென்றாலும் வரும் கஞ்சியோ, பாணோ தேவாமிர்தமா கவே இருந்தது அவர்களுக்கு. பசித்த நாவுக்குத்தான் உணவின் சுவை நன்கு தெரியும். சாப்பிட்டு முடிவதற்கிடையில் கஜனி ஓடி வந்து,

"எல்லாரையும் சென். ஜோன்ஸ் கொலிஜுக்கு லைன்பண்ணி வரட்டாம்"

என்று கூறிவிட்டு ஓடினாள். சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதி யாக அவசர அவசரமாக எல்லோரும் தயாராகினர். நீலா எல்லா வற்றையும் சரிபார்த்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

"தமிழரசி நீ முன்னுக்குவா. வேகமாக ஓடவும் மாட்டாய்"

கட்டையாகவிருந்த குண்டுத் தமிழரசியை முன்னுக்கு விட்டு விட்டு வரிசையாய் ஓடிச் செல்பவர்களுள் கடைசியாய்ப்போனாள் நீலா.

பக்கத்து வீதிகளிலிருந்தும் ஆண், பெண் போராளிகள் அந்தப் பாடசாலை மைதானத்துக்கு ஓடிக்கொண்டிருந்தனர்.

"ஏதோ இறங்கி அடிக்கும் செற்றப்போல கிடக்குது"

மனது சொல்லிக்கொண்டது.

அந்தப் பாடசாலை வாசலை எட்டிப்பிடிக்க சற்று முன்னர் நீலாவின் அணிக்கு எதிர்த்திசையில் ஓடிக்கொண்டிருந்த ஆண் போராளிகளில் இறுகிய முகம், கட்டம் போட்ட பச்சை சேட், உரும்பிராயில் கண்ட அதே உடை. இது அவன்தான். விழிகள் சந்தித்து இனங்காண்பதற்கிடையில் நகர்ந்துவிட்ட அந்த நொடிப் பொழுதில் அவளுக்கு ஏற்பட்ட ஒரே ஆறுதல் அவன் இன்னும் உயிரோடிருக்கிறான். அவனைப் பார்க்க, பேச முடியாவிட்டாலும் அதுபோதும் அவளுக்கு.

எல்லோரும் போய் வாகைமரத்தின் கீழ் வரிசையாக இருந்த னர். பானு அண்ணை, பால்ராஜ் அண்ணை, விதுஷாக்கா எல் லாத் தளபதிகளும் அரியாலையை ஊடறுத்து உள்நுழையும் தாக் குதல் திட்டத்தில் மும்முரமாய் இருந்தனர்.

இறுக்கத்துடன் மூழ்கத் தொடங்கியது அன்றைய மாலைப் பொழுது.

* * *

அரியாலை ஊடறுத்த தாக்குதல், நாவலர் வீதிச் சண்டை யென்று நகர்ப்பகுதியில் நெருக்கமாக நடந்த சண்டைகளில் நீலாவுடன் கூட இருந்தவர்கள் பலர் இல்லை. கலையைப் பிரிந்த நாட்களின்பின் இரண்டொரு தடவை அவளைப் பார்த்ததற்குப் பின்பு இன்னமும் அவளைக் காணவேயில்லை. கொழும்புத் துறைப்பக்கம் நின்றதாக யாரோ சொன்னார்கள். இன்னமும்



படிப்பகம்

www.padippakam.com

அவள் உயிரோடிருப்பது ஏதோ நிறைவாகவிருந்தது.

அந்த நடு இரவைப் 'பரா' வெளிச்சம் பகலாக்கிக்கொண்டிருந்தது. மண்டைதீவு, கொழும்புத்துறை, யாழ். நகர்ப்பகுதிப் படையினர் மாறி மாறி எல்லாப் படைக்கலங்களையும் பாசையூர் கரையை நோக்கித் திருப்பியிருந்தனர்.

இத்துடன் புலிகள் ஒழிந்தார்கள், இல்லையென்றால் கடலுக்குள்போய் விழுந்தார்கள் என்று வானொலியில் புழுக விரும்பும் படைத்தரப்புக்கும் அரசுக்குமெதிராகச் சண்டை பிடித்தவர்கள் குருநகர் ஐந்து மாடிக்குள் பாதுகாப்பாக நின்றுகொண்டிருந்தனர். வலிகாமத்தை விட்டுப்போக மனமின்றி இறுகிக்கிடந்தன இவர்கள் மனங்கள். மண்டைதீவுக்காரனின் ஆர்.பீ.ஜீ. எறிகணைகள் கரையில் வந்து விழுந்துகொண்டிருந்தது.

கடற்புலிகளின் இழுவைப்படகுகளில் போராளிகள் ஏற, அவை கிழக்கரியாலைக்கரையில் போராளிகளைத் தரையிறக்கிவிட்டுத் திரும்பி வருவதும் போராளிகளை ஏற்றுவதுமாக இருந்தன.

"மாதங்கியின்ர குறுாப் வந்திட்டுதோ? ஏனின்னும் வரெல்ல"

"பின்னால வந்துகொண்டிருக்கினம்"

"நீலா கெதியாய் ஓடிப்போய் அந்தக் குறூப்பைக் கூட்டிவா"

பொறுப்பாளர் அவசரப்படுத்தினார். இதுவரை கரைக்கு அணிகளை ஒவ்வொன்றாய்க் கூட்டி வந்த நீலா ஓடிப்போனாள். இடையில் கஜனியுடன் மாதங்கியின் அணி வந்துகொண்டிருந்தது.

"எல்லாரும் வந்திட்டினம்"

சரிபார்ப்பு, ஒழுங்கமைப்பு என்று சில நிமிடங்கள் கரைய,

"விசு, உங்கட ஆட்களை ஏத்துங்கோ"

தளபதியொருவர் கட்டளையிட்டார்.

மகளிர் அணிகள் ஒவ்வொன்றாக ஏற, கடைசிப் படகில் நீலா, பூமகள், விதுஷாக்கா இன்னும் சிலர். படையெடுத்து அவர்களுக்



படிப்பகம்

www.padippakam.com

குப் பின்னால் வந்த நாய்க்கூட்டங்களின் ஊளையொலி கரையை நிறைத்தது. மனம் விருப்பமில்லாமல் அந்தக் கரையையும், ஐந்து மாடிக் கட்டடத்தையும் விட்டுப்பிரிந்துகொண்டிருந்தது. கரை வில கிக்கொண்டிருந்தது.

மண்டைதீவுக்காரனின் 'பராக்கள்' நடுவானில் ஒளிர்ந்து அணைந்துகொண்டிருந்தன. எப்பிடியும் கலை முதல் சென்ற ஏதாவது ஒரு படகில் சென்றிருக்கக்கூடும். நீலா நினைத்துக் கொண்டாள்.

ஹரி அவன் எங்கிருப்பான். இன்னும் வலிகாமத்திலா? தென்ம ராட்சியிலா? இல்லை வானத்திலா? இந்த ஏழு வருட நினைவுக ளில் ஒளிந்தும், முகங்காட்டியும், நேரில் சில நிமிடப்பொழுதுகளி லும் காணநேரிட்ட அவன் இருப்பானா?

படகின் ஆட்டத்திற்கு உப்புநீர் முகத்தில் எகிறித்தெறித்தது. எங்காவது ஒரு மூலையில் அவன் உயிருடனிருக்கவேண்டும். மனது நினைத்துக்கொண்டது. நீலா ஒருமுறை கரையை நோக் கித்திரும்பினாள். எறிகணைகள் இன்னமும் கரையில் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. படகுகள் தூரச்சென்று கொண்டிருந் தன. போராளிகளையும், வார்த்தைகளால் செதுக்க முடியாத அவர்களின் உணர்வுகளையும் சுமந்துகொண்டு படகு மற்றைய கரையை நோக்கி விரைந்துகொண்டிருந்தது.

**10-01-2004**

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# மௌனத்திரை விலக...

அலையிசை

தலையில் கனக்கும் சுமையால் கழுத்து நொந்தது சறோவிற்கு, மெதுவாகத் தடவினாள். வியர்வையில் மீன் வாசனை வீசியது.

சுமை பெருமூச்சாய் எழுந்து, அடங்கியது. எத்தனை வருடங்கள்? கணக்கிட்டுப் பார்த்தாள் மனதுக்குள். 'பன்னிரெண்டு. சின்னவனின் வயது'. சின்னவனின் நினைவுத் தூறலில் கணவன் கந்தையா வந்தான்.

கந்தையா. இப்போதும் அவனைப் பற்றிய எந்தச் சலனமும் அவளினுள் எழவில்லை. எப்படியோ வாழ்ந்தாயிற்று.

நினைக்கையில் வெப்பியாரமாய் இருந்தது. கந்தையாவை சறோ விரும்பினாளோ? இல்லை. வினா உணரும் அதே கணம் விடையும் அதுவே.



படிப்பகம்

www.padippakam.com

பதினாறு வயதின் ஆரம்ப வாசலில் அவளின் கனவுகள் ஏராளம். அதைப் பங்கிட உரிய உறவுகள் எதுவுமின்றி அவை மனக்கிடங்கினுள்ளே ஆழமாகப் பதிந்துவிடும்.

அவளது ஐயாவோடு தொழிலுக்குப்போகும் சின்னராசுவில் அவளுக்கு விருப்பம். சின்னராசுவிற்கும் அப்படியிருந்திருக் குமோ?

சறோ இப்பொழுதும் சின்னராசுவின் பார்வையை எண்ணிப் பார்ப்பதுண்டு. அன்று எப்படி மயிர்க்கால்கள் சிலிர்த்து, உடல் கூசியதோ! அதே போன்றுதான் இப்போதும் இருந்து கொண்டே யிருக்கிறது அவளிற்கு.

சொல்லாமல் புதையுண்டுபோன சறோவினுடைய முதல் காதல் அது.

ஐயா, நல்ல உழைப்பாளி, சிறந்த கடலோடி என்று கந்தை யாவைக் கட்டிவைக்க முடிவெடுத்தார். அவரது குடும்ப அரசாட்சி யில் பிழை, சரி கதைக்க எந்த உறவுக்கும் உரிமை இருந்த தில்லை.

இன்று உடலை எரிக்கும் வெயிலை போலதான் ஐயா கலியா ணக்கதை கதைக்க அன்றும் இருந்தது.

சறோ அடுப்படியில் அம்மாவோடு வெங்காயம் உரித்துக் கொண்டிருந்தாள். கடலால் வந்த ஐயா வலி பலகையை வைத்த வாறு சொன்னார்

“வாற வெள்ளிக்கிழமை முருகன் கோயிலை பெரியவளிற்கும், கந்தையாவிற்கும் சோறு கொடுக்கிறது”

அம்மா மௌனமாகத் தலையசைத்தாள். அம்மாவின் பதில் எப்போதும் இப்படித்தான். எந்த உணர்வுகளையும் வெளிக்காட்ட மாட்டாள்.

சறோ அழுதாள்.

வெங்காயம் உரித்ததால் அழுதாளா? அல்லது கலியாணம்



படிப்பகம்

www.padippakam.com

என்பதால் அழுகிறாளா? அம்மா அவளைப் பார்த்தாளே ஒழிய கேட்கவில்லை.

சறோவின் விருப்பமின்றி நடந்து முடிந்துவிட்டது.

கந்தையா! அவனது உதடுகள் எப்போதும் மூடியே இருக்கும். தேவையென்றால் அதிகாரத்தோடு ஒலித்தடங்கும் குரல். அவ்வளவுதான்.

கந்தையாவினால் அவளின் உணர்வுகளைப் புரியாமல், அதற்கு மதிப்புக் கொடுக்காமல் ஓரிரவில் அவலமாய் சறோவின் கனவுகள் சிதைக்கப்பட்டது.

அன்று தொடங்கிய பயணம்.

சறோவின் உணர்வுகள் அவளோடு மௌனப் போர் தொடுக்க, கந்தையாவின் செயல்களோ முரட்டுத்தனமாய் இருந்தது.

பெரியவன் பிறந்தான். அவள் விரும்பிப்பெற்ற வித்து அல்ல அந்தக் குழந்தை. அவளிற்குள் திணிக்கப்பட்டதில் உருவான உயிரை அவள் வெறுக்கவில்லை. அவ்வளவுதான்.

மனதினுள் மண்டிய துயரக் கோடுகளை அழிப்பதற்காய் பிறந்தவனாய் கருதினாள். வளர்த்தாள்.

காலம்தான் எப்படி மாறிவிடுகிறது?

எப்பவாவது அருமையாய் கடற்கரையில் சின்னராசுவைச் சந்திப்பதுண்டு. விழிகள் விரிய அவன் பார்க்கும் பார்வையின் கனதியை நொடிப்பொழுதே உணர்ந்து, அதன் வெப்பத்தால் சூழப்பட்டு, தலை தானாய் கவிழ நடப்பாள். பின்னால் அலைகள் குமுறும் அவளது உணர்வுகளைப்போல.

சின்னராசு கட்டிவிட்டான். காற்றோடு அவளை அடைந்த செய்தி அது. மனதுள் ஏதோ ஒன்று சறோவை விறாண்டியது.

எப்பவும் போல மௌனமே அவளுக்குத் துணையாய் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

பெரியவன் எடுத்து ஒரு அடி வைக்குமுன்பே பெரியவள். அவள் பால் மறக்க முன்னமே சின்னவன்.

மூன்று வாரிசுகள் வருமட்டும் அவள் முட்படுக்கையிதான் படுத்திருந்தாள்.

குடித்துவிட்டு நடை தளர, குரல் தளுதளுக்க வீடு வரும் கந்தையா கையில் அகப்படுபவைகளால் சறோவைத் தாக்கு வான். அது அவனது வெறிப்பசியாய் இருக்கும்.

உடல் வீங்கி, வலி எடுக்கும். கந்தையா கசக்கிப் பிழிவான் அவளை.

எல்லாம் முடிய அணையின்றி ஓடும் கண்ணீரைத் துடைத்த படி, முற்றத்துக் குளிரில் படுத்திருக்கும் குழந்தைகளிடம் ஓடு வாள்.

பசியாலும், பயத்தாலும் சுருண்டு படுத்திருக்கும் பிள்ளை களை வாரி அணைப்பாள்.

அப்போதும் அவள் உணர்வுகள் மௌனமாகியிருக்கும்.

கடல் பிளந்து அதிர்ந்து அடுத்தடுத்து கந்தையா, சின்னராசு என்று சறோவின் உறவுகள் சிதைந்து கரையேறிய போதும் அவள் மௌனமாகவே இருந்தாள்.

கந்தையா போனது அவளைப் பாதிக்காது விட்டாலும், சின்ன ராசு, வாழ்வின் வசந்த வாசலில் வண்ணாத்திப்பூச்சிக் கனவுகளை வரைந்த அவனின் மரணம், அவளை அவளினுள் உலுப்பியது.

அப்பவும் மௌனம்.

எதிர்காலம்? வீட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவது, எல்லாமே அவளின் முன் வந்து நின்றபோது? முடிவெடுத்தாள்.

மீன் கனத்த கடகத்தை தலையில் சுமந்து அவளது பொருளா தாரப் பயணம் தொடங்கியது.

இளமை விரிய, அவளின் நடையின் லாவகத்தை, மீன் வாங்



படிப்பகம்

www.padippakam.com

கும் சாக்கில் விழி விரிக்கும் பண்பற்ற பார்வைகளை நிறையவே சந்திப்பதுண்டு.

காசு தரும் போர்வையில் கையைத் தொட்டு, மீன் வாங்க பாக் நீட்டும் பாணியில் நெஞ்சில் முட்டியென எத்தனையோ வக்கிரங் களை நாளாந்தம் சந்தித்துக்கொண்டிருக்கிறாள்.

'சீ'... என்று, 'எடடா கையை' என்று, 'என்னடா'... என்று கன்னத் தில் கைகளால் அறையவோ என மனதினுள் எழும் உணர்வுகள் மீளவும் அவளோடு ஒன்றிப்போகும்.


வெப்பமேறிய மணலினுள் நடப்பதால் காய்ந்து உரமேறிப் போன பாதங்களோடும், நாளாந்த வாழ்வினுள் மௌனப் போர் தொடுக்கும் உணர்வுகளோடும் சறோ நடந்துகொண்டிருக்கிறாள்.

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# எல்லைக்கோடு

ஜெ. விஜயலக்சுமி

தமிழீழத்தின் தெற்கு எல்லைக் கிராமங்களில் ஒன்றுதான் மதுரங்குளம். இக் குளத்தின் கட்டின் மீது முதுர மரம் ஒன்று விசாலமாகக் காட்சி தருவதாலோ அன்றி இக் கிராமத்தில் குயில்கள் நிறைந்து மதுர கீதம் இசைப்பதாலோ இதற்கு மதுரங்குளம் என்று பெயர் வந்தது என்பது இன்னும் புலப்படாத வரலாறாகவே உள்ளது. அல்லது மருத நில விவசாயிகள் அழகு தொழில் விவசாயம் செய்வதால் மருதங்குளம் என்பது திரிபுபட்டு முதரங்குளம் என்று வந்ததோ என்றும் ஐயப்பட வேண்டியுள்ளது.

வானம் வழங்கும் நன்கொடையாம் மழைச் செல்வத்தை மதுரங்குளம் வாங்கி வைப்பதால், அங்கே மூன்று போக வேளாண்மையும் விளைந்து நெல் மணிகள் சிந்தும் கிராமமாகவும் விளங்கியது. எவ்வளவோ நாகரிக, விஞ்ஞான வளர்ச்சியை உலகம் சந்தித்த போதும்



படிப்பகம்

www.padippakam.com

மதுரங்குள மக்கள் இன்னும் கலை, கலாச்சாரம் சிதறாமலும், மாற்றான் கையை எதிர்பாராமலும் கூட்டுறவாகச் செயல்படுவது அப்பழந்தமிழ் கிராமத்துக்கேயுரிய சிறப்பம்சமாகும். மதுரங் குளத்து விரால் மீனை உப்பிட்டு, காயவைத்து, கருவாடு ஆக்கி னால் மாலைதீவு மாசிக்கருவாடு கைகட்டி நிற்கும். கொம்புத்தேன் எடுத்து வெம்பியழும் குழந்தையின் வாயில் தடவினால், அக் குழந்தை வெம்பியதை விட்டு விளையாடச் சென்றுவிடும். எருமை மாடு, பசுமாட்டில் பால் எடுத்து நெய்யாக்கினால் அது கைநிறை யப் பணம் தந்து அவர்களது கஷ்ரத்தைப் போக்கிவிடும். உப் பிற்கு மட்டும்தான் அவர்கள் நகரத்திற்குச் செல்ல வேண்டும். அடிவளவில் கோப்பி மரம் நட்டு அதன் விதையை பெட்டகத்தில் பூட்டிவைத்து, தேவைக்கேற்ப இடித்துக்கொண்டால் அவர்களுக் குத் தேயிலை தேவையில்லை.

இப்படியாகத் தம் தேவைகளைத் தாமே பூர்த்திசெய்து இல்லை என்பது இல்லை என்று தமிழ் மக்கள் வாழ்ந்த அந்தப் பூர்வீகத் தமிழ் கிராமத்தில்தான் கணபதியும், காந்திமதியும் பிறந் தது முதல் வாழ்ந்து இல்லறம் நடத்தினர். அவர்களது இல்லற வாழ்வின் இனிய நற்பேறாய் கிருத்திகா என்ற மகளும், கீர்த்திகன் என்ற மகனும் அவதரித்தார்கள். க, கா என்று அவர்களது பெயர் கள் அமைந்துவிட்டதால் கி, கீ என்ற எழுத்துக்களில் பிள்ளைக ளுக்குப் பெயரிட்டு உயிர் மெய் எழுத்து முன் நான்கையும் தங்கள் பெயரில் பதித்துக்கொண்டனர். தம்மைப்போல் கல்வியறிவு இல் லாதவர்களாகத் தம் பிள்ளைகளும் இருக்கக்கூடாது என்பதற்காக இயன்றவரை கஷ்ரப்பட்டு அவர்களைக் கல்விக்கூடத்திற்கு அனுப்பினான் கணபதி.

அது இந்திய இராணுவம் தமிழீழத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் நாயாக அலைந்து திரிந்து, பேயாகத் தமிழனின் குருதி குடித்த காலம். அது மட்டுமா? ஈழத்தமிழனின் போக்குவரத்து, பொருளாதாரம், கல்வி என்பவற்றைச் சீரழித்த காலமும் தான். தமிழர் பிரச்சினையைத் தீர்க்கிறோம் என்று கூறி, அமைதிப்படை என்று அணிவகுத்து வந்து, இறுதியில் புலிகளைப் பிடிக்கிறோம் என்று சொல்லி, தமிழ் மக்களைச் சித்திரவதை செய்து தமிழ் மண்ணை வதைகூடமாக மாற்றி ஒவ்வொரு தமிழ் மகனையும்



படிப்பகம்

www.padippakam.com

புலியாக்கிய நேரம். இதற்கு மதுரங்குளம் மக்கள் மட்டும் விதி விலக்கா? பரம்பரையாக வேளாண்மை செய்து வந்த வயல் நிலத்தில் இந்திய இராணுவம் முகாமிட்டிருந்ததால், அவ்வூர் மக்கள் தமது தொழிலை இழந்தனர். செய் தொழில் விட்டு வேறு தொழில் செய்வது இலேசான காரியமா? அவர்கள் வாழ்வில் பட்டினி விளையாடியது. ஐம்பத்தெட்டு, எழுபத்தேழு, எண்பத்து மூன்று என்ற இனக் கலவரங்களில் அடிபட்டு வந்த தமிழ் மக்களை வரவேற்று உபசரித்த வன்னி மண் மக்கள் இன்று தம் வயிற்றுப் பசி தீர்க்க நகரத்திற்குச் சென்று தம்மால் இயன்ற கூலிவேலை செய்யத் தொடங்கினர்.

தான் பெற்ற குஞ்சுகளை வளர்க்க கணபதியும் மேசன் வேலை செய்ய வீட்டை விட்டுப்புறப்பட்டான். முட்டாள் என்ற பதவியில் அமர்ந்து அன்றாடம் நூறு ரூபாய் சம்பாதித்து அவர்களது வாய், வயிற்றைக் கழுவினான். அப்படியானால் ஏனைய செலவிற்கு? அவனது கடுமையான உழைப்பின் நிமிர்த்தம் மேசன் என்று பதவி உயர்த்தப்பட்டதால் நகரத்தில் உள்ள நகைக்கடைக்கார நடராசா முதலாளியின் கடை வேலையை ஒப்பந்தம் எடுத்துச் செய்தான்.

வழமைபோல் அவன் வேலை செய்துகொண்டிருந்த சமயம், இந்திய இராணுவம் புலி வேட்டையில் இறங்கியுள்ளதாம் என்ற செய்தி அவன் வேலை செய்யும் இடத்திலும் பரவியது. தெருவெல்லாம் மக்கள் சுறுசுறுப்படைந்து விரைவாகப் போவதும் வருவதுமாய் இருந்தனர். கணபதிக்கும் பயம்தான்.

"வந்தால் வரட்டும். மேசன் கறண்டியைக் கொடுப்போம், அவர்களும் எமக்கு உதவி செய்யட்டும்"

என்று மற்றத் தொழிலாளர்களுக்குக் கூறினான்.

"ஐயோ உதவி வேண்டாம் உபத்திரபம் இல்லாட்டிக் காணும்"

என்று மற்றத் தொழிலாளி கூற, எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர். சிரிப்பொலி அடங்க முன் திடுதிடு எனச் சத்தம் கேட்டது. கணபதி திரும்பிப்பார்த்தான். இரு இளைஞர்கள் ஓடி வந்த



படிப்பகம்

www.padippakam.com

னர். வந்தவுடன் ஒருவன் கையிலிருந்த மேசன் கரண்டியைப் பிடுங்கித் தான் வேலை செய்தான். மற்றவன் தான் வைத்திருந்த கைப்பையை கணபதியிடம் கொடுத்துவிட்டு சீமெந்துக் கல வையை வாளிக்குள் அள்ளினான். கைப்பையைத் திறந்து பார்த் தான் கணபதி. உலகமே சுற்றுவது போல் இருந்தது அவனுக்கு. நிலைமையை விளங்கிக்கொண்ட கணபதி அமைதியானான். கண் இமைப்பதற்குள் ஐந்தாறு இந்தியச் சிப்பாய்கள் கட்டிடத் துக்குள் புகுந்தனர். அதில் ஒருவன்,

"தம்பி... எல்ரீரீ இருக்கா எல்ரீரீ.."

என்று கேட்டான். மற்றொருவன்

"இந்தப்புறத்தால ரெண்டு எல்ரீரீ பசங்க ஓடியாந்தாங்க. இப்படி வந்தாங்களா"?


என்று கேட்ட வண்ணம் வெளியே சென்றான். கணபதியின் இதயத்துடிப்பை வென்றுகொண்டு இந்தியச் சிப்பாய்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறினார்கள்.

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# கௌரவம்

## வன்னிமகள்

அயலில் உள்ள கராச்சின் ஜெனரேற்றர் இரைந்து கொண்டிருந்தது. காவல் கொட்ட கையில் மூன்றுதரம் மணி அடித்து ஓய்ந்தது. தூரத் தூரவாகச் சேவல்க ளும் கூவின. இராப் பறவைகள் இறக்கைகளை அடித்து நீண்ட ஒலியை எழுப்பி தங்கள் இருப்பி டத்துக்குச் சென்றுகொண்டிருந் தன. பட்டியில் நின்ற 'செங்காரியும்' கன்றுக்கு பாலைக் கொடுப்பதற் குத் தயாராகக் கத்தியது. பாயில் கிடந்தபடி பார்வதியம்மா எல்லா வற்றையும் கேட்டவண்ணமிருந் தாள். இன்னும் ஒரு அரை மணி நேரம் கிடப்பம் என மனம் சொன் னது. உருண்டு புரண்டு படுத்தாள்.

"ம்.. இண்டைக்கு அரைக் கொத்து மா கூடவல்லோ போட்ட னான். நேற்றுப் பொழுது படத்தான் பொன்னுத்துரையண்ணர் வந்து தனக்கு இருபத்தைந்து சோடி அப் பம் தரச்சொன்னார்"



படிப்பகம்

www.padippakam.com

என மனதில் எண்ணியவள் ஏதோ ஒரு உந்துசக்தி பிறந்தாற் போல் எழுந்தாள். வாயில் கரியைப்போட்டு பல் துலக்கி, முகம் கழுவி, பனித்துளிகள் சிதறி முத்துக்களாய் உருண்டு மலர்ந்து கொண்டிருந்த செவ்வரத்தை, ரோசா, நந்தியாவட்டை மலர்க ளைப் பறித்து படத்துக்கு வைத்துவிட்டு, தனது கணவன் சிவசம்பு வின் படத்துக்கும் வைத்துவிட்டு வந்து, அடுப்புச் சாம்பலை அள்ளி துப்பரவு செய்து, அடுப்பை மூட்டி தண்ணீரைக் கொதிக்க வைத்தாள். பாத்திரங்களைக் கழுவினாள்... கொதிக்கக் கொதிக்க நல்ல தேநீர் ஊற்றினாள் குடிக்க...

“அம்மா... அம்மா..... என்ன நல்லா நேரத்துக்கு எழும்பிற்றி யள்”

என சிணுங்கியவாறு வந்தாள் மூத்தவள் கமலி. “அதுபிள்ள பொன்னையா அண்ணையும் இருபத்தைஞ்சுசோடி அப்பம் தரச் சொன்னவர்... பின்ன அரைக்கொத்தரிசிமா கூடப்போட்டனான்... நீ போய் படு பிள்ள.. நான் எல்லாம் செய்வன்..” என்றவள்

“இந்தா கமலி தேத்தண்ணி குடி”

எனக் கொடுத்தாள். தேநீரை வாங்கி அதன் புதுச்சுகத்தை அனுபவித்தபடி குடித்தவள்,

“அம்மா கொஞ்சம் எழுத்துவேலை கிடக்கு. செய்துபோட்டு வாறன்.... இண்டைக்கு ரீம் வருகுது..” என்று சொல்லியவண்ணம் விரைந்து சென்று...

“நீ ஆறுதலாய்ப் படிமோனை”

என்று கூறியவாறு மகளை அனுப்பிவிட்டு தேநீரை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தாள். உடம்பிற்கும் மனதிற்கும் கணகணப்பாய், தெம்பாய் புத்துயிருட்டி புதுவேகமளித்தது.

தேங்காய்களை சிதறாமல் பக்குவமாய் உடைத்து, தும்புக ளைத் துப்பரவாக்கி மிகவும் வேகமாய், சொட்டு விழுத்தாமல், மெல்லிய பூக்களாய்த் துருவியவண்ணமிருந்த பார்வதியம்மா வின் மனதை கடிவாளமில்லாத அந்த மாயைக் குதிரைகள்



படிப்பகம்

www.padippakam.com

எங்கோ பல மைல் தூரத்திற்கு அழைத்துச் சென்றன. மனதின் மேடு பள்ளங்களுக்கேற்றவாறு அந்த மாய மனக்குதிரை பாய்ந்து சென்றுகொண்டிருந்தது.

அப்ப நான் ஒன்பதாம் வகுப்புவரையும் படிச்சுக்கொண்டிருந் தன். பத்தாந்தரம் படிக்க வெளிக்கிட, அம்மாவுக்கு புற்றுநோய் வருத்தமெண்டு ஐயா அம்மாவை அங்கும் இங்கும் எண்டு கொண்டுதிரிய, நான் படிப்பை விட வேண்டி வந்திட்டுது. அப்பத்த ஒன்பதாம் தரப்படிப்பு இப்பத்த ஏ.எல் இற்குச் சரி. இப்படி என்ர காலம் போட்டுது.

அதுக்கிடையில புறோக்கர் மயில்வாகனத்தார் வீட்ட வந்து அம்மாவின்ர வருத்தத்தைக் காரணம் காட்டி அம்மா ஐயாவைக் கரைச்சல் பண்ணி, பொய் புரட்டுக்களைச் சொல்லி, என்னை தண்ணிச்சாமி சிவசம்புவுக்குக் கலியாணம் கட்டி வச்சினம். பிறகென்ன கலியாணம் செய்து மூண்டு நாலு மாதம்வரை ஏதோ நல்ல மனுசனாய் இருந்தார். பேந்து கொண்டதே கோலம் எண்டு சாராயத்தால முகம் கழுவிப்போட்டு, புனஸ்காரங்களெண்டு தொடர்ந்து, சட்டி பானை நொருங்கல்கள் வரையும் போகும்.

இந்தக் காலப்பகுதியில்தான் மூத்தவள் கமலியும் பிறந்தாள்... ரெண்டு வருசத்தால கவிதரனும், அடுத்த வருசத்தில கடைசியாக கவிதாவும் பிறந்தாள்.

மூன்று பேரையும் வளர்க்கிறதில பெரியபாடுபட்டன். எவரு டைய உதவியும் எனக்கில்லை. என் கைதான் எனக்குதவி. எனக்கு ஐயா அம்மா எல்லா நகையளும், காசும், காணியும், வீடும், மாடுகளும் தந்தவை. நகையள் எல்லாம் ஒவ்வொன்றாய் பறிபோனது சிவசம்புவிடம். பறிச்சிக்கொண்டு போன நகைகளை ஆப்பிட்ட விலைக்குக் குடுத்திட்டு குடிக்கூட்டத்துடன் சேர்ந்து நிதானம் இழந்த குடிதான். இப்படியே காசும், நகையும் வீணாய் பிரயோசமில்லாமல் கரைஞ்சு... கடைசியா என்ர பதினொரு தங் கப்பவுண் கொடியும் பறிபோனது. சிவசம்பரும் கொஞ்சம் கொஞ் சமாய் செத்துக் கொண்டிருந்தார் என்பதையும் நான் அறிந்தேன்... அவரவர் தேடியதை அவரவர் தானே அனுபவிக்கவேணும். ஐயா என்ர அவலத்தைப் பார்த்து மிகவும் வேதனைப்பட்டார். என்ர



படிப்பகம்

www.padippakam.com

வெறும் கழுத்தப் பாத்திட்டு திருப்பி அஞ்சு பவுணில ஒரு கொடி செய்து தந்தார். நான் அதை ஒருத்தருக்கும் தெரியாமல் வீட்டுக்க ஒளிச்சு வச்சன். ஒருநாள் வீட்டுக்க வெறியில போன மனிசன் சாமான் சக்கட்டுக்களைக் கவுட்டுக் கொட்டி பெரிய அநியாயம் செய்தபோதுதான் நான் ஒளிச்சு வச்சிருந்த கொடி கையில அம் பிட்டுட்டுது... அண்டு பெரிய பூகம்பம்....

“எடியேய் இஞ்சால வாடி... எந்தக் கள்ளப்புருசன் அதைத் தந் தவன்ரி.....? எவனடி இஞ்ச வாறவன்...?”

எண்டு தேவையில்லாத கதைகளைக் கதைத்து... எனக்கு அடியடியெண்டு அடிச்சு முறிக்க... எனக்கு ஆத்திரம் தாங்க முடி யாமல் அண்டு முதல் தடவையா...

“டேய் சிவசம்பு... எல்லாத்தையும் அழிச்சிற்ர... என்ர கோலத்த கண்ணால பாக்க ஏலாம ஐயா கடைசியாச் செய்துதந்த சொத்து... அதை அழிக்காதையடா.... தாடா...”

என்று உரக்கக் கத்தினேன். எனக்கு வயித்தில காலால உதைஞ்சதுதான் தெரியும்... கண்விழித்துப் பார்த்தபோது பிள் ளையள் மூண்டும் என்னைச் சுத்தி பயப்பீதியுடன் அழுதுகொண் டிருந்தார்கள்... அவர்களைச் சமாதானப்படுத்தினேன்... எனது வேதனையை என்னுடனேயே வைத்துக்கொண்டேன்... அன்று பொழுதுபட பொன்னுத்துரை ஓடிவந்து தகவல் சொன்னான்.. சிவசம்பர் கள்ளுக்கொட்டிலால வரேக்க பிள்ளையார் கோவிலடி தெருவில விழுந்து செத்துப்போனார்.

ஏனோ அவர் செத்துப்போனார் என்றது உண்மைதான். என் மனம் வேதனைப்பட்டது என்பதும் உண்மைதான். ஆனால் வாய் விட்டு குழறியழுது ஒப்பாரி சொல்லி ஓலமிட என் மனதிற்குத் துணிவுவரவில்லை. அயலவற்ர ஒத்துழைப்போட அவரின் கடமை கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பிள்ளைகளின் முகங்களி லெல்லாம் பயம், வேதனை, பிரிவு எல்லாம் இழையோடியிருந் தன. அயலவர்கள் பலவாறு கதைத்தனர்.

‘பாவம் பார்வதி ஒரு பொறுமைசாலி. இந்தக் குடிகாரனிட்ட



படிப்பகம்

www.padippakam.com

இருந்து எவ்வளவு கொடுமைகளை அனுபவிச்சிட்டாள். பிள்ளையெல்லாம் பேயறஞ்சதுகள் மாதிரி நிக்குதுகள். அதுகள் சின்னனுகள். என்ன விளங்கப்போகுது”

என்ற வார்த்தையெல்லாம் என் காதில் நுழைந்தவண்ணமிருந்தன. எல்லாம் ஆடி அடங்கி சிவசம்பர் இறுதிவிடைபெற்ற அந்தப்பொழுதில் எட்டுவயது கவியன் கொள்ளிக்குடத்துடன் முன்னே செல்ல என் மனம் ஓ...வென அழுது... தாங்கமுடியாமல் ஒப்பாரியாக மாறியது உண்மைதான்... ஆனால்.. நான் கலியாணம் செய்து பதினொரு வருடங்களில் எந்தவித சந்தோசங்களையும், நன்மைகளையும் அனுபவித்ததில்லை... ஆனால் என் தனிமையையுணர்ந்து இறைவன் மூன்று முத்துக்களை தந்தது உண்மைதான். சிவசம்பு சாகும்போது மூத்தவளுக்குப் பத்து வயது.... இன்று அவளுக்கு இருபத்தாறு வயது.

பதினாறு வருடங்களாக இந்த அப்பம்தான் எங்களை உயிர் வாழ வைத்தது. அதோட இரண்டு மூன்று மாடுகள்... கொஞ்சக் கோழி... மரத்தால விழுகின்ற தேங்காய், ஓலை, மட்டை.... இவ் வளத்துக்குள்ளையும் சிக்கனமா வாழுறம்..... கடவுள் புண்ணியத்தில பிள்ளையளும் படிப்பில... விளையாட்டில... சமூகச் செயற்பாட்டில... எல்லாத்திலையும் வலு சுட்டியள். மூத்தவள் கமலிக்கு போன வருசம்தான் பட்டமளிப்பு முடிஞ்சது. அவள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி.. இப்ப ஒரு மூண்டு மாதம்தான் ஆசிரிய நியமனம் கிடைச்சது... தம்பி கவி கா.பொ.த (சா.த) எடுத்துப்போட்டுத்தான் இயக்கத்துக்குப் போனவன். அவன் உயர்தரக் கல்வி படிக்கலாம். கணிதம் படிச்சிருந்தா கட்டாயம் ஒரு எஞ்சினியரா வந்திருப்பான்... இப்ப இயக்கத்தில மெடிசின் படிக்கிறான். கடைசி கவிதாவுக்கு இப்பதான் றிசல்ட் வந்தது. மருத்துவப்பிரிவுக்கு மாவட்ட மட்டத்தில முதலாம் இடத்தில சித்தியடைஞ்சிட்டாள். அவளின்ர படிப்புச் செலவை தமக்கை பாக்கிறன் எண்டிட்டாள்... அவளுக்கும் வயது இருபத்தாறாச்சு... தங்கச்சியப் படிப்பிக்கப்போறன் என்றாள்..

“அம்மா தேங்காய் துருவி முடிஞ்சுதோ? இஞ்ச விடுங்கோ நான் பாலைப் பிழியிறன்”



படிப்பகம்

www.padippakam.com

என்ற கமலியின் குரல் பார்வதியம்மாவை தடுமாற வைத்த தென்றாலும் தன்னை சுதாகரித்தவண்ணம்,

"வேணாம் மோனை, நீ போய் எழுது... நான் பக்கண்டு பாலைப் புழிஞ்சிடுவன்"

என்று முடிக்குமுன் கமலி பாலைப் பிழிந்தாள். முதலாம் பாலையும் ஏனையவற்றையும் பிறிதுபிறிதாய் பிழிந்து கொடுத்து விட்டு,

"சரி நீங்கள் உங்கட வேலையை தொடரலாம்"

என்று கூறியவள் மீண்டும் சென்று மேசை மீது அமர்ந்து வேக மாக எழுதத்தொடங்கினாள்.

பார்வதியம்மாவின் அப்பச்சூடு களைகட்டியது. படுத்துக் கிடந்த கவிதாவின் மூக்கினுள் நுழைந்த அப்பத்தின் மணம் தட்டியெழுப்பியது. வழக்கமாகவே அவள்தான் எந்தக் காலையில் எழும்பினாலும் முகம் கழுவி முதலில் அப்பம் சாப்பிடுவாள். அன்றும் அப்படியே செய்துவிட்டு பால்ப்பானையுடன் பட்டிக்குச் சென்றாள். அதற்கிடையில் கமலி எழுந்து வேலையை முடித்து விட்டு பம்பரமாய் செயல்படத் தொடங்கினாள். பாத்திரங்களைக் கழுவி, வீடு வாசல் முற்றம் கூட்டி... தண்ணீர் நிறைத்துவிட்டு குளிப்பதற்கு தயாரானாள். கவிதாவும் பால்பானையுடன் வந்து நான்கு அரைப் போத்தல்களில் பாலை நிரப்பி வைத்துவிட்டு, மிகுதிப்பாலை பானையுடன் வைத்துவிட்டு அடுப்படிக்குச் சென்று முத்துவின் கடைக்கு ஐம்பது சோடி, சுந்தரம் கடைக்கு ஐம்பது சோடி அப்பங்களை அடுக்கிவிட்டு கடைக்குக் கொண்டுசெல்ல வெளிக்கிட்டாள். அந்தத் தேநீர்க் கடைகளில் காலை ஆறு மணிக்கே வியாபாரம் தொடங்கிவிடும். சைக்கிளில் அப்பப்பெட்டி களை வைத்துக் கட்டிவிட்டு சிட்டாய்ப் பறந்தாள். பெரியவள் அதற்கிடையில் வெளிக்கிட்டுத் தயாரானாள்.

பார்வதியம்மா பொன்னையாண்ணைக்கு இருபத்தைந்து சோடி அப்பத்தை எடுத்து வைக்கவும் அவர் வரவும் சரியாகவி ருந்தது. அவர் அவற்றை வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்



படிப்பகம்

www.padippakam.com

துவிட்டு நகர்ந்தார். பார்வதியம்மா பணத்தைக் கொண்டு சென்று படத்தடியில் வைத்துவிட்டு வந்தார். படத்தடியில் வைக்கும் பணத்தை அவர் எந்தக் கஸ்ரம் வந்தாலும் எடுப்பது கிடையாது. சுருக்கமாகச் சொன்னால் அது ஒருவித சேமிப்பு. அப்பத்தைக் கொடுத்துவிட்டு வந்து சேர்ந்தாள் கவிதா. ஒவ்வொருநாளும் ஐந்து சோடி அப்பங்களை மேலதிகமாக எடுத்து வைப்பாள் பார்வதியம்மா. மகன் கவி வருவான். அல்லது மகனைப்போன்ற பிள்ளைகள் வருவார்கள்.

கமலி நேரத்தைப் பார்த்தாள். ஏழு அம்பத்தைந்தைக் காட்டி யது கடிகாரம்.

"அம்மா அப்பப்பெட்டியைத் தாங்கோ... இண்டைக்கு செவ் வாய் நற்சிந்தனை வாரம். எனக்குத்தான் ரேன்..." என்றாள்.

"நீ போ பிள்ள. தங்கச்சி கொண்போய் குடுப்பாள்"

"ஓமக்கா நீங்கள் போங்கோ நான் கொண்டுபோறன்"

என்றாள் கவிதா.

"சீ...சீ... எனக்கு என்ர அறிவாலயத்த ஒவ்வொருநாளும் பார்க்கவேணும். அப்பதான் என்ர மனம் பத்தியப்படும்... அதே மாதிரி நான் அரிவரி படிக்கேக்கயிருந்த கன்ரீன் சரசு அம்மாவை யும் பார்க்கவேணும். நான்தானே படிக்கேக்க இருந்து அப்பம் கொண்டுபோய் குடுக்கிறனான்... ஐஞ்சு நிமிசத்தில நான் குடுத் திட்டு படிப்பிக்கிற ஸ்கூலுக்குப் போயிருவன்..." என்றாள்.

"இஞ்ச பிள்ள நான் சொல்லுறதெண்டு கோபப்படாத... இவ் வளவு காலமும் நீ படிக்கிற பிள்ள... இப்ப படிப்பிக்கிற பிள்ள... நீ வடிவா உடுத்திக்கொண்டு அப்பப்பெட்டியையும் சைக்கிளில வைச்சுக்கொண்டு போறதெண்டா... ஊர் என்ன சொல்லும்....? எத்தினபேர் எத்தின கதை கதைப்பினம்..."

என்று சொன்ன பார்வதியம்மாவை இடைமறித்த கவிதா சொன்னாள்.

"ஓமக்கா.... அம்மா சொல்லுறபடி கேளுங்கோ..."



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் கூறுவதை அமைதியாகக் கேட்ட கமலி தொடர்ந் தாள்....

"அம்மா நீங்கள் எங்கள் மூண்டு பேரையும் வளர்க்கப் பட்ட பாடு எங்களுக்குத்தான் தெரியும். பதினாறு வருசமா காலையில தினமும் நீங்க நெருப்பில குளிக்கிறத பார்த்து எங்கட மனம் கொதிச்சு வேகும். இப்பிடியே நெருப்பிலையும் கடின உழைப்பி லையும் வெந்துதானே எங்கள இந்த நிலைக்கு ஆளாக்கினீங்க..."

"ம்... ஓம்மோனை அதுக்கென்ன இப்ப? என்னால இயலும் வரையும் அப்பம் சுடுவன். களவெடுக்கக்கூடாது. பொய் சொல் லக்கூடாது... சோம்பேறியா இருக்கக்கூடாது... வீண் பெயர் கேட் கக்கூடாது.... மற்றவற்ர காலில தங்கி நிக்கக் கூடாது... கெளரவமா இருக்கவேணும். இது என்ர வாழ்வின் அனுபவங்கள்"

"அப்பிடியெண்டால் அம்மா நான் அப்பப்பெட்டியக் கொண்டு போய் 'ஸ்கூல் கன்ரினில' குடுக்கிறதில என்ன வெட்கம்? இன்னும் தெளிவாகச்சொன்னால் நீங்கள் அப்பம் சுட்டு விக்கிற காசில நாங்கள் படிச்சு சமூகத்தில முன்னுக்கு வந்தது வெட்கமில்லையா அம்மா...."


"இஞ்ச பார் பிள்ளை. அது பெற்றோரிட கடமை. சரிசரி நீ அப்பப்பெட்டியக் கொண்டு போ பிள்ள... நேரம் போகுது.... கவனமாய் போபிள்ள.."

✦



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com

# மனிதத்துள்

சிவாஜினி சிவசங்கர்

"ஹாய் ஜீவிதா, என்ன லேற். மழையில நனைஞ்சுகொண்டு வாறாய். உள்ளுக்கு வா"

"இண்டைக்கு ஒரு அக்சிடன்ட் கேஸ். டொக்டரும் இல்ல. நான் தான் எல்லாம் செய்தது"

"வருங்கால சேர்ஜன் எண்டு சொல்லுறாய்"

"வர முயற்சிக்கிறன். அதுசரி ஏன் என்னும் கடை பூட்டேல்ல?"

"உன்னைப் பார்த்துக் கொண்டு நிண்டனான். சரி வா போவம்"

"விதுரன் இண்டைய கேஸ் பற்றி கேட்காமல் வாராய்"

"என்ன கோட்சிலையா வேலை செய்யிறாய்"



படிப்பகம்

www.padippakam.com

“உனக்கெடா என்னோட நெடுகப் பகிடிதான். ஒரு நாளைக்கு நல்லா வேண்டிக்கட்டுவாய்”

“தாய்க்குலமே உங்கட கேசைப்பற்றிச் சொல்லுங்கோ”

“தாய்க்குலத்தைப் பற்றி விளங்கிக்கொண்டால் சரி”

“அம்மா ஜீவிதா, இவ்வளவு காலமும் உங்களுக்கு இருக்கிற திமிர் காணாது எண்டு குளோனிங் பேபியையும் உருவாக்கிப் போட்டாங்கள். இனி எங்க எங்களைத் திரும்பிப்பார்க்கப் போறீங்க”

“என்ன விது சரியாய் குழம்பி இருக்கிறீங்கள் போல. உங்களைப்போல எங்களுக்கு வரட்டுக் கவுரவம் இல்லை. நாங்கள் மனிதர்கள். எங்களுக்குள்ளேயும் மனிதம் இருக்கு. குனிந்த தலைகள்தான் மாலையைப்பெறும்”

“ஏய் கிடங்கு, வடிவாய் ஓடு. ஏ-9 வீதியெண்டு நினைக்காத. அதுசரி அந்தக் கேசைப்பற்றிச் சொல்லு”

“கயசும் மோட்டபைக்கும் மோதி மோட்டபைக்கில வந்த இருபத்தெட்டு வயது கண்ணன் எண்ட போய்க்கு பெரிய காயம்”

“அண்டைக்கு எருமையில, கிபிரில வந்த யமன் கயசில வருது எண்டு வெள்ளிநாதத்தில வந்த ஜோக் உண்மையாத்தான் இருக்கு”

“என்ன விதுரன் நான் சீரியசா சொல்லிக்கொண்டு வாறன். நீங்கள் பகிடி விட்டுக்கொண்டு வாங்கோ”

“நீ தானே சொல்லுறனீ கதைக்கேக்க வாசிச்ச விடயங்களை என்னோட கதையுங்கோ எண்டு”

“உங்களைப் போய் பிரண்ட் ஆக்கினேன்”

“சரி கண்ணன்ர காயத்தைச் சொல்லு”

“ஆளுக்கு தலேல, உடம்பில, சொல்லேலாத இடத்தில எல்லாம் காயம். பாவம் என்ன செய்யிறது”



படிப்பகம்

www.padippakam.com

“எதிர்காலம் சிக்கலாய் இருக்குமோ?”

“சீ, அப்படி இல்ல. பாவமாய் இருக்கு. ஆள் பயப்பிடுது”

“நேசம்மா நீங்கள் எதுக்கும் கலங்கக்கூடாது. குளோனிங் இருக்கும் மட்டும் குழம்பாதையுங்கள்”

“சரி வீடு வந்திட்டுது, நான் போறன் விது”

“ஓ.கே. குட்நைட்”

* * *

“ஜீவிதா ஒரு கிழமை உன்னைக் காணாதது ஒரு வருசம் போல இருக்கு. யாழ்ப்பாணத்தில நிக்கேக்க புதுக்குடியிருப்பு நினைவில நிக்காதையெண்டு பிறன்ஸ் நக்கல் அடிப்பாங்கள்.... ஏய், நான் என்ரபாட்டுக்குச் சொல்லிக்கொண்டு வாறன் நீ பேசாமல் வாறாய். என்ன ஜீவிதா? என்னை ஒருநாள் சந்திக்காட்டாலும் துடிச்சுப்போயிடுவாய். ஆனா இண்டைக்கு ஏனோ தானோ எண்டு வாறாய் சொல்லன்”

“விதுரன் எனக்கு ஒருதரோடையும் கதைக்கப் பிடிக்கேல்ல”

“ஏன் ஜீவிதா? நீ கதைக்காமல் போக நான் விடமாட்டன். நாளைக்கு கடைக்குப் பொருட்கள் எடுக்க கொழும்புக்குப் போறன். அதோட எங்கட சுரேஷின்ர தங்கச்சிக்கு கலியாணவீடு. அவர்களுக்கு உறவு எண்டு சொல்லிக்கொள்ள எங்கட வீட்டுக் காரரைத் தவிர வேறு ஒருத்தரும் இல்ல. நான்தான் நிண்டு எல்லாம் செய்ய வேணும். வர ஒரு மாதமாகும். நீ மௌனமாய் வந்தா எப்பிடி? முதலில வா. வீட்ட போய்க் கதைப்பம்”

“விதுரன் வாங்கோ, உங்கட பிரண்ட் ஒரு கிழமையா ஒழுங்கா சாப்பிடுறதில்ல. என்ன சிக்கலெண்டு கேளுங்கோ”

“அக்கா, நான் யாழ்ப்பாணத்திலயிருந்து இண்டைக்குத்தான் வந்தனான். என்னைக் காணேல்ல எண்டுதான் சாப்பிடேல்லப் போல”



படிப்பகம்

www.padippakam.com

“விதுரன், நான் அவளுக்கு அக்காதான். ஆனா ஒரு பிரண்டாத் தான் பழகிறனான். என்னோட மனம் விட்டுக் கதைக்கிறாளில்ல. நீங்கள் நல்ல நண்பன். இவளோட கதைச்சு புத்திமதி கூறுங்கோ”

“ஓமக்கா. அதுக்குத்தான் வந்தனான். நீங்கள் வெற்றிலை பாக்கை எடுத்துத்தாங்கோ”

“ஏனப்பன் எத்தின வயது? வெத்திலை பாக்கு தேவைப்படு குதோ”

“அக்கா ஒரு மாதத்தில ஒருக்கா போட்டா வாய் துர்நாற்றம் வீசாது. எப்பாலும் இருந்திட்டுத்தான் போடுறனான்”

“ஜீவிதா நேரம் பொன்னானது. நேரத்தை வீணாக்காமல் நேரடி யாய் விசயத்துக்கு வா”

“விது நான் சொன்ன அக்சிடண்ட் கேஸ் என்னோட அக்சி டண்ட்”

“அப்படியெண்டா”?

“விருப்பம் கேட்டவர்”

“என்ன சொன்னீ”

“சொல்லேல்ல”

“ஏன்”?

“முடிவெடுக்கேலாமல் இருக்கு”

“எப்ப கேட்டவர்”?

“இண்டைக்கு”

“அப்ப ஏன் ஒரு கிழமையா மூட் அவுட் ஆயினீ”

“சுந்தரி மிஸ் யாழ்ப்பாணம் போனதால நான்தான் ஒரு கிழமையாய் நைட் டியூட்டி. பெரிய கேஸ் எண்டு ஒருதரும் இல்ல. ஆளுக்கு நித்திரையே வாறேல்ல. நான் கூடுதலான நேரத்தை அவருக்கு உதவுறதில கழிச்சனான்”



படிப்பகம்

www.padippakam.com

"அதுக்கென்ன நீ தாதிதானே"?

"அது சரி விது. எனக்கு அவரை நல்லா பிடிச்சிருக்கு"

"பிடிச்சா"?

"அவரொரு எழுத்தாளர்"

"எழுத்தாளரா? என்ன பேரில எழுதுறவர்"?

"அகிலன்"

"ஆ... அந்த அருமையான எழுத்தாளரா? மனிதத்தைப்பற்றி எழுதும் அந்த மகத்தான மனிதனை நான் தேடிக்கொண்டிருக் கிறேன். ஜீவிதா, உடல்நிலை எப்படி"

"பிரச்சினை இல்லை விது"

"சரி, உன்ர பிரச்சனையைச் சொல்லு"

"அப்படியான சிந்தனைகளை நான் எனக்குள் வைத்துக் கொள்ளாததால..."

"என்ன ஜீவிதா, சின்னப்பிள்ளை மாதிரிக் கதைக்கிறாய். வாழ்க்கை வாழ்வதற்கே. எப்பவும் தனிமை கொடுமையானதே. உனக்கெங்க விளங்கப்போகுது? ஏதோ நிறைய நிறைய வாசி. ஆனா... யதார்த்தத்தைப் புரியமாட்டாமல் நிற்கிறாய்"

"விது என்னைக் குழப்பாதையுங்கோ"

"ஜீவிதா, நான் சொல்லுறதைக் கேள். இயல்புகள் ஒத்துப் போனா, உனக்குப் பிடிச்சா, ஆளின்ர பின்னணிய விசாரி. நல்லா இருந்தா ஒக்கே பண்ணு. இல்லாட்டி உன்ர பணியைத் தொடர். இதுக்குப்போய் நீயும் குழம்பி எல்லாரையும் குழப்பிக் கொண்டு...."

"விது என்ன அறியாமலே எனக்கு அவர பிடிச்சிருக்கு. ஆனா... அவர் சொன்ன காரணம் பிடிக்கவேயில்ல"



படிப்பகம்

www.padippakam.com

“விதுரன் உங்கட அப்பா வந்து நிக்கிறார். போகவேணுமாம் உங்கள உடன வரட்டாம்”

“சரியக்கா வாறனெண்டு சொல்லுங்கோ. ஜீவிதா நான் போட்டு வாறன்”

* * *

“கண்ணா, நீங்கள் வந்து மூண்டு மாதங்களாய் போட்டுது. இனி மெல்ல மெல்ல நடந்து பழகுங்கோ. வெளிக்கிட்டு வாங்கோ சின்ன ஒரு வோக்கிங் போட்டுவருவம்”

“ம்..ம்...மிஸ்”

“மெதுவாய்.. மெதுவாய் நடந்துவாங்கோ”

“ஜீவிதா மிஸ், இந்தத் தென்னை மரங்களைப் பார்க்க எப்படி யிருக்கு”?

“நீங்கள் எழுத்தாளர் என்றபடியால் பல கற்பனைகள் வரும். எனக்கு எங்கட ஊர் ஞாபகம் மட்டும்தான் வரும். இப்பிடி ஒரு தென்னந்தோட்டத்துக்கதான் எங்கட வீடு. பலாலிச் சண்டையோட இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்திட்டம். வந்தோரை வாழ வைக்கும் வன்னி”

“அப்ப என்ன வாழவைப்பிங்களா மிஸ்”

“உங்களோட பெரிய தொல்லையாப் போச்சு. சரி நீங்க கேட்ட தற்கு ஓகே பண்ணுறன், ஆனா... மூண்டு வருசத்துக்கு என்னோட எந்தத் தொடர்பும் இருக்கக்கூடாது”

“என்னம்மா தண்டனை”

“கண்ணா என்ன நம்பி அக்கா நேசிங் படிப்பிச்சவா. அவா விற்கு நான் உழைச்சுக் குடுக்கவேணும். அதுவரைக்கும் இந்த உறவு என்னையும் உங்களையும் தவிர வேறு ஆருக்கும் தெரிய வேண்டாம். ஆனா... என்ர பிரண்ட் விது லண்டனுக்குப் போயிற் றான். அவனுக்கு மட்டும் எழுதுவன். அவன் ஒருத்தருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லமாட்டான்"

"நாங்கள் விரும்பிறது எண்டு தெரிஞ்சா அக்கா கோவிப் பாவா"?

"அப்பிடியில்ல எங்கட வீட்டில நான் சின்னப்பிள்ளை. பெரியம் மாட பிள்ளையள் மூன்று அக்காவையள் எங்களோடதான் இருக் கினம். நான் செல்லப்பிள்ளையாய் இருக்கிறன்"

"ஓகே. உங்கட கருத்தை ஏற்றுக்கொள்ளுறன். நானும் நிறைய இந்தத் தேசத்துக்குச் செய்யவேணும். மனிதத்தின் மகத்துவத்தை புரியக்கூடியமாதிரி ஏராளமான விசயங்கள எழுதவேணும். என் எழுத்துப்பணி எல்லை கடந்து, மாபெரும் உண்மையினை இந்த உலகத்திற்கு என் எழுத்துக்களால் துப்புத்துலக்கி காட்டப்போகி றேன். நான் இயல்பாகவே மலர்களையும் மழலைகளையும் நேசிக்கிறேன். மலர்களின் மகிமையையும் மழலைகளின் அழகை யும் எழுத்துக்களால் சொரியப்போகிறேன். திறமைசாலிகளை இனங்காட்டப் போகிறேன். அச்சமின்றி சுத்துமாத்துக்களை சுட் டிக்காட்டப்போகிறேன். மனித மனங்களின் மனச்சாட்சியின் விம் பத்தை விஸ்வரூபமாக காட்டப்போகிறேன்"

"கண்ணா உணர்ச்சிவசப்படாதேங்கோ. இண்டைக்குத்தான் நடக்கத் தொடங்கியிருக்கிறீர்கள். ஆரோக்கியம் பேணினால்தான் அறிவைச் சம்பாதிக்கலாம். அந்த அறிவால் அறியாமையாலும் மூட நம்பிக்கையாலும் சமூகக்கோட்பாடுகளாலும் கட்டுண்டு கிடக்கின்ற இந்த பிரபஞ்சத்தை புதுப்பொலிவு ஆக்குங்கோ. அதுக்கு நானும் பக்கபலமாக இருப்பன். சமூதாய சாக்கடையில இருந்து எல்லாரையும் வெளியேற்றுங்கோ. நிறைவடைகிறேன்"

* * *

"ஜீவிதா நானும் நீயும் சந்திச்சு இண்டையோட ஒரு வருசம் நிறைவு. இதோட எல்லாத்தையும் நிறைவு செய்யலாம் எண்டு முடிவெடுக்கவேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுட்டன்"

"என்ன கண்ணா"?



படிப்பகம்

www.padippakam.com

"வெரி சொறி. எங்கட அக்கா கனடாவில இருந்து குடும்பத் தோட வந்திருக்கிறா. நான்தானே அவருக்கு ஒரேயொரு தம்பி. என்னக் கலியாணம் செய்யச்சொல்லி சொன்னவா. நான் சின்னப் பிள்ளை சாதிக்க நிறைய இருக்கு எண்டன். சாதிக்கிறதுக்கும் கலியாணத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லையெண்டு தெளிவா விளங்கப்படுத்தினா. பிறகு எங்கட விடயத்தையும் சொன்னனான். உங்கட குடும்பத்தப் பற்றி விசாரிச்சவவாம். நாங்கள் இந்து. நீங்கள் கிறிஸ்தவர்கள். சரிப்பட்டு வராதெண்டு சொன்னா"

"மதத்தில என்ன, மனசிலதான் எல்லாம் இருக்கு எண்டு சொல்லியிருப்பீங்கள். அப்பிடித்தானே"

"...."

"என்ன பேசாமல் நிக்கிறீங்கள்"?

"மதத்த ஒருபடி சமாளிச்சாலும், சாதிய கடைசிவந்தும் ஏற்க மாட்டினமாம்"

"நீங்கள் என்ன சொன்னனீங்கள்"?

"என்னத்தச் சொல்லுறது? நான் சின்னப்பிள்ளையா இருக் கேக்க அக்கா கனடா போட்டா. அவா உழைச்சு என்னப் படிப்பிச் சவா. அப்பா இல்லையெண்ட குறையில்லாமல் வளர்த்தவா. அக்கான்ர சொல்ல என்னெண்டு தட்டுறது"?

"கண்ணா, நிதானமாத்தானா கதைக்கிறீங்கள்? சுத்திவளைத் துக் கதைக்காமல் நேர கதையுங்கோ"

"ஜீவிதா எங்கட லவ் எங்களுக்கும், உங்கட பிரண்டுக்கும் தானே தெரியும். பிரச்சனையில்ல. இப்படியே விடுவம்"

"கண்ணா, நான் உங்களிட்ட விருப்பம் கேட்கேல்ல. நீங்கள் தான் கேட்டனீங்கள். உங்கட காயத்த சொன்னனீங்கள். 'என்ர அந்தரங்க உடம்பிலகூடக் காயம். ஒரு தாய் தன்ர ஆண் குழந் தையை எப்படிக் குளிப்பாட்டி பராமரிப்பாளோ அப்பிடி நீங்கள் என்னப் பாத்தீங்கள். இதுக்கும் பிறகு எனக்கு இன்னொரு பெண் ணோட வாழேலாது எண்டு, நீங்கள் சொன்னதற்காகத்தான் நான்



படிப்பகம்

www.padippakam.com

விருப்பம் தெரிவிச்சனான். நான் ஒரு தாதி. என்னட்ட இப்பிடி பல கேசுகள் வந்துபோகும். ஆனா... இதுவரை உங்களைப்போல மனநிலை உள்ளவன் வரேல்ல. என்னால நீங்கள் இப்பிடியே இருந்திருவியள் எண்டு பயந்திட்டன். என்னால ஒரு எழுத்துப் போராளியை இந்தச் சமூகம் இழக்ககூடாதெண்டு நினைச்சு என்ர மனசை இழந்திட்டன்..."

"இப்ப என்ன ஜீவிதா? உங்களுக்கு விதுரன் இருக்கிறான். உங்களச் செய்வான்"


"கண்ணா, அநாகரிகமாக் கதைக்காதேங்கோ. விதுரன்ர புனித மான நட்பைப்பற்றிக் கதைக்க உங்களுக்கு அருகதையில்ல. நீங் களா மனிதத்தைப்பற்றி எழுதுறனீங்கள்? முதலில நல்ல மனித னாய் இருங்கோ. பிறகு உபதேசம் செய்யலாம். ஒவ்வொருவரது நல்ல வாழ்க்கையும் நல்ல சரித்திரங்கள். உங்களுக்கு எழுதத் தகுதியில்ல. உங்களைப்போல ஆட்கள் எழுதுகிறதாலதான் இந் தத் தேசம் இன்னும் விடியாமல் இருக்கு. உங்களுக்குள்ளேயே மனிதத்தைத் தேடினேன்? மனிதத்துக்குள் ஒளிந்திருந்த சிறிய மனிதனை... சீ... உங்களைச் சொல்ல இந்த உலகத்தில சொற் களே இல்ல. உங்களுடன் பழகினதுக்காக வெட்கப்படுறன். நான் காதலித்துத் தோற்றுப்போகேல்ல. ஏனெண்டால் நான் இன்னும் ஒரு மனிதனை காதலிக்கவில்லை. மனிதப் போர்வை போர்த்த முண்டத்துடன்தான் ஒரு வருசமாய் கதைச்சன். நான் வாழ்ந்து காட்டுவன். குட்பை"

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# புலிவாலைத் தேடி...

மலைமகள்

வாழ்வில் ஒரு கட்டத்தைக் கடந்து இன்னொரு கட்டத்துள் நுழையப்போகும் நினைப்பு புத்துணர்வைத் தந்தாலும், பதட்டம் இல்லாமலில்லை. காலை 6.00 மணி இலங்கை வானொலிச் செய்தியில் வித்தியாசமான தகவல்கள் ஒன்றும் இல்லைத்தான். ஆனால் ஒலிபெருக்கி திடீரென்று காற்றலையில் புகுந்து,

"இன்று ஊரடங்குச் சட்டம்"

என்று அறிவித்தால், ஆச்சரியப் படுவதற்கில்லை.

1988 டிசம்பரிலும் இதுதானே நடந்தது. வாழ்வில் ஒரு புதிய காலத்தை உருவாக்கும் கனவோடு க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றப் போவதற்கென வெண் சீருடையை அணிந்துவிட்டேன். எனது பாடசாலையே பரீட்சைக்களமாக அமைந்ததில் ஒரு நிறைவு. பழகிய சூழல். பயமிராது.



படிப்பகம்

www.padippakam.com

“நாடு முழுவதும் இன்று பரீட்சைகள் ஆரம்பமாகின்றன”

என்று 6.00 மணிச் செய்தி சொன்னது. ஆனால் காலணிகளுக்கு நூல் கோர்த்துக் கொண்டிருந்தபோது காதில் விழுந்த செய்தி வேறு.

“இன்றிலிருந்து மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம்”

அப்படியெனில் பரீட்சை? பகல் 12.45 மணிச் செய்திக்காக வானொலியருகே தவங்கிடந்தோம்.

“யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்திருப்பதால், இங்கு பரீட்சை நடைபெறவில்லை. ஏனைய மாவட்டங்களில் நடைபெறுகின்றது”

என்றது செய்தி. எங்களை நாசமறுப்பதற்கென்றே இவர்கள் வந்திருக்கிறார்கள். போன வருடமும் இதேபோலத்தான் எங்களைவிட ஒரு வருடம் மூத்த க.பொ.த. (சா/த) 1987 கல்வியாண்டு மாணவர்களுக்கும் நடந்தது. பரீட்சைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தார்கள். ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட மறுநாளே வடமராட்சி கல்விக்கோட்ட மாணவ, மாணவியர் முழுப்பேரும் சீருடையில் புறப்பட்டு, மந்திகைச் சந்தியிலிருந்த இராணுவத் தளத்தை முற்றுகையிட்டு அமர்ந்துவிட்டோம். உள்ளிருந்தவர்களை வெளியேவர விடவில்லை. வெளியிலிருந்து உள்ளே வரமுனைந்தவர்களையும் விடவில்லை. வாயிலின் உட்புறமும், எங்களின் முதுகுப் புறமுமாக ஜீப்புகளும், ட்றக்குகளும் உறுமின. நாம் அசையவில்லை. ஏறி மிதித்துக்கொண்டு போவதானால் போ என்று இருந்துவிட்டோம். கல்வித் திணைக்களத்தோடு கலந்துபேசி, பரீட்சைகளை மீள நடத்த உதவுவதாக வடமராட்சிக்குப் பொறுப்பானவர் என்று தனக்கு முத்திரை குத்திக்கொண்டிருந்த இந்திய அதிகாரி எமது அதிபர்களிடமும் வாக்களித்த பின்னரே வீடு திரும்பினோம்.

அவர்களுக்கான பரீட்சை 1988 ஏப்ரலில் நடந்தது. 1988 டிசம்பரில் எழுதவேண்டிய எங்களுக்கு இனி எப்போ நடக்கும்?



படிப்பகம்

www.padippakam.com

அதிபர்கள் கல்விப் பணிப்பாளர்களின் கடும் முயற்சியினால் பரீட்சை இதோ 1989 பெப்ரவரியில் நடைபெறப்போகின்றது. ஒழுங்கையைக் கடந்து நெடுஞ்சாலையில் இறங்கினேன். தோழிகள் தலையசைத்தபடி போனார்கள். வால் முளைத்தவர்களைக் காணவில்லையே. இன்று எந்த வாய்க்காலுக்குள் கிடக்கிறார்களோ?

முழங்கால்வரை மட்டும் சட்டையணிகின்ற எங்களின் கால்களைப் பார்பதற்கென்றே இந்தப் பரதேசிப் படையினர் வீதியை விடப் பள்ளமாக உள்ள இடங்களில் குந்தியிருப்பார்கள். மிதிவண்டிகளில் நாம் பயணம் செய்யும்போது காற்றுக்குச் சட்டை பறப்பது சாதாரணம். காற்றிலே சட்டைகள் உயருகின்ற அந்த ஒரு கணத்துக்காக பொழுது புலருமுன்னரே வந்து தவங்கிடப்பார்கள். இந்தக் காட்டேறிகளின் கண்களிலிருந்து எம் கால்களைப் பாதுகாப்பதற்காக சீருடைகளை அணியும் போது முழங்காலுக்கும் மேலே மூடுகின்ற காலுறைகளை அணிந்தோம்.

ஒரு சோழகக் காற்றுக் காலத்தில் காலை 6.00 மணிக்கு நடைபெறவிருந்த தனியார் வகுப்புக்காக தோழியும் நானும் 5.45 மணியளவில் அவரவர் மிதிவண்டிகளில் போய்க் கொண்டிருந்தோம். அவளுக்கு மூக்குச்சற்று நீளம்.

“கடலையெண்ணை மணக்குது. இண்டைக்கு ஏதும் கதைக்கட்டும். என்ன நடக்குதென்டுபார்”

புறுபுறுத்தபடி வந்தாள். என் கண்ணுக்கு எட்டியவரையில் எந்த நாயையும் காணோம். உயருகின்ற சட்டையை ஒற்றைக் கையால் பிடித்தபடி ஓடிக்கொண்டிருந்தோம். அடைக் கோழி கேருவது போன்று திடீரென ஒரு ஒலி பக்கவாட்டில் கேட்டதுதான் தாமதம். மிதிவண்டியை நிறுத்திய தோழி, முன் கூடைக்குள் தயாராக வைத்திருந்த ஒரு சோடி தேய்ந்த பாதணிகளை எடுத்து விசுக்கி எறிந்தபடி, எழுத்தில் வடிக்கமுடியாத ஏச்சொன்று ஏசினாள். அட! இவ்வளவு அருகே பாலத்தின் மறைவில் இவர்கள் இருந்ததை நான் கவனிக்காமல் போனேனே. தோழிக்கு கண்ணும் நீளந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

எப்போதோ நடந்ததை இப்போது நினைத்துச் சிரித்துக் கொண்டு பாடசாலை போய், சமூகக்கல்வி தேர்வுத்தாளை எழுதி விட்டு வீடு திரும்பினேன். வழியெங்கும் இராணுவம். வழமையா கவே அப்படித்தான். பாடசாலை தொடங்கும் நேரம், முடியும் நேரம் வாய் பார்க்கவென்றே வருவார்கள். எங்களோடு உரசுவதற் கென்றே அந்த நேரங்களில் காவல் உலாப் போவார்கள். ஆனால் இன்று வழமைக்கும் அதிகமாக.

இனித்தான் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பிக்கப்போகிறார் களோ? நெடுஞ்சாலையிலிருந்து எங்களுடைய ஒழுங்கைக்குள் மிதிவண்டியைத் திருப்பினேன். ஒழுங்கை முழுவதும் இராணு வம். எம்மவர் ஒருவரையும் காணோம். எங்கள் வீட்டுக்கு பக்கத்து வீட்டில் இராணுவம் குழுமி நின்றது. விடுதலைப் புலிகளின் சுதந் திரப் பறவைகள் அமைப்பின் முதலுதவிச் சிகிச்சை நிலையமாக வும், நூலகமாகவும் முன்னர் இருந்த அவ் வீட்டில் இப்போது காந்தி ஆச்சி மட்டும்தான் தனியாக இருக்கிறார்.

... ஆச்சி பாவம். இப்போது இவர்களின் காதல் வசனங்களைக் கேட்டுக் கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பார்.

என்னை ஒருவர் கைகாட்டி நிறுத்தினார். எங்கள் வீட்டுத் தலைவாசலைக் காட்டி,

“வீட்டுக்குப்போறன்”

என்றபடி வந்து கதவை இரண்டு, மூன்று தரம் தட்டினேன். பதிலில்லை.

“அம்மா”

என்று கூப்பிட்ட கணமே கதவு திறந்தது. உள்ளே வந்ததும், கதவைப் பூட்டிய அம்மா,

“இந்த நேரம் ஏன் வந்தனீ? எங்கையாவது நிண்டிருக்கலாமே” என்றார்.

“இவங்கள் எப்ப எங்க ரவுண்ட்-அப் பண்ணுவாங்கள் எண்டு ஆருக்கம்மா தெரியும்? அவங்களும் மறிக்கேல்லை. வந்திட்டன்.



படிப்பகம்

www.padippakam.com

ஏனாம் வந்திருக்கினம்?"

என்றேன்.

"இயக்கத்தின்ர சாமான் இருக்காம் எண்டு காந்தியாச்சி வீட்டில தேடினாங்கள். அங்க காணேல்லையாம் எண்டு இஞ்ச வந்து கேட்டாங்கள். எனக்கு இதொண்டும் தெரியாது எண்டு சொல்லி விட்டுச் சமைச்சுக்கொண்டிருந்தன். போட்டாங்கள்"

என்றார்.

எங்களுடைய ஆட்கள் இரவு ஏதோ இறக்கியிருக்கத்தான் வேண்டும். இல்லாமல் இவர்கள் வந்திருக்கமாட்டார்கள். எங்கள் வீட்டிலே இரவு படுத்திருந்தால், படகுகள் கரைக்கு வந்து இயந்திரங்கள் நிறுத்துவதும், பாரமான பொருட்களைத் தூக்கியபடி தொம் தொம்மென ஒழுங்கையால் ஆட்கள் போவதையும் உணர முடியும். நேற்று எங்கேயோ இவர்கள் பெண்ணொருவரின் கையைப் பிடித்து இழுத்தார்களாம் என்ற கதை பரவியதில், நாலைந்து வீட்டுப் பெண்கள் ஒன்றுசேர்ந்து, பெரியவர்கள் புடைசூழ வேறொரு வீட்டில் படுத்திருந்தோம்.

"அவங்கட சாமானை இவை கண்டுபிடிப்பினமோ? மயிரைப் புடுங்குவினம்"

அம்மாவின் புறுபுறுப்பு எனது ஐயத்தை உறுதிப்படுத்தியது. அம்மா இரவு வீட்டில்தான் நின்றார். எங்களோடு சேர்ந்து படுக்க வரவில்லை. அம்மாவுக்குத் தெரிந்திருக்கும். இடம்கூட சில வேளை தெரிந்திருக்கும். ஆனால் சொல்லமாட்டார். அம்மா சில வேளைகளில் ஒரு உயர்மட்ட இராசதந்திரிபோலவும், பழுத்த புலனாய்வாளர் போலவும் நடந்துகொள்வார். என்னால்கூட இனங்காண முடியாதளவுக்கு அம்மாவின் நடவடிக்கைகள் இருக்கும்.

1984ஆம் ஆண்டில் ஒருநாள் திடீரென எங்கள் வீட்டிற்கு வந்த சிறீலங்காப் படையினர் வீட்டையே தலைகீழாகப் புரட்டி எதையோ தேடினர். என்னவென்றாலும் செய்யுங்கள் என்பதுபோல அம்மா சாதாரணமாக நின்றார். ஒன்றையுமே கண்டுபிடிக்காமல் அவர்கள் போனபின், குட்டிமாமா மதில்பாய்ந்து வந்தார். தேநீர் தயாரித்



படிப்பகம்

www.padippakam.com

துக் கொடுத்துவிட்டு, நாற்காலியொன்றில் ஏறிய அம்மா சாப்பாட்டறை மேல்தட்டில் அடுக்கியிருந்த பித்தளைக் கிடாரங்களுக்கிடையே கிடந்த ஒரு கற்றை சுவரொட்டிகளை எடுத்துக் கொடுத்தார். மறுபடியும் மதில் பாய்ந்து போனார். வீட்டில் என்ன நடக்கின்றதென்று எனக்குக்கூடத் தெரியவில்லை.

அம்மா மதிலுக்கு மேலால் எட்டிப் பார்த்தார். வால் முளைத்தவர்களைக் காணவில்லை. தெருக் கதவைத் திறந்து தலைவாசலில் நின்றார்.

“இனி வந்திடுவாங்கள்”

என்றார். சிறிது நேரத்திலேயே நீலநிற எல்வ் ஊர்தியொன்று சீறியபடி ஒழுங்கைக்குள் வந்தது. அது அங்கே வரும்போதே காந்தியாச்சி வீட்டு இரட்டை இரும்புக் கதவை ஆச்சியும் அம்மாவுமாகத் திறந்துவிட, ஊர்தி உள்ளேயே போய் நின்றது. மடித்துக் கட்டிய சாறங்களுடன் குதித்து இறங்கிய எம்மவர்கள் வீட்டுக்குள்ளிருந்து வெவ்வேறு அளவுகளிலான பொதிகளைத் தூக்கித் தூக்கி ஊர்தியினுள் எறிந்தார்கள். ஒழுங்கையிலுள்ள எல்லாருமாகச் சுமந்து கொடுத்தார்கள். ஊர்தி சீறிப் புறப்பட்டது. காற்றைக் கிழித்தபடி அது இனிப் போகும்.

அதிர்ச்சியில் ஏங்கிப்போய் நின்றேன். தேடவந்த தேவாங்குகள் இந்த வீட்டிலே என்னதான் தேடிவிட்டுப் போகிறார்கள்? அவர்கள் தேடிவந்த பொருள் வீட்டுக்குள்ளேதானே இருந்திருக்கிறது.

போகவேண்டியவர்களின் கைகளுக்குப் பொருட்கள் போய்ச் சேர்ந்த நிம்மதியில் ஒழுங்கைப் பெண்கள் ஆறுதலாகவிருந்து கதைத்தார்கள். காதை எறிந்தேன்.

இரவு படகு வரப்போகின்ற செய்தி கிடைத்து கரைக்குப் போனவர்களில் அம்மாவும் ஒருவர். படகுகளை கரைக்கு இழுத்துவிட்டு, பொருட்களை இறக்கி, தூக்கி, அடுக்கி என்று கடும் வேலை நடந்திருக்கிறது. இன்றே இடம் மாற்றவுள்ள பொருட்கள் என்பதால் அவை ஆச்சி வீட்டில் நிலத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. பகல் பொழுது நெடுஞ்சாலையில் அந்நிய நடமாட்டம் அதிகமாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்ததில், ஒழுங்கைப் பெண்கள் விழிப்படைந்தனர். வெளி யாட்களுடைய கவனத்தை ஈர்க்காமல் அம்மாவும் சிலருமாக நிலத்தில் கிடந்த பொதிகளைத் தூக்கி கூரைக்கு இடையிலான வெளியில் சீராக அடுக்கி, நிலத்தை துப்பரவாக்கிவிட்டு, தத்தம் வீடுகளுக்குப் போய்விட்டதில், பொருட்கள் தப்பின.

அம்மா அடிக்கடி சொல்லும் வசனம் எக்காலத்துக்கும் ஏற்றது.


"புலியைப் பிடிக்கவும் ஏலுமோ? புலியின்ரை வாலைத்தான் இவை பிடிப்பினம்"

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# வழி

## அமரர் சந்திரா அற்புதலிங்கம்

கையிலிருந்த நாட் குறிப் பேட்டைத் திறந்தாள் கயல்விழி. அட்டையின் உட்புறம் செருகப்பட்டிருந்த புதிதாகவே இருந்த இருநூறு ரூபாய் தாளை மெதுவாக கையிலெடுத்தாள். நெஞ்சு விம்மியது. கண்கள் கலங்கி விடும்போலத் தோன்றிய போது நிமிர்ந்து வானத்தைப்பார்த்தவள் துணுக்குற்றாள்.

ஒற்றைப் பறவையொன்று மேற்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அந்தப் பறவை துணையிழந்த துயரத்துடன் பறப்பதாகவும் அதனுடைய தனிமைச்சோகம் தன்னைத் தாக்குவதாயும் உணர்ந்தாள். வழி தெரியாத குழந்தையாக மனம் தவித்தது.

ஒரு போராளியாக இயக்கத்தில் இணைந்து கொண்டபோது அவளுக்கு வயது பதினெட்டு. வீட்டில் கடைசிப்பெண். குழந்தைத் தனம் மாறாத குமரியாக, சுதந்திர



படிப்பகம்

www.padippakam.com

மனப்பான்மை மிக்கவளாக போராட்ட வாழ்க்கையைத் தொடங்கியபோதோ, இல்லை அதற்குப்பிறகு வந்த வருடங்களிலோ தனக்கென்று ஒரு துணை, தனிப்பட்ட வாழ்க்கை என்று எதையும் சிந்திக்கத்தெரியாத ஒரு பிறவியாகத்தான் இருந்தாள்.

தான் ஒரு கடல்புலி என்பதில் பெருமை இருந்தது. கடலைப் படிப்பதில் அதிக ஆர்வம் இருந்தது. கரையைவிட்டுப் புறப்பட்டால் பதுங்குவதற்கு இடமில்லாத கடல் சண்டைகளின் வேகம் பிடித்திருந்தது. அப்போதெல்லாம் பறவைகள் இரட்டையாகப் பறக்கிறது, தனியாகப் பறக்கிறது என்பதில் எதுவுமில்லாமல் அவளே உவமிக்க ஒரு பறவையாகத்தான் பறந்தாள்.

இடையில் நாவரசன் வந்தான். அவர்களுக்கு அடிக்கடி வகுப்பு எடுக்கும் ஒரு பயிற்சி ஆசிரியன்.

மூன்று வருடங்களின் முன் வழமையான பயிற்சி முடித்து வந்து எல்லோருமாகத் தேநீர் அருந்திக்கொண்டிருந்த ஒரு மாலையில் தான் பொறுப்பாளர் அழைத்து அந்த விசயத்தைச் சொன்னார்.

“சும்மாயிருங்கக்கா”

விசர்க்கதை கதைக்காதைங்கோ...

என்னால ஏலாது..”

என்பது போன்ற செல்லமான எதிர்க்கதைகளை புன்னகை மாறாமல் கேட்டுக்கொண்டிருந்த பொறுப்பாளர்,

“இஞ்ச பாருங்கோ கயல்விழி. இது திருமணக்குழு மூலமா உங்களைக் கேட்டிருக்கு. நாவரசனை உங்களுக்கு நல்லாத் தெரியும்தானே. நான் ஒண்டும் உடன சாதகமாவோ பாதகமாகவோ முடிவெடுக்கச் சொல்லி சொல்லேல்ல. உங்களுக்கு வயசு வந்திட்டுது.... முடிவு சொல்லுங்கோ. ரெண்டு கிழமை அவகாசம் தந்திருக்கு”

என்றுவிட்டுப் போய்விட்டார்.

வயசென்ன வயசு... இருபத்தாறு வயசானாலும் உளசார்ந்த



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கையைப் பொறுத்தவரையில் பதினெட்டாகத்தான் இருந்தது. ஒருமுறை வைத்தியரிடம் போனபோது வயது கேட்க பதினெட்டு என்றதும், கூட வந்தவள், "அது நீ இயக்கத்துக்கு வந்த வயது. இப்ப என்ன வயதெண்டு சொல்லு" என்றது நினைவு வந்ததும் சிரித்துவிட்டாள்.

ஒரு கண்ணாடியைத் தேடிப்பிடித்து தன்னைப் பார்த்தாள். எப்போதும் கடலடிப்பதால் ஒட்டிக்கொண்ட கறுப்பு நிறம். ஒட்ட வெட்டிய தலைமுடி. முதன்முதலில் வேறு யாரோவாகத் தோன்றி தன் முகத்தை ஆராய்ந்து கொண்டபோது ஒளிகொண்டு மினுங்கிய கண்கள் தாழ்ந்துகொள்ள நெஞ்சுக்குள் கலவையான ஒரு உணர்வு சுழன்றது. நாவரசனை நினைக்கையில் மெல்ல மெல்ல உள்ளத்தில் ஒரு மாற்றம்.

மூன்று வாரங்களின் பின் அவனுடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

அவன் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக்கொண்டிருந்தவளைப் பார்த்து யோசனையாக விருந்தான் நாவரசன்.

"என்னைப் பார்த்துக் கதைக்கமாட்டிங்களா"

ஒருமுறை நிமிர்ந்த பார்வை தாழ்ந்துவிட்டது.

"எனக்குச் சொல்லுறதுக்கு ஒண்டுமேயில்லையா"

"இருக்கு..."

"என்னது..."?

பேச்சு வரவில்லை. படபடப்பாக இருந்தது அவளுக்கு. ஏன்ரா இதற்கு ஒத்துக்கொண்டோம் என்று கூட இருந்தது.

அவனே தொடர்ந்தான்.

"எனக்கு உங்கள பிடிச்சிருக்கு. உங்களுக்கு..."

அவன் தயங்கியபோது,



படிப்பகம்

www.padippakam.com

சட்டென்று கேட்க நினைத்ததைக் கேட்டுவிட்டாள்.

"கலியாணத்துக்குப் பிறகும் நான் இப்படியே வேலைசெய்ய லாமா?"

அவனுக்குப் பாரம் குறைந்தமாதிரி இருந்திருக்க வேண்டும்.

"செய்யலாமே..."

என்றான் லேசான குரலில்.

"சண்டைக்குப் போகக்கூடாது எண்டு சொல்லுவீங்களா...?"

"சொல்ல மாட்டன்"

"எனக்குச் சாறி கட்டப்பிடிக்காது"

"பிரச்சினையில்ல"

"கலியாணத்துக்குப் பிறகு முடி வளர்க்கச் சொல்லக்கூடாது"

"சீச்...சீ... சொல்லமாட்டன்"

அவன் உற்சாகமானான்.

பிறகு உங்கட வீட்டுக்காரர் சொன்னா..."

"சீ...சீ... அவை சொல்ல மாட்டினம். அவைக்கு நான் கலியா ணம் கட்டினாலே போதும். அப்படியில்லையெண்டு அவை ஆசைப்பட்டால்..."

சற்று நிறுத்தி பரபரப்பாக இருந்த அவளைப் பார்த்தான்.

"அப்படி அவை ஆசைப்பட்டால் நான் வளர்த்துக்கொள்ளு றன்"

சிரிக்காமல் அவன் சொன்னபோது பக்கென்று சிரித்துவிட் டாள். இறுக்கம் தளர்ந்துவிட்டது. அவனை ஏறிட்டுப்பார்த்த அவள், சில வினாடி தாமதித்து அடக்கமாட்டாமல் சிரிக்க அவனும் சிரித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

"என்ன எனக்கு முடிவளர்த்தா எப்படி இருக்கும் எண்டு பாக்கிறீங்களா..."

அவள் பேசவில்லை.

"கயல்விழி உங்கள எனக்கு நெடுகத் தெரியும். உண்மையைச் சொன்னா உங்கள நான் நினைக்கத்தொடங்கி எவ்வளவோ நாளாச்சு... எனக்காக உங்கட நிலைப்பாடுகளை மாத்திக் கொண்டு என்னை அனுசரிச்சுப் போகவேணும் எண்டதெல்லாம் வேணாம். நீங்க நீங்களா இருக்கிறதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு. நேரான உங்கட பார்வை பிடிச்சிருக்கு. கள்ளமில்லாத உங்கட சிரிப்புப் பிடிச்சிருக்கு. எந்த விசயத்தையும் படக்கென்று விளங்கிக் கொள்ளுற கெட்டித்தனம் பிடிச்சிருக்கு. உங்கட சினேகிதிகளோட நீங்க பழகிற விதம் பிடிச்சிருக்கு..."

அவன் சொல்லச் சொல்ல அவளுக்குள்ளிருந்த பயங்கள், தயக்கங்கள் மெல்ல மெல்ல விலகினவென்றாலும் கலியாணம் என்ற விசயத்துக்குள் இன்னும் அவள் பழகிக்கொள்ளவில்லை.

"கொஞ்சநாள் பொறுத்து கலியாணம் வைக்கலாமா..."

தாழ்ந்த குரலில் அவள் கேட்டபோது அவள் தன்னை ஏற்றுக் கொண்டுவிட்டாள் என்று விளங்கிக்கொண்டான் போலும்.

"கலியாணம் எண்டா பயமா இருக்கா... பிரச்சினையே இல்ல. பொறுத்துச் செய்யலாம். என்னைப் பொறுத்தவரை நிம்மதியா உங்களை நினைச்சுக் கொண்டிருக்கிற உரிமையை இப்ப தந்தால் போதும்"

பிரமிப்பாக இருந்தது கயல்விழிக்கு. அவள் இத்தனைதூரம் பெறுமதியானவளா? தன்னிடமுள்ள குறைகளெல்லாம் வரிசையாக நினைவுக்கு வந்தன. குழப்பமாக இருந்தது.

"நான்.. நான்.... நீங்க நினைக்கிற மாதிரி இல்ல. எனக்கு சரியா சமைக்கக் கூடத்தெரியாது..."

தன்னைப் பற்றி அவன் முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கவலை ஏற்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

“எனக்குச் சமைக்கத் தெரியும். இதெல்லாம் ஒரு பிரச்சினையே இல்ல. இரண்டு பேரும் மனமொத்தா எல்லாத்தையும் சமாளிக்கலாம். எங்களுக்கொரு பிள்ளை என்றதைத் தவிர வேறு எதையும் நீங்க தான் செய்யோணுமென்று நான்...”

சட்டென்று பேச்சு தடைப்பட்டு விட்டது. தன்னை அறியாமல் முதல் சந்திப்பிலேயே வந்து விழுந்து விட்ட ‘பிள்ளை’ என்ற வார்த்தை அவனை சங்கோசப்படுத்திவிட்டதென்றால் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. முகம் சூடாகிக் சிவந்து போவதை அவளால் தடுக்க முடியாமல் போய்விட்டது.

அவர்கள் இணைப்பு உறுதியாகி விட்டது.

எதையும் சமாளிக்கலாமென்று அவன் சொன்னதை நினைத்துக்கொண்டே நாட்கள் கழிந்தன.

அடுத்த சந்திப்பு...!

ஒரு பயிற்சிக்காக வேறிடம் போயிருந்த கயல்விழியும் அவளுடன் இன்னும் அறுவருமாக கடற்கரை முகாம் ஒன்றிலிருந்து பிரதான சாலைக்கு வரவேண்டியிருந்தது. வாகன வசதி இருக்கவில்லை. பாதை தெரிந்த ஒருத்தி குறுக்காக நடந்தால் கொஞ்ச நேரத்தில ‘மெயின் றோடுக்கு’ போயிடலாம் என்றாள்.

நடக்கத் தொடங்கினார்கள்.

நடக்க நடக்கப் பாதை நீண்டது. மழை வேறு! ஒதுங்க இடமுமில்லை. நேரமுமில்லை. பசியும் குளிரும் வாட்டியது. இன்னும் எவ்வளவு தூரமென்று எல்லோரும் கேட்பதும்,

“இந்தா இன்னும் கொஞ்சத் தூரந்தான்”

என்பதுமாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார்கள்.

“சீ.. என்ன இது காசிருந்தால் அந்தப் பெட்டிக் கடையிலாவது என்னவும் வேண்டலாம்”

“ச்சு ஆரும் ஒரு பிளேன்ரி சுடச்சுடத் தந்தாப் போதும்”



படிப்பகம்

www.padippakam.com

"நினைக்கிறதுதான் நினைக்கிறாய் கொஞ்சம் மிக்சரும் தாற மாதிரி நினையன்"

சொன்ன கயல்விழிக்கு பொத்துப் பொத்தென்று அடிவிழுந்த போது கடந்துபோன மோட்டார் சைக்கிள் ஒன்று திரும்பி வந்து அவர்கள் அருகில் நின்றது.

நாவரசன்! மழைக்கோட் அணிந்திருந்தான்.

"என்ன இஞ்ச நிக்கிறியள்"

ஆச்சரியமாகக் கேட்டான். கயல்விழி முன்வந்து தாங்கள் போகவேண்டியதைச் சொன்னபோது மழையில் நனைந்த பசியும் களையுமாக அவள் இருந்த கோலத்தை ஏற இறங்கப் பார்த்தான் அவன். சுருசுருவென்று ஆற்றமாட்டாத கோபம் அவன் முகத்தில் தெரிந்தது. மற்றவர்களின் முன்னிலையில் எதையும் கேட்கமுடியா மல்,

"கடைசியா எப்ப சாப்பிட்டனீங்கள்"

என்றபோது கயல்விழி முகம் வாடிவிட்டது.

அவர்கள் எந்த வழியால் போவார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டுபோன நாவரசன் விரைவில் திரும்பி வந்தான்.

பின்னால் இருந்த நண்பனின் கையில் இருந்த பையை வாங்கி கயல்விழியிடம் நீட்டினான்.

பெற்றுக்கொண்டாள்.

பணிஸ், வாழைப்பழம், பாண்!

பொக்கற்றிலிருந்து இருநூறு ரூபா தாள் ஒன்றை எடுத்து நீட்டினான். அவள் மறுத்தபோது,

"ச்சு அவசரத்திற்கு இருக்கட்டும்"

என்று கொடுத்துவிட்டுப் போனான்.



படிப்பகம்

www.padippakam.com

அவன் காட்டிய கோபம் அவளுக்குப் பிடித்திருந்தது. சாப்பிடா மலே வயிறு நிறைந்து போயிற்று. அந்த இருநூறு ரூபாயை அவள் செலவழிக்கவே இல்லை.

எப்போதாவது அவள் முகம் வாடிப்போயிருந்தால்,

"கடைசியா எப்ப சாப்பிட்டனீங்கள்"

என்று தோழிகள் அறுப்பது கூட சுகமாய் இருந்தது.

மறுமுறை நாவரசன் சந்திக்கக்கேட்டபோது ஆர்வத்துடன் வந் தாள். அவனில் ஏதோ வித்தியாசமாகப்பட்டது கயல்விழிக்கு. மெதுமெதுவாக விசயத்துக்கு வந்தான்.

"கயல் முக்கிய பயிற்சி ஒன்றுக்காக நான் கொஞ்ச நாளைக்கு வேற இடம் போகவேண்டியிருக்கு. அங்கபோனா பயிற்சி முடியு மட்டும் உங்களை சந்திக்கேலாது"

"எவ்வளவு நாள்"

"மூண்டு வருசம்"

அதிர்ந்து போனாள். அவளது மௌனம் அவனுக்கு வேதனை யாக இருந்தது.

"கயல் என்ன யோசிக்கிறீங்கள். போகாமல் விடட்டோ..."

சும்மாதான் கேட்டான். போகவேண்டாமென்று கூறத்தான் அவ ளுக்குமாசையாக இருந்தது. ஆனால் அவள் ஒரு போராளி. இன் னொரு போராளியின் வளருமாற்றலை தடுக்க நினைப்பதுகூட இயக்கத்திற்குச் செய்யும் துரோகந்தான்.

இல்லையென்று தலையசைந்தது. அவன் அவளது உணர்வு களை துல்லியமாய் புரிந்துகொள்வதில் மன்னன்.

"காத்திருக்கிறதிலேயும் ஒரு சுகமிருக்கு கயல். என்றாலும் நான் உங்களுக்கு கடிதங்கூடப் போடேலாது. ஏதும் அவசரம் எனக்கு அறிவிக்கோணுமெண்டால் எங்கட பொறுப்பாளருக்குச் சொல்லுங்கோ என்ன"



படிப்பகம்

www.padippakam.com

தலையசைத்தாள்.

"மற்றது கயல்... எதிலேயும் உங்கட வேகம் எனக்குத் தெரியும். எதையும் செய்யவேண்டாமென்று சொல்லேல்ல. கொஞ்சம் கவனமாக இருங்கோ எண்டதை மட்டும் சொல்லுறன்"

அவள் நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் நான்கும் கலந்து இறு கின.

"எனக்காக.."

கெஞ்சும் குரலில் ஆரம்பித்து ஒற்றைச் சொல்லுடன் நிறுத்திக் கொண்டான். ஏனென்றால் அவள் கண்கள் கலங்கியிருந்தன.

"கவனமாயிருப்பன்"

முணுமுணுத்தாள்.

ஒரு குழந்தையை அரவணைத்துக் கொள்வதைப் போல அவன் பார்வை அவளை அள்ளிக்கொண்டது.

அவன் பயிற்சிக்காக வெளிநாடு சென்றான். சுகமாகச் சேர்ந்து விட்டானென்று அவன் பொறுப்பாளர் அறிவித்தார். அவனது பிரிவு தன்னை வேதனைப்படுத்துவதை துளித்துளியாக விரும்பி அனுப வித்தாள்.

சாதாரண பெண்களுக்கு காதல் வந்தால் நளினம் கூடும் என்பார்கள். ஒரு போராளிக்குக் காதல் வந்ததில் பொறுப்புணர்வு கூடியது. அசட்டுத்துணிச்சலோடு எதையும் கையாள்வது குறைந்து நிதானம் கைவந்தது.

நாவரசனின் அன்பு அல்லது அக்கறை அவளில் ஏற்படுத்தும் தாக்கம் அவளுக்கு சுகமாக இருந்தது. ஏதேனும் ஒரு சண்டையில் வீரச்சாவடைந்தால் தன் உயிர்போய் அவனுடன் ஒட்டிக்கொள் ளும் என்றுகூட நினைத்திருக்கிறாள்.

அழகிய கனவுகள் அடிக்கடி வரும். ஒருபோதும் நாவரசனும் அவளும் தனித்திருப்பதில்லை. ஒருசமயம் ஒரு சின்னஞ்சிறு



படிப்பகம்

www.padippakam.com

பெண் குழந்தையுடன் அவன் கொஞ்சி விளையாடுவதாயும், அதனை அவள் ரசிப்பதாகவும் இருக்கும். அல்லது அவனைப் போல கம்பீரமான ஆண் குழந்தை ஒன்றுடன் உலாவருவதாக இருக்கும். விழிக்கையில் நெஞ்சுக்குள் துன்பமான ஒரு இன்பம் சுழன்றடிக்கும்.

அந்த முதல் சந்திப்பும் அவன் எதிர்பாராமல் 'பிள்ளை' என்று கதைத்து விட்டதும்.... அடடா யாரிடமும் பகிர்ந்துகொள்ளக் கூட முடியாத ரகசியமான இனிப்பு! பொத்திவைத்து ரசித்துக்கொள் வாள்.

இரண்டாயிரத்தியோராம் ஆண்டு தலைவர் போர்நிறுத்தம் ஒன்றை அறிவித்திருந்த காலப்பகுதி அது.

கடலில் விநியோகத் தொடரொன்றை அரச கடற்படை தாக்கிய செய்தி வெளிவந்தது.

அதில் காயப்பட்டவர்களில் கயல்விழியும் ஒருத்தி. வயிற்றில் பலமான காயம். அதிலிருந்து அவள் மீண்டெழ அதிக காலம் ஆனது. வயிற்றுப்புண்ணின் வலி வேதனை எல்லாவற்றையும் அவனை நினைத்துக்கொண்டே சகித்துக்கொண்டாள்.

ஒவ்வொரு நாளும் முடியும்போதும் அவன் திரும்பி வரும் காலம் நெருங்குகிறது என்று நினைத்துக்கொள்வாள்.

ஆனால் சில மாதங்களில் தன்னைப்பற்றிய அதிர்ச்சிகரமான விசயம் ஒன்றை அறிந்தபோது அவள் நொருங்கிப் போனாள்.

வயிற்றைக் கிளித்த எதிரியின் குண்டு அவளுடைய குழந்தை பெறும் ஜீவ ஆற்றலையும் அழித்துச்சென்றிருந்தது.

போராட்டத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விலை கொடுப்பார் கள். அவள் கொடுத்தது இதையா...? அவள் கனவுலகம் தலை கீழாகி விட்டது.

பலத்த வேலை செய்ய முடியாது என்ற கட்டத்தில் இடம் மாறிய அவள் பேசாமடந்தை ஆகிவிட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

பெருமூச்சுடன் நிகழ்காலத்துக்குத் திரும்பியவள், ரூபாய்த் தாளை இருந்ததுபோல வைத்தாள்.

நாவரசன் வரும் காலம் நெருங்கிவிட்டது. என்பது வேதனை யாக இருந்தது.

சந்தித்த முதல் நாளிலேயே குழந்தையைப் பற்றிக் கதைத்தவ னுக்கு தான் ஒருபோதும் மனைவியாகப் போவதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டாயிற்று.

அவன் ஊர் திரும்பிவிட்டான். சந்திக்கக்கேட்டபோது ஆயத்த மாக இருந்த கடிதத்தை கொடுத்தனுப்பினாள்.

"இந்தத் திருமணத்தில் எனக்கு விருப்பமில்லை. நான் நிம்மதி யாக இருப்பதை நீங்கள் விரும்பினால் இந்தத் திருமணத்திலி ருந்து எனக்கு விடுதலை தந்து விடுங்கள்?"

என்பது அதன் சாராம்சம். அவனோ விடாமல் முயற்சித்தான். பழைய பொறுப்பாளர் வந்தார். என்ன இது பிரச்சினை என்று பேச்சுவார்த்தை நடத்தினார். திருமணக் குழு உறுப்பினர்கள் வந்து நயமாகப் பேசிப்பார்த்தார்கள். எதற்கும் அவள் மசிய வில்லை.

"எனக்குத் திருமணம் வேண்டாம்"

என்பதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டேயிருந் தாள். ஆளாளுக்கு பலதும் கதைத்தார்கள். பலனில்லை.

* * *

சக போராளி தரணி அன்று காலையில் முகாமில் இரண்டு அட்டைப்பெட்டிகள் நிறைய தின்பண்டங்களுடன் எங்கோ புறப்பட் டிருந்தாள்.

அவளுடைய தம்பியின் நினைவு நாளுக்கு உணவுப் பொருட்க ளுடன் ஏதாவதொரு ஆதரவற்றோர் காப்பகத்துக்குச் செல்வது வழக்கமாம்.



படிப்பகம்

www.padippakam.com

"கயல்விழி நீரும் போயிட்டு வாரும்"

என்று பொறுப்பாளர் சொன்னபோது மறுக்க முடியாமல் மோட்டார்சைக்கிளின் பின்னால் ஏறிக்கொண்டாள்.

அது ஒரு சிறுவர் காப்பகம். முன்னறிவித்தல் கொடுத்திருந் தார்கள் போலும். காப்பகப் பொறுப்பாளர் ஓடிவந்து வரவேற்றார்.

பொறுப்பாளரின் அறையில் இருந்து பார்த்தபோது மண்டபத் தில் குழந்தைகள் ஓடித்திரிவதைக் காணக்கூடியதாகவிருந்தது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுடன் அங்கங்கே சீருடை அணிந்த பணியாளர்கள் உலவினார்கள். தரணி தின்பண் டங்களைப் பொறுப்பாளரிடம் கையளித்தாள். தேநீர் வேளையில் பகிர்ந்தளிப்பதாகக் கூறினார் பொறுப்பாளர்.

தேநீரும், பிஸ்கட்டும் வந்தன. 'சாப்பிடுங்கோ' என்று பொறுப் பாளர் நீட்டிய பிஸ்கட்டைக் கையில் எடுத்தபோது அறை வாசலில் நிழலாடியது.

நாவரசன்!

கயல்விழி துள்ளி எழுந்து நின்றாள். பொறுப்பாளரும் தரணி யும் முன்னமே பேசிக்கொண்டவர்கள்போல அறையை விட்டுப் போக, அவர்களுக்கு வழிவிட்ட நாவரசன் உள்ளே வந்தான்.

அவன் முன்பு பார்த்ததைவிட மெருகேறியிருந்தான். அவ னைக் காணக் காண நெஞ்சில் வலியெடுக்கிறதே. இந்தத் துன் பத்தை யாரால் விளங்கிக்கொள்ள முடியும்?

"என்ன"

என்றான் அவன் தாழ்ந்த குரலில். அந்த ஒற்றைச் சொல்லில் ஏனிப்படியெல்லாம் செய்கின்றாய்?

என்கின்ற ஆதங்கத்துடன் கூடிய குற்றச்சாட்டு வன்மையாகத் தெரிந்தது.

அவள் இன்னும் திகைப்பிலிருந்து விடுபடவில்லை. வேண்டு



படிப்பகம்

www.padippakam.com

மென்றே எல்லோரும் சேர்ந்து மடக்கிவிட்டார்கள்.

"கயல்... கயல்விழி ஒண்டு சொல்லுறன், எப்ப எனக்கு ஓமெண்டீங்களோ அப்பவே எங்கட திருமணம் முடிஞ்சுது..."

நிறுத்தினான்.

"இல்லை. என்ர பிரச்சினை உங்களுக்குத் தெரியாது"

"தெரியும். நீங்க குழம்பினதோட நான் விசாரிச்சிட்டன்"

அவளுக்கு மனம் மிக நொந்து அழுகை வந்தது. யாருக்கு முன்னால் தன் இழப்பை நினைத்து உடையக்கூடாது என்று நினைத்தாளோ அவன் முன்னாலேயே அழுதாள்.

"பிறகென்ன விளங்கேல்லையோ... நாங்க சேர்றதில அர்த்த மில்ல"

"யார் சொன்னது"?

"நான் சொல்லுறன்..."

அழுத்திச் சொன்னவள் மேலே பேசமுடியாமல் விம்மினாள்.

"என்ன கயல் இதுக்குப்போய் இப்படி அழவேணுமா... சரி... கலியாணம் முடிஞ்சு எத்தினபேர் குழந்தை இல்லாமல் இருக் கினம்.. அதுபோல நாங்கள் இருக்கலாம்..."

ஆதரவான வார்த்தைகள் அவை. ஆனால் தாங்க முடியாமல் இருந்தன.

"என்னெண்டு தெரியாம இறங்கினா வாறத எதிர்கொள்ளும் தைரியம் வரும். தோல்வியெண்டு தெரிஞ்சுகொண்டே இறங்கினா அது சலிப்பா இருக்கும்..."

அவள் சிரித்தாள். அது அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தாத தாகத் தோன்றியது அவளுக்கு.

"அது நாங்கள் இறங்கிற சண்டைகளுக்குச் சரி. வாழ்க்கைக்கு



படிப்பகம்

www.padippakam.com

இல்ல. கயல்.... தற்செயலா ஒரு வழி பிழைச்சா இன்னொரு வழி... அது பிழைச்சா இன்னொரு சந்து என்று திட்டம் போட்டு வழிநடத்துகிறவரின்ர வளர்ப்புகள் நாங்கள். ஏன் இதுக்கு ஒரு மாற்று வழியை சிந்திக்கேல்ல நீங்கள்"

அவன் பார்வை ஜன்னலுக்கு வெளியே விளையாடிக்கொண் டிருந்த குழந்தைகளில் பதிந்திருந்ததைக் கண்டாள்.

"ஓம் கயல்... அங்க பாருங்கோ. எத்தினை பிள்ளையள் இருக் கினம். நான் நேற்றே வந்து பாத்திட்டன். ஆறுமாதப் பிள்ளைகூட இருக்கு"

அவள் கண்களுக்குள் பார்த்தான்.

"யோசியுங்கோ கயல். என்னத்துக்கு இவ்வளவு கவலை. எனக்கு நீங்கள்தான் முக்கியம்"

என்ன சொல்லுறான். அவளுக்கு மூளை விறுவிறுத்தது. இப் படியும் செய்யலாமா? இருவரும் குழந்தை குட்டிகளோடு வாழப் போகிறார்களா...

அவன் தெளிவாக இருந்தான்.

"கயல்... மற்றவையால முடியாததெல்லாம் நாங்கள் தீர்மானிக் கலாம். உங்களுக்கு வெள்ளைப் பிள்ளை வேணுமா அல்லது என்னை மாதிரி கறுப்பா வேணுமா...."

இதமாக அவன் கேட்டபோது அவளுக்கு அழுகை நின்று விட்டது. குறுகுறுவென்று அவனைப் பார்த்தாள். உலகம் மறுபடி அழகாகிவிட்டது. தாயன்பை இழந்த குழந்தையும் அவளும் சேரும்போது இருவருமே பெற்றுக் கொள்ளப்போகிறார்களே....

நாவரசன் அவர்கள் சாய்ந்து கொள்ளத் தோள்தரக் காத்திருக் கும் போது அவர்களுக்கென்ன கவலை.

இருவருமாக வெளியே வந்தபோது வெளியே வானம் தெளி வாக இருந்தது. பறவைகள் கூட்டமாகப் பறந்துகொண்டிருந்தன.

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சுக்குள்ளே...

அ. காந்தா

எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். என்னிலும் பம்பல், பகிடி சிரிப்பு என எல்லாம் சேர்ந்து அன்றைய பயணம் இனிமையாகவிருந்தது. எனக்கு அது அந்த வீதியை அடையும் மட்டும்தான். கனநாளைக்குப் பிறகு ஊருக்குப்போனது வேதனையைத் தந்தது. இவ்வளவு தூரம் வந்திட்டன். அதில கொஞ்சத்தூரம் போவம் என்ற விருப்பத்தில...

"இங்கே இன்னும் கொஞ்சத் தூரம் போய் பார்த்திட்டுப் போவமே"

என்று கெஞ்சுவதுபோலக் கேட்டன்.

உனக்கேதும் விசரே? உந்த இடமெல்லாம் சூனியப் பிரதேசம். எப்ப வேணுமெண்டாலும் ஆமி வரலாம். ஆக்களை வந்து பிடிச்சுக்கொண்டும் போறவன். இப்ப எண்டா தூரத்தில கண்டாலே ஷெல் போடுவான்"

என்றாள் ஒருத்தி.



படிப்பகம்

www.padippakam.com

"இது உண்மைதான். இவ்வளவு இடமிருக்கு போயும் போயும் இங்க வந்து அதுவும் இந்த இடத்திலேயே சாகிறது. சீ... நான் வரமாட்டன்"

என்றாள் மற்றொருத்தி.

நான் மனசுக்க மன்றாடிக்கொண்டிருந்தன். இண்டைக்கு மட்டும் எங்கள் எவருக்கும் எதுவுமே நடந்துவிடக்கூடாது என்று.

"நீர் ஏன் இதுக்குள்ள போக நினைக்கிறீர்"

என்று கைதியை விசாரிக்குமாற்போல் கேட்டாள் வதனி.

உள் மனசுக்குள் அப்போது மெல்லத் தொடுமாற்போல் ஒரு சிலிர்ப்பு வந்தது. சட்டென்று சொல்லத் துடிச்சன்.

"உங்களுக்கு இந்த இடத்தக் காட்டுறன். கொஞ்சத்தூரத்தில அதிலதான் விக்ரர் அண்ணை வீரச்சாவடைந்தது. அதில இருந்து மேற்கால போக கொஞ்சத்தூரத்தில 1986-ம் ஆண்டு தச்சன் தம்பிராசாவின்ர குடும்பம் அப்படியே அழிஞ்சு போனது. அதக் காட்டுறன். அங்க அந்தச் சந்தியக் கடந்துபோனால் அதிலதான் அடம்பன் ஆஸ்பத்திரி இருந்தது. இப்ப அது இருந்த தடயமே இல்ல.... அதுதான்..."

"அருந்ததி அங்கேயே பிறந்தனீர்... கவலையாய் சொல்றீர்"

"நான் மட்டுமில்ல தாத்தாவும்தான்"

நடந்த கால்கள் பள்ளிக்கு முன்னுள்ள மங்கிப்போன தார் வீதியில் நின்றன. தொடர்ந்து போகப் பயமாக இருந்தது.

"இது அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. இதிலதான் நான் சின்னனில படிச்சது. என்ர அப்பாவும் பெரியப்பாவும் படிச்சவையாம். அப்பப்பாவும் இஞ்சதான் படிச்சவர்"

மிகச் சுருக்கமாச் சொல்லிமுடிச்சன். சில நினைவுகள் எப்படித்தான் கட்டுப்போட்டாலும் உடைச்சுக்கொண்டு ஓடிவந்து முன்



படிப்பகம்

www.padippakam.com

னுக்கு நிக்கும். அதுவும் பள்ளிக்கூட ஞாபகமும், பயிற்சிப்பாசறை நினைவுகளும் அலாதியாய் வந்துபோகும். ஒரு கணத்துக்குள்ள அந்தக் காலத்து நினைவுகள் ஓடி வந்துவிட்டது. அப்பா என்னை யும், அக்காவையும், அண்ணாவையும் திருக்கேதீஸ்வர பள்ளிக் கூடத்திலிருந்து ஆர்சி பள்ளிக்கு கொண்டுவந்து சேர்த்துவிட்டார். அண்டைக்கு நான் புதுசா தச்ச வெள்ளைச்சட்டை போட்டுப் போனன்.

ஆர்சி பள்ளியில சேர்க்கேக்க அதிபரோட அப்பா கனக்கக் கதைச்சார். மூன்று ரீச்சர்தான் இருந்தவை. மூன்றுபேரும் அப்பா வோடை கதைச்சவயள். நான் அப்பாவுக்குப் பக்கத்திலேயே நிண்டன். அக்காவும், அண்ணாவும் வகுப்பில போய் இருந்திட்டி னம்.

அங்க நிண்ட கறுப்பு ரீச்சர் என்னைக் கூட்டிக்கொண்டுபோய் இருத்தினா. அப்பா அதிபரோட கதைச்சார். பிறகு கறுப்பு ரீச்சரக் கூப்பிட்டு என்னக் கூட்டிவரச் சொன்னார். அண்டைக்கு மட்டும் அப்பாவோட அனுப்பி வைச்சினம். சைக்கிள்ல முன்னுக்கு ஏறிக் குந்தினன். அப்பா கதைச்சுக்கொண்டுபோனார்.

"இந்த அதிபர்தான் எனக்குப் படிப்பிச்சவர். அவருக்கு இப்ப எழுபது வயதுக்குமேல 'டலிமா மாஸ்ரர்' எண்டுதான் கூப்பிடுறது. வங்காலையில இருந்துதான் வாறார். உன்னைக் கூட்டிக்கொண்டு போன ரீச்சர் என்னோடதான் படிச்சவர். நல்ல ரீச்சர். தாயில் லாம தகப்பன்தான் கஸ்ரப்பட்டு படிப்பிச்சவர். இப்ப படிப்பிக் கிறா. மனுசன் ஒரு குடிகாரன்"

"அப்பா, அவ ஏதோ மண்வச்சு சாப்பிட்டுக்கொண்டிருந்தா"

"மடு மாதாவுக்கு ஏதும் நேத்தியா இருக்கும். அவவிற்கு கற் கண்டு ரீச்சர் எண்டு பெயர். நெடுங்கண்டல்ல இருக்கிறவா"

எண்டு வீடு வரும்மட்டும் அப்பா சொல்லிக்கொண்டு வந்தார். மறுநாள் அக்காவோட சேர்ந்து பள்ளிக்குப் போனன். மணியடிக்க டலிமா மாஸ்ரர் வந்து என்னக் கூப்பிட்டார். வீட்டுக்குப்போற சந்தி



படிப்பகம்

www.padippakam.com

யில விட்டுவிடுறன் எண்டார்.

நான் வேகமாய்போய் அவரின்ர சைக்கிளில முன்னுக்கு ஏறிக் குந்தியிருந்திட்டன். அப்பிடியே பள்ளிவிட்டு வரும் நேரமெல்லாம் ஏறிவந்தன். அது ஒரு வருசம் முடிஞ்சிருக்க வேண்டும். அதிபருக்குப் பிரியாவிடை கொடுத்திச்சினம்.

அதற்குப் பிறகு நான் நடராசாதான். பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலிருந்த பாதரின்ர தங்ககத்துக்குப் பக்கத்தால வந்து அடம்பன் குளக்கட்டோட அண்டியிருந்த குடிமனைகளுக்கால வந்து வயல் வெளிகளைக் கடந்து என்ர கிராமத்துக்கு வந்து சேருவன்.

பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் ஒரு நாளைக்கு ஒரு சம்பவம் நடக்கும். ஒருநாள் பனையில ஏறின இளம் மனுசனுக்கு கல்லால எறிஞ்சு நாக்க நீட்டிக் காட்டிற்று ஓடி வந்ததும், மறுநாள் போக அவர் கத்தியை வைத்து வெருட்ட, உண்மையா வெட்டிப் போடுவார் எண்ட பயத்தில வீட்டிற்கு வந்ததும் காச்சல் வந்து படுத்து பள்ளிக்குப் போகாமல் நிண்டதும், இப்ப மாதிரிக் கிடக்குது. இருபது வருசத்துக்கு முந்தி நடந்தது.

அப்படித்தான் மாங்காய்க் காலம், நொங்குக் காலம் எண்டா அந்த வயல் வெளியாலதான் போவன். எனக்கு முதல் வகுப்புப் படிக்கிற அக்காக்களும், அண்ணாக்களும் வருவினம். என்ர வகுப்புக்காரரும் வருவினம். வயல் வெளிய அண்டிய குடிமனைகளில நல்ல மாங்காய் காச்சுத் தூங்கும். அதுவும் வேலிக்குப் பக்கத்தில நிக்கிற கிளிச்சொண்டு மாங்காய் நல்ல சுவையாய் இருக்கும். அது அடைக்கலம் ஆச்சியின்ர.

வயல் வெளிக்கு முன்னுக்கு ஒரு தனி வீடு இருந்தது. ஒருநாள் அப்பா அங்க நிண்டவர். என்னைக் கண்டிட்டு 'போங்கோ வாறன்' எண்டார்.

அந்த வீட்டு அம்மாவும், ஐயாவும்,

"அண்ண உது உன்ர மகளே"



படிப்பகம்

www.padippakam.com

எண்டு கேட்டது எனக்குக் காதில விழுந்தது. அதுக்குப் பிறகு எனக்குத் தெரியும் அவர் அப்பாவோட படிச்ச தச்சன் தம்பிராசா எண்டும், அவர்தான் எங்கட வீட்டுக்கு கதவுகள், ஜன்னல்கள், வீட்டு வேலைகள் செய்தவர் எண்டும். பின் ஒருநாளில் வந்து கதிரைகளும், கட்டில்களும் செய்தவர்.

எனக்கு அந்த நாட்களில மாங்காய் எண்டா ஏனோ நல்ல விருப்பம். தம்பிராசா வீட்டு மனுசி கூப்பிட்டு மாங்காயும், நறுவிலிப்பழமும் தருவா. நறுவிலிப்பழக் காலமெண்டா அந்த மரத்துக்குக் கீழ நிற்பன். வெள்ளைச் சட்டையெல்லாம் கயர் பிரண்டு போய் கிடக்கும். அதைப்பற்றி எனக்கு துளி கவலையும் இருக்காது. நொங்கும் காந்திக் குடிச்சு, நறுவிலிப்பழமும் திண்டு ஆடிப்பாடி வீட்ட போனால் சரி.

கிட்டவாய் கிடக்கின்ற மாங்காய தடியால தட்டியும் எடுப்பன். அந்த வளவுக் கிழவி கண்டால் சரி. ஓட ஓடத் துரத்தும். அப்பாவிற்குச் சொல்லிப்போடும் எண்டு பயமாகவும் கிடக்கும். அந்த வீட்ட இருக்கிற அக்கா மாங்காய் பொறுக்கினா பேசவேமாட்டா. அவ வெள்ளைச்சேலை கட்டிக்கொண்டு எங்கட பள்ளியக் கடந்து அடம்பன் மகாவித்தியாலயத்திற்கு போவா. அவ சில வேளைகளில அவயின்ர வேலிக்கரையால வந்து வடலிக்கும் வேலிக்கும் இடையில நிண்டு ஒரு அண்ணையோட கதைப்பா. பிறகு பிறகு அவ நெடுகலும் அவரோட கதைப்பா. நான் சாவகச்சேரிக்குப் போனபிறகு மூண்டு வருசத்தில அந்த அண்ணைய அவ கலியாணம் செய்திட்டா எண்டு ஊரில கதைச்சவையள்.

ஐயோ என்ன இது? என்ர நினைவு எங்கேயோ எல்லாம் போகுது. இடையறுத்து மறுபடியும் ஒளியைப்போல வேகமாய் போச்சுது. நான் என்ன செய்யிறது? மறக்கக்கூடிய நினைவுகளோ இது?

தம்பிராசா வீட்டிற்குப் பக்கவாட்டாய் வயல் வெளிக்க ஒரு சமநிலம். அதில ஒரு பெரிய கிழட்டு மாமரம் மட்டும் நிண்டது. அது இப்ப நிக்கிதோ தெரியேல்ல. பாக்க ஆசையா இருக்குது.



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் ஐந்துபேர் சேர்ந்து கட்டிப்பிடிச்சாலும் காணாது. அவ்வ ளவு பெரிசு. ஏறுவதற்கு மொக்கு ஒண்டும் இல்ல. அதால எல்லாப் பையன்களும் தடி, கல்லு எண்டு எறிஞ்சு மாமரத்தில காயம் இல்லாத இடமில்ல எண்டு சொல்லலாம். பாவம் அது ஒரு நல்ல மாமரம். ஒரே நிறையக் காய்க்கும்.

இதுவெல்லாம் பாதிக்கணத்தில நினைவுக்கு வந்து போச்சுது. எங்கட பள்ளிக்கு குப்பிளானில இருந்து ஒரு அதிபர் வந்தார். அவர் கதிரவேலு மாஸ்ரர். அதோட நைனாதீவில இருந்தும் ஒரு ரீச்சர் வந்திட்டா. அவ லலிதா ரீச்சர். ஒரு கை சொத்தியா இயங்க மறுத்து இருக்கும். முன்பல்லு மிதந்து போயிருக்கும். அவ நல்ல ரீச்சர். எனக்கு நல்லாய் பிடிக்கும். என்ன வகுப்பேத்தி அவ விட்டு விடேக்க அந்த கற்கண்டு ரீச்சர் லலிதா ரீச்சரிட்ட சொன்னது இப்பவும் நினைவில இருக்கு. இந்தப் பிள்ளை நோஞ்சான் எண்டது.

அந்த நேரமெல்லாம் தம்பிராசாவின் நடுவில் பிள்ள எனக்கு நல்ல சினேகம். அவளையும் என்னைப்போல நோஞ்சான் எண்டு சொல்லுறவையள். அவளுக்கு இரண்டு பை திரிபோசா மா கொடுப்பினம். அவையள் ஏழைகள் எண்டு அதிபர் சொல்லுவார்.

அந்தப் பிள்ள வடிவில்லாமல் இருக்கும். ஊத்தையா பள் ளிக்கு வரும். நான் அதோட கதைப்பன். பேந்து அவள் பள்ளிய பாதியில விட்டிட்டாள்.

திரேசா ரீச்சர் எண்டு பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில இப்ப நாங்கள் நிக்கிற இந்தத் தார் றோட்டில பெரிய கல்வீடு. அந்த ரீச்சர் எல்லோருடனுமே அன்பா நல்லமாதிரி பழகுவா. அச்சா ரீச்சர். தமிழ் படிப்பிச்சா எண்டா நல்ல விருப்பமாய் இருக்கும்.

எனக்கு திரேசா ரீச்சரப் பிடிக்குமாப்போல கற்கண்டு ரீச்சரப் பிடிக்காது. அவா வடிவா படிப்பிக்க மாட்டா. மூண்டு வருசம் அவதான் வகுப்புரீச்சரா இருந்தவா. நல்ல தமிழ் சொல்லித்த ரேல்ல. பின் நாளில் அது எனக்கு பெரிய சிக்கலாய் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அந்த நேரமெல்லாம் அவவ நினைக்க உச்சியில கோபம் வரும்.

அந்த வகுப்பில இருக்கேக்க ஒருக்கா பிந்திப்போய் அடியும் வாங்கினன். பிந்தினதுக்கு ஒரு காரணம் இருந்திச்சு. அதுதான் வயல்வெளி றோட்டால போகேக்க பனைக்குக்கீழ படுத்திருந்த திருவாளர் சாரைப்பாம்மைக் கண்டு பையன்கள் சேர்ந்து கல் லால் அடிச்சதில அந்த இடத்தில மாறிச்சாறி ஓடித்திரிந்த பாம்பை நானும் கண்டு, பயத்தில மறுநாள் இப்ப மக்கிக்கல்லும் முள்ளு மாய் கிடக்கிற அன்றைய இந்தத்தார் வீதியால ஒரு சுத்துச்சுத்தி நடந்து போக, சரியா மணி அடிச்சிட்டுது. பிறகென்ன?

அந்த உணர்வுகள் தொத்திக்கொள்ள எனக்கு இப்ப பத்து வயசு மாதிரிக்கிடந்திது. வேறு நினைவுகளே கிடையாத அருமை யான சுகானுபவமாய்....

நான் என்னை மறந்துபோய் நிண்டன். கூடி வந்தவயள் எனக் குக்கிட்டவாய் வந்து

“காய்... என்ன பிளான்... இதிலையா நிக்கிறது”

எண்டிச்சினம்.

பிறகு எனக்கே அதுக்குள்ள தள்ளிப்போக மனமில்லாமல் போச்சுது. ஏதோவெல்லாம் சோகம் வந்து நூறு கிலோவுக்கு மேல கவ்வினமாதிரி உணர்ந்தன். என்னுடைய அந்தப் பசுமையான, இனிமையான, உண்மையான நினைவுகளும், அந்த இடங்களும் அப்படி அப்படியே இருக்கட்டுமென்று நினைச்சன். குளக்கட்டும், குடிமனைகளும், வயல் வெளிகளும், குரங்குக் கூட்டங்களும், மகிழ்ச்சி ரேகைகள் படந்த முகங்களும் எல்லாம் நினைவுக்குள் அப்படியே இருக்கட்டும் எண்டு எண்ணிக்கொண்டிருக்க அவள் கேட்டாள்,

“ஏதோ சொல்ல வந்ததையெண்டாலும் சொல்லன். ஆரோ அழிஞ்சதாய்...”

“ஓ...ஓ.. சொல்லுறன் கேளுங்கோ”

எண்டு சொன்ன போது என் விழிகள் கசிந்தன. ஆக்ரோசத்



படிப்பகம்

www.padippakam.com

தால் உடல் வெப்பமானது. மெல்லச் சிரிக்க முயன்றேன். தோல்வி. வந்தவர்கள் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள். ரணகோஷ இராணுவத்தைத் துரத்தின புழுகு அவயளுக்கு. பேந்தென்ன? எனக்கும் அது தொத்திக்கொண்டது.

இந்தப் பழசு வந்து என்ன தொலைச்சுப்போட்டுது.

"என்ன உங்கால போறதில்லையே"

"வேண்டாம்"

எண்டன்.

"அப்பிடியெண்டா கதையச் சொல்லு. திரும்பிப்போவம்"

"சொல்றன்"

"சொல்லுங்கோவன்"

வதனி கடும்பிடி பிடித்தாள்.

"ம்.. எட்டாம் வகுப்புப் படிக்கேக்க கொஞ்ச நாளைக்கு அடம்பன் மகாவித்தியாலயத்தில படிக்க நாடு இடங்கொடுத்திச்சுது. அப்பதான் புலிகளின் குகையெண்டு சொல்லிப் பயந்து நடுங்கும் அடம்பனைச் சுற்றிவளைக்க ஆயிரக்கணக்கில ஆமி வந்தான். 1986-ஆம் ஆண்டின் நடுப்பகுதி. அடம்பனைச் சுற்றிவளைத்து விட்டுத் திரும்பினால், பதவி உயர்வுகளும், பணமும் தருவதாக அரசு அறிவித்திருந்தது.

"அலட்டாமல் விசயத்தை வேகமாய் சொல்லு"

இது மறுபடியும் வதனி. எனக்கெப்படி இந்தப் பெருஞ்செய்தியை சாதாரணமாக நாலு வார்தைகளில் சொல்ல முடியும்? மூச்சு இழுத்து விட்டுகொண்டேன்.

"இந்தா இதுக்குள்ள பாருங்கோ. இதுகளக் கடந்துபோக அந்தத் திசையிலேயே இருக்கு. பேந்து சந்தர்ப்பம் கிடைச்சால் பாருங்கோ"



படிப்பகம்

www.padippakam.com

நடந்துகொண்டே கதையைச் சொல்றன்.

திட்டமிட்டபடி இலங்கை இராணுவம் இரவிரவாக நகர்ந்து வந்தது. அதற்கேற்ப அந்த வெறியர்கள் மது குடித்திருந்தனர். கடும் வேகமா முன்னேறியவனுக்கு அன்று எங்கள் அப்பாவித் தமிழர்கள்தான் புலியாகத் தெரிந்தார்களோ யாரறிவார்?

சுற்றி வளைத்தபோது, சூரியன் வருவதற்கு முன் பலர் காடுக ளுக்குள் தஞ்சம் புகுந்தனர். சிலர் வாய்க்காலுக்குள் பதுங்கிக் கொண்டனர். ஆங்காங்கே மிஞ்சி நின்றவர்களுக்கு சொல்லத் தேவையில்லை. இயற்கையும் எழிலும் கொண்ட கிராமங்கள் சுடுகாடாய் கிடந்தன.

ஓர் ஒதுக்குப்புறத்தில் குடிசை வீட்டில் வசித்துவந்த தம்பி ராசாவின் குடும்பம் எந்தப் பாவமும் அறியாது. பதின்மூன்று பிள் ளைகளுடன் பதினைந்து உயிர்கள். தச்சுத்தொழிலில் கிடைத்த வருமானத்தில் உண்டு வந்தனர். எலும்பும், தோலுமாய் சின்னச் சின்ன பிள்ளைகள். அந்தக் குடும்பம் எந்தப் பிரச்சினைக்குமே செல்லாது. தாங்கள் உண்டு. தங்கள் வீடு உண்டு, என்றே வாழ்ந்து வந்தது. வறுமை மேனியில்தான் என்றாலும் அட்டூழியக் காரரிடம் கைநீட்டிய வரலாறே இல்லை.

தம்பிராசா குடும்பம் வீட்டைவிட்டு எங்கு ஓடுவது என்று நினைத்தோ என்னவோ, அன்று வீட்டிலேயே இருந்துவிட்டது. இராணுவம் அண்மித்துவிட்டது. அவர் தன் பிள்ளைகளை கட்டி லுக்குக் கீழ் படுக்கவிட்டு தானும் அதற்குள் ஒளிந்துகொண்டார்.

வந்த இராணுவம் சும்மா விட்டதா? தம்பிராசா, மனைவி, பிள்ளைகள், பாட்டியென எல்லோரையும் ஒருவர் விடாது சுட்டும், வெட்டியும் கொன்றுவிட்ட திருப்தியில் திரும்பிச் சென்றுவிட்டது. ஒருவர்மேல் ஒருவராகச் செத்து மடிந்துபோய்க் கிடந்தனர். ஒரு வன் மட்டும் காலில் காயத்துடன் தப்பிவிட்டான். சம்பவம் முடிந்து மூன்றாம்நாள் எல்லோரும் ஊருக்குள் சென்றோம். அதிலும்விட கொடூரங்கள் நடந்திருந்தன. தம்பிராசா வீட்டுப்பக்கம் பிண வாடை அடித்தது. எல்லோருக்கும் தொண்டையை அடைத்தது."



படிப்பகம்

www.padippakam.com

“பிறகென்ன நடந்திச்சு”

“பிறகென்ன பிணங்களை எடுத்து சவக்காலைக்குக் கொண்டு செல்வதற்கு வாகனங்களில் ஏத்திச்சினம். மயான அமைதியாய் கிடந்த ஊர்கள் அழுதன”

வதனி வெப்பியாரத்துடன் வார்த்தைகளை வெளியிட்டாள்.

“இதுகளால தானே உவங்களைத் திருத்தவேண்டிக் கிடக்கு”


1999.

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# வதையின் கதை

## சிரஞ்சீவி

'அப்போதுதான் ஆரம்பித்திருந்த அழகிய மழைக் காலம் ஒன்றின் மாலை நேரம் அது. பிள்ளைப்பருவ விளையாட்டை இன்னும் மறவாததுபோல் செம்மண் புழுதி குளித்து நின்ற இயற்கைப் பெண்ணை நன்கு குளிப்பாட்டி விட்டிருந்தாள் மழையன்னை. வசந்தத்தின் வாயிலில் நுழையக் காத்திருக்கும் தன் செல்லப் பெண்ணின் மேனியெங்கும் முத்தங்களால் மினுமினுப்பாக்கிக் கொண்டிருந்தான் சூரியத் தகப்பன். இந்த ஊருக்கென்றே பிரத்தியேகமாகப் போட்டிருந்த செம்மண் வீதியும், வரம்புகள் உயர்ந்த பச்சை வயல்களும் சிவப்புக்கரையுடன் கூடிய கட்டம் போட்ட பாவாடையை அவள் அணிந்திருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. ஊரின் இரு கண்களாக இருந்த அந்த இரு குளங்களின் அணைக்கட்டில் செழித்து வளர்ந்திருந்த பசிய புற்கள் மை தீட்டிய விழிகளின் கீழ் மடல்களை நினைவூட்டியது. கொல்லையில் இருந்த



படிப்பகம்

www.padippakam.com

படி சின்னையா அப்பு சுருட்டுக்குடிப்பது போல் பச்சைப்பசே லென்ற அந்தப் பெரிய வயற்காட்டில் தனித்து நின்ற அச்சிறு குடிலில் இருந்து அடுப்புப்புகை வெளிக்கிளம்பியது....?

"என்ன அற்புதமான ஒரு கற்பனை. வன்னிவாசி எனக்கே உதிக்காத இந்தக் கற்பனை அச் சிறு பெண்ணுக்குள் எப்படி முளைவிட்டது..."

படிக்க உபயோகிக்கும் மேசையை ஒட்டிய சுவரில் பக்குவமாய் ஒட்டப்பட்டிருந்த அந்த எழுத்துக்களை எத்தனை தடவை படித்தா லும் பிரமிப்பு அடங்காது சாரதா ரீச்சருக்கு....

இயற்கைக்காட்சி பற்றி எழுதித்தாங்கோ என்று நச்சரித்த தன் மகளுக்கு பரிதினி எழுதிக்கொடுத்த இந்த வரிகள் சாரதா ரீச்சரின் மனதுக்குள் ஆழப்புகுந்து இப்போது அவளின் படிப்பு மேசை இருந்த சுவரில் நிரந்தர இடத்தைப் பிடித்திருந்தது. ரீச்சரின் மகளது அன்புக்குரிய அக்காவாக அந்த வீட்டுக்குப் பழக்கப்பட்ட பிரிதினியை மறக்க முடியாத அளவு தவிக்கும் நிலைக்கு சாரதா ரீச்சர் வந்து நாட்கள் பலவாகிவிட்டன. எப்போதும் எதையோ தேடுவதுபோல் தோற்றமளிக்கும் அந்த விழிகளும்... உதடு குவித்து வெளிவிடும் அந்தப் புன்னகையும் உயிர்கொடுத்த மண்ணை நோகக்கூடாது என்பதுபோல் மென்மையாக ஆனால் அவதானமாக மிதித்துச் செல்லும் அந்தப் பாதங்களும், அவளை சராசரிப் பெண்ணில் இருந்து சற்று வித்தியாசப்படுத்துவது போல் இருக்கும் சாரதா ரீச்சருக்கு.

"பரிதினியை உடனே பார்க்க வேண்டும்... இரண்டு வாரங் கள்.... அப்பப்பா... இருபது வருடங்கள் கடந்தது மாதிரி...."

* * *

"எந்தக் குறுக்கால போனது இந்த எளிய வேலையைச் செய்துதோ...? நாரிமுறிய நான் போட்ட கதியால் இண்டைக்கு ஏன் இப்பிடி அலங்கோலமா விழுந்து கிடக்கு.... ஐயோ! பிள்ளை யாரப்பா! உனக்குப் பிச்சிப்பூவிலை அரிச்சனை செய்யவேண் டும் எண்டு ஆசைப்பட்ட ஐயரிட்டை, எங்கட வீட்டில நிறைய



படிப்பகம்

www.padippakam.com

இருக்கு நான் கொண்டுவாறனெண்டு எடுப்பாய்ச் சொல்லிப் போட்டு வந்திட்டன். இப்ப என்ன செய்யிறது... போட்டுது.... எல்லாத்திலையும் மண் விழுந்துபோட்டுது... எடி மேனை உதைப் பாத்துக்கொண்டிருக்க எப்பிடி உனக்கு மனம் வந்தது....?"

ஆத்திரம் தாங்காமல் கத்தினாள் அம்மா.

"என்ன மேனை காலங்காத்தாலை இப்படிக் கத்துறாய்"

என்று கேட்ட சிவம் அக்காவிடம் தன் புராணத்தைத் தொடங் கினாள் அம்மா.

"வளவு முழுக்க இருக்கிற இந்தப் பூக்கண்டுகளைப் பார்த்து சனங்களுக்கு ஒரே பொறாமை எண்டு ஒரு காலத்திலை எனக்குப் பெருமையாகத்தான் இருந்தது. இப்ப என்னெண்டால் என்ர தலை யிலை எல்லாம் பொறிஞ்சுபோய் நிக்குது. குனிஞ்சு ஒரு தும்பு எடுக்கிறாளில்ல... எங்களை இருக்க நிக்க விடாமல், தேடித்தேடி நட்டதை, விட்டிட்டுப்போறனே எண்ட கவலையில, வன்னியில இருந்து வாறவன், போறவனுக்கெல்லாம் என்ரை பூக்கண்டு... என்ரை பூக்கண்டு எண்டு கொஞ்சக்காலம் புலம்பிக்கொண்டி ருந்தவள்... பிறகு காட்டுக்குணம் வந்திட்டுது.... போல... இப்ப ஒண்டிலையும் அக்கறையில்லை. இல்லாட்டி கண்ணுக்கு முன் னாலை எல்லாம் தாறுமாறாய் பட்டுக்கொண்டு போக மரக் கட்டைமாதிரி பார்த்துக்கொண்டிருப்பாளே..."

சொல்லிச் சொல்லி புலம்பிக்கொண்டிருந்தாள் அம்மா.

* * *

ஒவ்வொரு நாளும் அந்தச் சிறு மண்வீட்டைக் கடந்து போகும் போதும் வரும் போதும் சாரதா ரீச்சரின் மனம் பரிதினியின் நினை வுகளால் நிரம்பியிருக்கும். மல்லாவியை விட்டு தங்கட ஊருக்குப் போன அன்று அவள் பட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே... நூறு தரமாவது வீட்டைச் சுற்றியிருப்பாள். படலை வாசலில் நின்று அழகு பார்த்தாள். நேராய்.... பக்கவாட்டாய்.... மூலைப்பக்கமாய்... 'எத்தனை தடவை பார்த்தாலும் பொச்சம் தீராது ரீச்சர்' என்று ஒருமுறை அவள் சொன்னது நினைவில் வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

முன்பக்க வளவை நிறைத்திருக்கும் பெரிய இரு வேம்புகள், வலப்பக்க பின் மூலையில் ஒரு பலா, இடது பக்கமாய் ஒரு பெரிய புளி என்று வீட்டுச் சொந்தக்காரருக்கே கிடைக்காத நிழலும் குளிர்ச்சியும் இந்த வீட்டிற்கு இருந்ததை ரீச்சரும் உணர்ந்திருந் தாள். என் வீடு என்ற தலைப்பில் மகள் வித்தியாவுக்கு அவள் எழுதிக்கொடுத்தது நினைவில் பசுமையாய் வந்தது.

'எட்டு பெரிய அறைகளையும் இரண்டு பெரிய விறாந்தைகளை யும் கொண்ட அந்தப் பிரமாண்டமான வீட்டுக்குள் கிடைக்காத அந்தச் சுகத்தை இருபது அடி நீளமேயுள்ள இந்தச் சிறு வீடு எனக்குத் தருகிறது. சாத்திர விதிமுறைக்குப் பொருந்தாததுதான். ஆனாலும் முன் விறாந்தையில் இருப்பவருக்கு தெரியாமல் அறைக்குள் போய்வர, உடுப்பு மாற்ற வசதியாக... மாத சுகயீனம் வந்தால் அம்மாவின் கெடுபிடிகளுக்கு அகப்படாமல் இந்தச் சிறு பத்தியில் ஒதுங்கிப்படுக்க.. ஒவ்வொருநாள் காலையிலும் அவள் கடவுளாக மதிக்கும் அந்தச் சூரியதேவன் தானே வந்து தட்டியெ ழுப்பக்கூடிய வகையில் கிழக்கு முகமாக காயத் தடிகளினால் சட்டமிடப்பட்ட முன் விறாந்தையில் படுக்க.... என்று எனக்குப் பிடித்தமான இந்த வீட்டை இழப்பது என்பது என்னையே இழப்பது போன்றது'

'றேடியோ சுற்றிக்கேட்பதற்கென தெற்குச் சுவரோரமாய் ஒரு பழைய சைக்கிள், இருக்கையாய் பாவிப்பதற்கென பலகை, பலகைக்குப் பக்கத்தில் ஒரு புத்தக இறாக்கை, ஒரேயொரு கதிரை அதில் வைத்து எழுதுவதற்கு ஒரு பலகை... எதுவுமே எங்களுக்குச் சொந்தமில்லைத்தான். ஆனால் சொந்தமற்ற அவற் றிற்குள் நிறைய சொந்தங்கள் புதிதாக உருவாகிவிட்டிருந்தன. போகும்போது அவர்களிடம் அவை போய்ச் சேர்ந்துவிடும்'

இவளது எழுத்துக்களின் லயிப்பால் ஒருதடவை அவள் பரிதி னியிடம்,

"பிள்ளை உமக்குள் இருக்கிற ஆற்றல்களை நீர் பயன்படுத்த வேண்டும். கதை எழுதினீர் எண்டால் நான் பிரசுரிக்க ஏற்பாடு செய்வன்"



படிப்பகம்

www.padippakam.com

என்று கேட்டபோது,

"ரீச்சர் எனக்குத் துண்டு துண்டாத்தான் எதையும் எழுத வருமே தவிர சம்பவங்களைக் கோர்க்க வராது"

என்று சிரித்துக்கொண்டே அவள் சொன்னது இன்றும் பசுமையாய் காதில் ஒலித்தது.

இவளிடம் இருக்கும் கற்பனையும் உள்ளத்தை உள்ளபடி சொல்லும் இந்த நேர்மையும், எதையும் ஆழ்ந்து அவதானிக்கும் விதமும் சரியான முறையில் வழிகாட்டப்பட்டால் இன்று இவள் எங்கேயோ போயிருப்பாள். நாளைக்கு லீவு விடுகினம். போய் இரண்டு நாள் என்றாலும் அவளுடன் தங்கவேண்டும். பெத்த பிள்ளையிடம் கூட இப்படி இருப்பேனோ தெரியேல்லை.

* * *

"மேனை, உனக்கு கொஞ்சமெண்டாலும் அறிவு நினைவு இருக்கவேணும்... வீடு முழுக்க ஒழுக்கு. எதால ஒழுகுது எண்டே கண்டுபிடிக்கேலாமல் நான் அந்தரிச்சுக் கொண்டிருக்கிறன். நீ என்னடாவெண்டால் வலு சிம்பிளா செருப்போட திரியிறாய்... இம்மை வறுமை தெரியாமல் இப்படிப் புத்தகம் படிச்சுக்கொண்டிருக்க என்னெண்டு மனம் வருகுது. பொங்கல் வரப்போகுது. இந்த ஒழுக்கோட அல்லாடுறது எப்பிடி... வளவு கூட்டித் துப்பரவாக்கிறது எப்பிடி..."

வீட்டுக்குக் கம்பீரத்தைக் கொடுக்கவென அந்தக் காலத்தில் ஆயிரமாயிரமாய் செலவழித்து முன்புறமும், வலப்புறமும் உள்ள முகப்புப்பகுதியில் எழுப்பிய சீமெந்து பிளாட்டின் மேல் இத்தனை வருட கால இடப்பெயர்வில் கவனிக்க ஆட்களின்றி குவிந்த வேப்பங்கஞ்சல்களும் மழைநீரும் தேங்கி ஊறினதால் பிளாட்டின் கம்பிகள் பொருமியதோ, அதனால் பெய்யும் மழையெல்லாம் அப்படியே சுவரை ஈரமாக்கி சுவரோரமாக வழிந்து தரையை ஈரமாக்குவதோ... இதைத் திருத்துவதென்றால் இலட்சக்கணக்கில் முடியும் என்று மேசன்காரன் சொன்னதோ அம்மா அறிய வாய்ப்பில்லை.



படிப்பகம்

www.padippakam.com

"கொப்பர் உனக்கெண்டு பார்த்துப்பார்த்து கட்டின வீடெல்லே இது. கொஞ்சமெண்டாலும் அக்கறை இருக்கவேணும். இலட்சக் கணக்கில் செலவழிச்சுக் கட்டிப்போட்டு இப்ப ஓலை வீட்டைவிடக் கேவலமா இருக்கு. மேசன்காரனை ஒருக்காக் கூட்டிவந்து காட் டுங்கோ எண்டு தெரிஞ்சவை போனவை எல்லாரையும் கேட்டு அலுத்துப்போச்சு"

* * *

இந்தப் பிள்ளைக்கு என்ன நடந்திருக்கும்... ஊரிலேயே பெரிய வீடு. இயற்கை மீதான அவள் நேசிப்பின் இலக்கணமாய் முன்புற மும், இடதுபுறமும் பெரிய பூந்தோட்டம். பிறகென்ன நடந்தது. சிறு உணர்வையும் துல்லியமாக வெளிப்படுத்தத் தெரிந்த அந்தக் கண்களுக்குள் இந்த மரத்தனம் எப்பிடி நுழைந்திருக்கும். இவ ளது கவலைக்குக் காரணத்தை எப்பிடியும் கண்டுபிடித்தாக வேண்டும்.

"இஞ்சரப்பா, பரிதினியிட்டப் போனனான். கண்கொண்டு பாக் கேலாமல் கிடக்கு. மெலிமெலியென்று மெலிஞ்சு, முழியும் வெளியில தள்ளி, சாவாரில் ஒன்றாய் திரியுதப்பா பெட்டை"

"தாய் மனிசி என்னவாம்"

"நான் அண்டைக்குப் போகேக்கை தாயும் மோளும் என்னவோ அமளிப்பட்டவை. நான் கொஞ்சநேரம் வெளியில நிண்டு காது குடுத்தனான். மனிசி தாறுமாறாய் ஏசுது. பக்கத்து வீட்டு ஆடு வளவுக்கை நிண்டு பூமரமெல்லாம் தின்ன, இவள் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கிறாளாம். இடம் பெயரமுதல் வளவுப் பூக்கண்டு முழுக்க இவள் தேடித்தேடி வைச்சதுதானாம். இப்ப ஒண்டையும் திரும்பிப் பாக்கிறாளில்லையாம். வன்னியில இருந்து வந்த நாள் தொடக்கம் இப்பிடித்தான் இருக்கிறாளாம். ஒருத்தருக் கும் ஒண்டும் தெரியுதில்லை. உங்களுக்குத் தெரியும்தானே அவளிட்டயிருந்து எதையும் அறியேலாதெண்டு..."

"மூக்கும் முழியுமாய் இருக்கிறாள். எங்கேயன் மனசைக் குடுத்திட்டாளோ...."



படிப்பகம்

www.padippakam.com

"என்னெண்டு தெரியேல்லையப்பா. லீவு முடிஞ்சு போறதுக் கிடையில ஏதாவது செய்யவேணும்"

"அருமையான பெட்டை, அக்காவின்ர பெடியனுக்குக் கேட்டுப் பார்ப்பம் எண்டு நினைச்சன். நீ சொல்லுறதைப்பார்த்தால்..."

"சும்மா விசர்க் கதை கதையாமல் அவளை முதல்ல நிமிர்த்து றதுக்கு வழி சொல்லுங்கோ.."

"நினைக்கிறதை கிறுக்கிற பழக்கம் அவளுக்கு இருக்கெண்டு முந்தியொருக்கால் சொன்னனீரெல்லே... இரண்டு நாளைக்கு அங்கை நிண்டு மேசையைக் கிளறிப்பாரும்... காதல் பிரச்ச னையாத்தான் இருக்கும். இந்த வயசில வேறென்ன இருக்கும் கவலைப்பட..."

* * *

"கடவுளே என்ரை பிள்ளைக்கு ஒண்டும் நடக்கக்கூடாது. என்ன வடிவா இருந்தவள். இப்பிடி இளைச்சுப்போட்டாளே. தேப்பன்ர வினை கொஞ்சம் இருக்குத்தான். வாய்விட்டு எதையாவது சொன் னால்தானே நூல் வாங்கிக் கட்டியும் ஒண்டும் நடக்கேல்லை. உடம்பில எந்த வருத்தமும் இல்லையெண்டு டாக்குத்தர் சொல் லிப்போட்டார். அண்டைக்குக் கோவிலிலை வைச்சு அந்த அம்பி கம் என்னமாய் பிடுங்கி எடுத்தாள். என்ர பிள்ளை உயிர் போனாலும் அப்பிடிப் போகாதெண்டு கிழி கிழியெண்டு கிழிச்சுப் போட்டு வந்து அண்டுமுழுக்க ஒரு வாய் தண்ணி குடிக்காமல் இருந்தனான்.. என்னில வஞ்சம் தீர்க்கிற மாதிரியெல்லே திரியு றாள். என்ர மனதறிய நான் ஒரு பிழையும் விடேல்லையே. கோழி மிதிச்சு குஞ்சு சாகுமே. மல்லாவியில நிண்டு வரமாட்டன் எண்டு அடம்பிடிச்சவளை வலுக்கட்டாயமா இழுத்துக்கொண்டுவந்த பிழையைத் தவிர வேறை எந்தப் பிழையும் நான் செய்யேல்லை. முன்னம்முன்னம் வந்தது. பிள்ளையாரே அவளுக்கொண்டென் றால், என்னை உயிரோடை பார்க்கமாட்டாய். அவள் அம்பிகம் சொன்னதில உண்மை இருக்குமோ..."

* * *



படிப்பகம்

www.padippakam.com

பரிதினியின் மேசையைக் கிளறி கொப்பிகளின் பின்புறத்தில் அவள் அப்பப்ப எழுதிய எழுத்துக்கள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் வாசித்த ரீச்சர் மனநிறைவுடன் அம்மா இருந்த இடத் துக்கு வந்து,

"அம்மா உங்கட பிள்ளைய பழையமாதிரிப் பார்க்க என்ன வெண்டாலும் செய்வீங்களே..."

அம்மாவைக்கேட்ட சாரதா ரீச்சரிடம்,

"என்ன ரீச்சர் இப்பிடிக் கேட்டுட்டீர்கள். என்ர பிள்ளையைவிட எனக்கு வேறெதன் முக்கியமாய் இருக்குமே... உங்களைக் கண்ட பிறகுதான் கொஞ்சம் உயிர் வந்தமாதிரித் திரியிறாள். உங்களுக் குத்தான் ரீச்சர் அவளின்ர மனசுக்கை இருக்கிறதை கண்டுபிடிக் கேலும். என்ரை பிள்ளையை எப்பிடியாவது முந்தி இருந்த மாதிரி ஆக்கிவிடுங்கோ..."

என்று தவிப்பு நிறைந்த குரலில் சொன்ன அம்மாவிடம்

"அப்ப மல்லாவி போறதுக்கு ரெடியா இருங்கோ"

என்று சிரித்தபடி சொன்ன சாரதா ரீச்சர் பரிதினியைப் பார்க்க அவளின் அறைக்குள் நுழைந்தார்.

"பரிதினி நாளைக்கு வெளிக்கிடுவம் எண்டு நினைக்கிறன்"

"ஏன் ரீச்சர் பள்ளிக்கூடம் தொடங்க இன்னும் ஒரு கிழமை இருக் கெல்லே. இன்னும் மூன்று நாள் தங்கிப்போட்டுப் போங்கோவன்"

"இல்லைப் பிள்ளை. இரண்டுநாள் எண்டு வந்து இஞ்சை இப்ப உம்மோடை இரண்டு கிழமையெல்லே தங்கிப்போட்டன். அதுசரி உன்னை நான் மல்லாவிக்குக் கூட்டிக்கொண்டு போறதா உத்தே சம்... உமக்கு ஏதும் ஆட்சேபனை இருக்கோ என்று அறியத்தான் இப்ப வந்தனான்"

அவளின் கண்களுக்குள் பழைய ஒளி ஊடுருவியதை அவதா னித்தவாறே பேச்சைத் தொடர்ந்த சாரதா ரீச்சர்,



படிப்பகம்

www.padippakam.com

“எங்கட பள்ளிக்கூடத்தில தமிழ் ரீச்சர் ஒருவருட விடுமுறையில் போறா... நீர் கொஞ்ச நாளைக்கு அங்க வந்து படிப்பியும், நான் எல்லாம் ஒழுங்குபடுத்தியிட்டன். என்ன சம்மதம்தானே...”

“அம்மா இல்லாமல் என்னால எங்கையும் இருக்கேலாது ரீச்சர்....”

தயங்கித் தயங்கி அவளிடமிருந்து வந்தது வார்த்தைகள்.

“அவவையும் கூட்டிக்கொண்டு போறது”

“அவா வரமாட்டா ரீச்சர்”

“அது நானெல்லோ அவாவைக் கூட்டிக்கொண்டு வாறது. நீங்கள் முந்தியிருந்த வீடு இப்பவும் அப்பிடியே இருக்கு. அங்கேயே தங்கலாம்...”

பரிதினிக்குள் பழைய பரிதினியைக்கண்ட புழுகம் ரீச்சருக்குள்.

* * *

கண்கள் தாரை தாரையாக நீரை உகுக்க, ரீச்சர் கொடுத்த பரிதினியின் எழுத்துக்களை படிக்கத்தொடங்கினாள் அம்மா.

‘படுங்கோ... நல்லாப் படுங்கோ... பிச்சிப்பூ கேக்குது உங்களுக்கு. மல்லாவி வீட்டில், தானா முளைச்ச அந்த முல்லைக் கொடிக்கு ஒரு தடி நட்டுவிடுங்கோ எண்டு எத்தனைநாள் சொல்லியிருப்பன். கால்முறிஞ்சு கிடக்காட்டில் உங்களைக் கெஞ்சியிருப்பனே. நட்டவைக்குத் தெரியும்தானே படரவிட நீ பேசாமல்கிட என்று எவ்வளவு விட்டேத்தியாப் போனனீங்கள். என்ர கண்ணுக்கு முன்னாலேயே பக்கத்து வீட்டு ஆடு பூமரத்தைக் கடிச்சுத்தின்ன பார்த்துக்கொண்டு சும்மா இருந்தனீங்களெல்லே. கலையுங்கோ கலையுங்கோ எண்டு கத்தினதுக்கு இந்த நாத்தல் மண்ணுக்கு உது பூக்கும் எண்டு கனவு காணுறியே எண்டு எவ்வளவு இலேசா சொன்னியள். பாருங்கோ உங்கட கண்ணுக்கு முன்னாலேயே இந்தப் பூமரமெல்லாம் அழியப்போகுது. இருந்து பாருங்கோ... அப்பத்தான் என்ர மனம் ஆறும்’



படிப்பகம்

www.padippakam.com

'வேணும் நல்லாவேணும். கடவுள் தந்த தண்டனை இது. வயலூர் பிள்ளையாரிட்டை வரம் வேண்ட மட்டும் தானே பறந்து பறந்து திரியிறனீங்கள். அந்த வீட்டில கொஞ்சமாவது கவனம் எடுத்தனீங்களே. பிறத்தியார் வளவில போட்ட இந்த வீட்டில இந்த ளவு வாரப்பாடு இருக்கக்கூடாதென்று செவ்வாய் வெள்ளி சாம்பி ராணி காட்டக்கூட மனம் வாறேல்ல உங்களுக்கு. ஊருக்குப் போய் தான் பொங்கிறதெண்டு அந்த ஏழு வருஷமும் பொங்கலே இல்ல அந்த வீட்டில... வீடு ஒழுகுதெண்டு பக்கத்துவீட்டு அண் ணையின்ர தரப்பாளைக்கூட போடாமல், ஒழுக்கு இல்லாத இடமாய் பாத்து ஒதுங்கி ஒதுங்கிப் படுத்தனீங்கள். சங்கக்கடை யில பொலுத்தீன் வாங்கிக்கொண்டு வந்து தட்டத்தனியனாய் ஒழுக்குக்கு நான் செருக, சொந்த வீட்டிலகூட மனிசர் இப்பிடி அக்கறைப்படமாட்டுதுகள். இது என்னடாவெண்டால் விசர்க் கோலம் கொண்டு அலையுது என்று புறுபுறுத்தபடி பக்கத்து வீட்டு மனிசியோட ஊர்ப்புதினம் அளந்தனீங்களெல்லே. இடம்பெயர்ந்து ஒண்ட இடமில்லாமல் தவிச்ச எங்களை ஏழு வருஷம் வாழவைத்த அந்த வீட்டில இல்லாத அக்கறை இஞ்சமட்டும் ஏன் வரவேணும்?

'நான் இப்பிடி நடக்கிறது பிழையெண்டு எனக்கு வடிவாத் தெரியுது. ஆனாலும் இவ இப்பிடி ஓடித்திரிய ஆவேசமாக்கிடக்கு. ஏதோ நினைப்பு. அந்தரிச்சுப்போய் நிற்கும்போது எவ்வளவு இதமாகக் கதைச்சு தங்கட வளவுக்கை கொட்டில் போட இடங் கொடுத்த அவையப் பற்றி இவ்வளவு மட்டமாக் கதைக்கேக்கை உண்மையில் அவ என்ரை அம்மாவோ எண்டும் சந்தேகம் வருகுது. இந்த அவிச்சலுக்குள்ள என்னெண்டுதான் காலம் போகுதோ? எண்ட புறுபுறுப்பை மழைக்காலத்தில் முழங்கால் புதையிற சேற்றில என்னெண்டுதான் இதுகள் சீவிக்குதுகளோ? எண்டு மாத்திப்போடுவா. வீட்டு வளவுக்கை உண்டாக்கின கத்தரி, பயித்தை, மிளகாய் எண்டு வீட்டுக்கார அண்ணை குடுக்கிற எல்லாத்தையும் வாங்கிச் சமைத்துக்கொண்டே 'எடி உனக்கு ஒரு புதினம் தெரியுமே... உந்தப் புளியும், வயலுக்கை வாற நெல்லும், செத்தலும் போக உப்பும் கருவாடும் கொஞ்சம் காசு கொடுத்து வாங்கினால், மழைக்காலம் முழுக்க வயித்துப்பாட்டுக்கு போதும் எண்டு உந்தக் கிழவி சொல்லுது' என்று நொடிக்கும்போது அம்மா எண்டும் பாராமல் மனம் ஆங்காரம் கொள்ளுது. இவ



படிப்பகம்

www.padippakam.com

மாறமாட்டாவோ?

'என்னெண்டாலும் என்ர அம்மா. அவவை கவலைப்படுத்தாமல் பார்க்க வேணும். எனக்கு எங்கிருந்து இந்தப் பழி தீர்க்கிற புத்தி வந்ததோ தெரியேல்லை. தேப்பன் மாதிரி எல்லாத்தையும் மனசுக்கை வைத்து புழுங்கிற சாதியெண்டு அம்மா திட்டுறது சரிதான். சரியோ பிழையோ எல்லாத்தையும் உடனுக்குடன் கக்கிவிடுவாள். என்னைப்போல் சாதிக்கமாட்டாள் என்றளவில் என்னைவிட அம்மா மேல்தான்'.

* * *


போனவுடன் அந்த முல்லைக்கொடிக்கு ஒரு தடி நடவேணும் என்று நினைத்தபடி பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வந்த பரிதியை தன் பாரம் எல்லாவற்றையும் புதிய தடியொன்றில் ஒப்படைத்துவிட்டு நின்ற அந்த முல்லைக்கொடி வரவேற்றது. இதென்ன உலக மகா அதிசயம் என்றபடி தாயை ஏறிட்டு நோக்கிய மகளின் விழிகளை சந்திக்கும் திராணி, தான் அறியாமல் விட்ட பிழைகளுக்காக பகல் முழுக்க அழுதழுது வீங்கிய அந்தத் தாயின் விழிகளுக்கு இருக்கவில்லை.

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# பூ ஒன்று புயலானது

## கிருஷ்ணவேணி

பத்திரிகையைப் புரட்டி மீண்டும் அந்தப் படத்தைப் பார்த்தாள் சுபாங்கி. எத்தனை தடவைகள் பார்த்தும் இன்னும் ஞாபகம் வரவில்லை. அடர்ந்த தாடியும் மீசையும் வெட்டப்படாத தலைமயிருமாக ஒரு இளைஞனின் படம் வெளியிடப்பட்டிருந்தது. எங்கோ பார்த்த முகம். பழகிய முகம். சட்டென்று ஞாபகம் வரவில்லை. இந்த நேரம் பார்த்து அவளுடைய கணவனும் வீட்டில் இல்லை. அவன் என்றால் ஒரு தடவை பார்த்தால் அப்படியே ஞாபகம் வைத்திருப்பான். பார்த்ததும் பட்டென்று சொல்லிவிடுவான். அவளுக்குப் பழகிய முகம் என்றால் அவனுக்கும் நிச்சயம் தெரியத்தானே வேண்டும். மீண்டும் மீண்டும் அந்த இளைஞனை ஞாபகப்படுத்திப் பார்த்து ஞாபகம் வராததால் அலுத்துப் போனவளாய் பத்திரிகையை மடித்து மேசையில் போட்டுவிட்டு எழுந்தாள் சுபாங்கி. அவளது ஒன்றரை வயதுக் குழந்தை தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

'குழந்தை எழும்புவதற்குள் ஒருக்கால் தோட்டத்துக்குப் போய் வந்துவிட வேண்டும்' என்று எண்ணியவளாய் மெதுவாகக் கதவைச் சாத்திவிட்டு வேகமாகத் தோட்டத்தை நோக்கி நடந்தாள் சுபாங்கி. காலை நேரத்து வெயில் பட்டென்று சுட்டது. கிணற்றடிப் பக்கமாகக் கிடந்த இரண்டு தேங்காய்களை எடுத்து தான் வரும் பாதையில் போட்டுவிட்டு நெருக்கமாக நின்றிருந்த சில தென்னை மரங்களுக்கு மத்தியில் வந்தாள். வேகமாக வந்தவள் ஏதோ நெஞ்சை நெருட பட்டென்று நடையைக் கட்டுப்படுத்தினாள். இனம் புரியாத ஒரு நெருடல். இதயம் பட்டென்று நின்றதைப் போல் உணர்ந்தாள். மீண்டும் வீட்டை நொக்கி நடக்க முற்பட்டாள். கால்கள் துவண்டன. நிலத்தோடு சேர்ந்துகொண்டு கால்கள் வர மறுத்தன. இதய வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் மூச்சு இரைந்தது. ஒருவாறு வீட்டை அடைந்தாள். 'கடவுளே எனது எண்ணம் பிழையாக இருக்கவேண்டும்' என எண்ணிக்கொண்டே மடித்துப் போட்ட பத்திரிகையை மீண்டும் வேகமாகப் புரட்டி அந்தப் படத்தை உற்றுப்பார்த்தாள். அதே முகம். அதே உருவம். அதே கண்கள். சுபாங்கியால் நம்ப முடியவில்லை. அங்கே நந்தகுமார் அடர்ந்த தாடியும், மீசையும், வெட்டப்படாத தலைமயிருமாக அந்தப் படத்தில் காட்சி தந்தான்.

* * *

சுபாங்கியால் நம்ப முடியவில்லை. இது.. இது உண்மையா... எப்படி.. எப்படி என மனம் ஓலமிட்டது. அவனா இப்படி.. மீண்டும் அந்தப்படத்தின் கீழ் பெரிய எழுத்துக்களாய் அச்சிடப்பட்டிருந்ததை வாசித்தாள்.

"அன்பார்ந்த தேசப்பற்றாளர்களே!

இதோ இங்கு வெளியாகியிருக்கும் இப் படத்துக்குரியவன் ஒரு தேசத்துரோகி. பயங்கர ஏமாற்றுக்காரன். இவன் கடந்த சில ஆண்டுகளாக எமது பகுதியிலேயே இருந்துகொண்டு எமது மக்களுக்கும், எமது தேசத்திற்கும் துரோகம் செய்துகொண்டிருக்கிறான். எனினும் அவனை அடையாளம் காணமுடியாமலுள்ளது. வன்னியில் நடந்த பல அவலங்களுக்கு உறுதுணையாக இருந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய துரோகச் செயலில் ஈடுபடு



படிப்பகம்

www.padippakam.com

பவர்கள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். எனவே இவனைப் பிடிப்பதில் மக்களின் ஆதரவை நாடி நிக்கின் றோம்...” என்று தொடர்ந்தது. படித்து முடித்த சுபாங்கிக்கு ஓவென அலற வேண்டும் போல் இருந்தது. ஒன்றுமே விளங்கவில்லை. கண்கள் இருள கால்கள் துவள அப்படியே சரிந்து விழுந்தாள்.

* * *

சுபாங்கி பெற்றோருக்கு ஒரே பிள்ளை. படிப்பை முடித்துவிட்டு கழகத்தில் ஒரு இணைப்பாளராக இருந்தாள். இயற்கையிலேயே இரக்க குணம் கொண்டவள். பெண்கள் முன்னேற்றம் தொடர் பான பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதில் துணிவுடன் ஈடு படுவாள். எடுத்த செயல்களையும் திறமையாகச் செயற்படுத்தும் வல்லமையும், அபார துணிச்சலும் கொண்டவள். சிறந்த முற் போக்குச் சிந்தனைவாதி அவள்.

சுபாங்கியின் பெற்றோருக்கு வன்னியில் ஒரு பண்ணை அள விற்கு பெரிய தோட்டம் இருந்தது. அவளது அப்பா சிறந்த விவ சாயி. அவரது தோட்டத்தில் நிறைய தென்னை மரங்களும், மா, பலா, வாழை, தேசி எனப் பல மரங்களும், ஒரு புறத்தில் மிளகாய், தக்காளி, கத்தரி, என சிறு பயிர்களுமாக தோட்டம் எப்பொழுதும் பசுமையாகவே இருக்கும். சுபாங்கி தனது வேலை நேரங்களை விட ஏனைய நேரங்களை அந்தத் தோட்டத்தில் கழிப்பதில் மகிழ் வடைவாள்.

அந்தத் தோட்டத்தில்தான் அவள் நந்தகுமாரனை ஒருநாள் கண்டாள். விழுந்துகிடந்த தென்னை மரத்தின் ஓலைகள் சல சலக்க அவள் உற்றுப்பார்த்தாள். மிகப் பதிவாக இருந்த ஒரு தென்னை மரத்தில் ஒரு மனிதன் அரைவாசித்தூரம் ஏறியிருந் தான்.

தாடியும் மீசையும் ஒரு கரிய உருவம் தென்னை மரத்தில் இருப்பதைக் கண்டு ஒரு முறை சுபாங்கி திடுக்கிட்டாலும், திருடன் என்பதை உணர்ந்தவளாய்,

“ஏய் யாரது, யாரது மரத்தில் தேங்காய் திருடுகிறாயா இறங்கு”



படிப்பகம்

www.padippakam.com

என அதட்டினாள் சுபாங்கி.

"ஒரேயொரு இளநீர் மட்டும்..."

என்று முனங்கினான் அந்த மனிதன். வார்த்தைகள் தெளிவில் லாமல் வந்தன.

"முதலில் இறங்கு களவெடுக்க வந்த உனக்கு..."

என்று கோபமாய்க் கத்தினாள் சுபாங்கி. அவன் இறங்கி தள் ளாடித் தள்ளாடி நடந்து வந்தான். மிகவும் களைப்பாய் இருந் தான். முப்பது வயதுதான் இருக்கும். சோர்வால் முதுமையடைந்த வன்போல் காணப்பட்டான். தாடியும் மீசையும் அவன் முகத்தை விழுங்கியிருந்தது.

வந்தவன் தடுமாறி வார்த்தைகளை உதிர்த்தான்.

"நான் களவெடுக்க வரவில்லை. எனக்கு.. எனக்கு சரியான பசி. இந்த வழியால வரேக்க இந்த தென்னை மரத்தில் ஒரு இள நியாவது வெட்டிக்குடிப்பமெண்டுதான்..."

அவன் இழுத்தான். அவனுக்குச் சரியான பசி என்பது அவனது பேச்சிலிருந்த தடுமாற்றம் உணர்த்தியது.

அவள் மேலும் எதுவும் பேசாது தனது கையிலிருந்த சிறிய கத்தியை தென்னை மரத்தின் இளநீர் குலையை நோக்கி எறிந் தாள். விர்...ர்... என்று சுழன்று கொண்டு பறந்துசென்ற கத்தி நேராக இளநீர்க் குலையில்பட குலை கீழே விழுந்து சிதறியது. அவன் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான். இளநீரைப் பொறுக்கிவந்து அவனுக்கு அருகே போட்டுவிட்டு கத்தியையும் கொடுத்தாள். மளமளவென்று இரண்டு இளநீரை வெட்டிக் குடித் துவிட்டு, அதனுள்ளிருந்த வழுக்கலையும் தின்றான். அவன் ஓர ளவு பசிக்களை தீர நிமிர்ந்து பார்த்தான். எதுவுமே பேசாது தன் னைப் பார்த்துக்கொண்டிருந்த சுபாங்கியை நன்றியோடு பார்த் தான். அவள் கண்களில் இரக்கமும் பரிவும் தெரிந்தது. அவள் கேட்காமலே அவன் தன்னைப் பற்றிச் சொன்னான்.

* * *



படிப்பகம்

www.padippakam.com

“என்ர பேர் நந்தகுமார். எங்கட சொந்த இடம் யாழ்ப்பாணம். இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்தனான். நானும் அம்மாவும் தான். அம்மாவ கிளாலி கடலில நேவி சுட்டுப்போட்டான்”

என்று நிறுத்தியவன் கண்களில் துளிர்த்த நீரை அடக்கிக் கொண்டான்.

“நான் ஒருவாறு தப்பிவந்திட்டன். எனக்கு வன்னியில ஒருவரையும் தெரியாது. யாழ்ப்பாணத்தால வரும்போது எங்கட உடைமைகளைக்கூட எடுக்க நேர அவகாசம் கிடைக்கவில்ல. அதனால தான் இந்த நிலை”

என்று அவனே தொடர்ந்தான். அவனது குரலில் வேதனை நிறைந்திருந்தது. தொண்டை அடைக்க அவன் சொன்னது கேட்டு சுபாங்கி கலங்கிப் போனாள். அவனது சோகம் அவள் கண்களை கலங்கச் செய்தன.

* * *

நந்தகுமார் சுபாங்கியின் அப்பாவின் தோட்டத்திலேயே வேலைக்குச் சேர்ந்துவிட்டான். அவருக்கு மிகவும் உதவியாக இருந்தான். அவன் தோற்றமே மாறியிருந்தது. ஆரம்பத்தில் கண்ட நந்தகுமாரா? இவன் என்ற அளவுக்கு மாறிவிட்டிருந்தான். தலைமயிரை அளவாக வெட்டி தாடி மீசை எல்லாம் வழித்து விட்டிருந்தான். வெயில் மழை என்று பாராமல் வேலை செய்தான். அவளது பெற்றோருக்கு நம்பிக்கைக்குரியவன் ஆனான். நன்றியுடையவனாக நடந்துகொண்டான். சில நேரங்களில் அவன் சுபாங்கியோடு கதைப்பான்.

“சுபாங்கி அன்றைக்கு நீங்கள் எப்படி கீழ நின்றே அந்தக் கத்தியை இளநீயை நோக்கி எறிந்து விழுத்தினீங்கள். அபாரம்”

என்றான். அவளது பெண்கள் முன்னேற்ற கழக செயற்பாடுகள் பற்றியெல்லாம் கேட்டு அறிந்துகொள்வான். சில ஆலோசனைகளையும் சொல்வான். அவனது பேச்சில் சமூகப்பற்று நிறைந்திருக்கும். பெரும்பாலும் அவனது கொள்கை அவளோடு ஒத்திருந்தது. அவளது முன்னேற்றகரமான செயல்களுக்கு ஆதர



படிப்பகம்

www.padippakam.com

வாய் பேசுவான். இருவரின் சிந்தனையும் ஒருமித்தே இருக்கும்.

சுபாங்கியின் அப்பா, அம்மாவிடம்

"எங்கட சுபாட கொள்கையும் அவன் நந்தகுமாரின்ர கொள் கையும் ஒரேவிதமாய் இருக்கு. இருவருக்கும் ஒரே சிந்தனை. அவன் நல்ல பிள்ளையும்கூட. பேசாமல் சுபாவை நந்தகுமா ருக்கே கலியாணம் செய்து வைத்தால் என்ன"?

என்று கேட்க

"ஓமோம். அவனுக்கும் ஒருவரும் இல்லை. எங்களோட இருந் துவிடுவான்"

என்று அம்மாவும் ஆமோதித்தாள்.

* * *

தொட்டிலில் கிடந்த குழந்தை அழும் சத்தம் கேட்டு சுயநினை வுக்கு வந்தாள் சுபாங்கி. குழந்தையைத் தூக்கி ஆறுதல் படுத்தி னாள். அவள் மனம் மட்டும் துடியாய்த் துடித்தது. அப்படிப்பட்ட அவனா இப்படி? அவளால் நம்ப முடியவில்லை.

"ஆரம்பத்திலிருந்தே அவன் திட்டமிட்டு செயற்பட்டிருக்கி றான். ஒரு துரோகச் செயலுக்காக எத்தனை நடிப்பு, எத்தனை பாசாங்கு. என்னையும் என் பெற்றோரையும் நல்லாய் ஏமாத்திப் போட்டான். தனது துரோகச் செயலுக்காக என்னையும் உடந்தை யாக்கியிருக்கிறான். நல்லவனாய் நடித்துக் கொண்டு தனது செயற்பாட்டையும் நகர்த்திக் கொண்டிருந்திருக்கிறான். எப்பவும் அறிவாகச் செயற்படும் நான் நம்பி ஏமாந்து போனேனே"

என்று அழுது புலம்பினாள் சுபாங்கி.

"எங்கட முட்டாள் தனத்தால எத்தினை அவலங்கள் நடந்திருக் கிறது"

எண்ணிப்பார்த்து வேதனைப்பட்டாள் அவள். ஏதோ சகோதர னிடம் இருந்து கடிதம் வந்ததாகச் சொல்லியல்லவா நந்தகுமார்



படிப்பகம்

www.padippakam.com

போயிருக்கிறான். இல்லையில்லை தன்ர வேலை முடிந்து ஓடிவிட் டான். ஆமாம் அவனுக்குத்தான் உறவுகளே இல்லை என்றானே. எல்லாமே பொய், ஏமாற்று.

அவனுக்கு வந்த கடிதம் மேசையிலேயே கிடந்தது. எடுத்துப் பார்த்தாள். குணசீலன் என கொழும்பை மையப்படுத்தி முகவரி இடப்பட்டிருந்தது. ஏமாற்றமும், அவமானமும், கோபமும் அவள் இதயத்தை நிறைத்திருந்தது.

* * *

தபால்காரன் தந்துவிட்டுப்போன கடிதத்தைப் பிரித்தாள்.

"சுபாங்கிக்கு... நந்தகுமார் எழுதுவது...."

என்றிருந்தது. அவள் நினைத்தது சரி. குணசீலன் என முகவரி போட்ட கடிதம் நந்தகுமாரின் முகவரியாக இருக்கலாமென எண்ணி, அவள் போட்ட கடிதத்திற்கு பதில்தான் இந்தக் கடிதம். கடிதம் தொடர்ந்தது.

"உன் கடிதம் கிடைத்தது. நான் வந்தபிறகு பல விடயங்களைப் புரிந்துகொண்டிருப்பாய். எனினும் என்னைப் பற்றி முழுதும் அறிந்த பிறகும் நீ இங்கு என்னுடன் வந்துவிட விரும்புவதையிட்டு மகிழ்ச்சி. நம் குழந்தையில் மிகவும் பாசமாய் இருக்கிறேன்"

என தொடர்ந்தது கடிதம். வருவது எப்படி என்றெல்லாம் விப ரித்திருந்தான்.

ஒரு மாலைநேரம் அந்த வீட்டை அடைந்தாள் சுபாங்கி. வீட்டில் செல்வம் நாட்டியம் புரிந்தது. மாடியிலிருந்து இறங்கிவந்த நந்த குமார் குழந்தையை வாங்கிக்கொண்டான். அவனது தாயும் தங் கையும் அவளுடன் பாசமாய் பழகினர். எல்லாமே அவள் எதிர் பார்த்ததுதான்.

"சுபாங்கி இங்கு உனக்கு ஒரு குறையும் இருக்காது. நமது வாழ்வு சுகமாக இருக்கும். நான் வன்னியில் இருந்த சில ஆண்டு களுக்காக பல கோடிகளுக்கு அதிபதியாகிவிட்டேன். இதில் உனக்கும் பங்குண்டு. உனது ஒத்துழைப்பால் தானே நான்



படிப்பகம்

www.padippakam.com

வெற்றியடைய முடிந்தது”

அவன் ஏதோ சாதனை புரிந்தவன் போன்று பேசினான்.

“எவ்வளவுதான் நீ முற்போக்குவாதியாக இருந்து சாதனை படைத்தாலும் நீயும் ஒரு பெண் என்றதை சாதிச்சிட்டாய். என்னைப் பற்றித் தெரிந்தும் கணவன் எவ்வழியோ மனைவியும் அவ்வழிதான் என்று... கணவனே தெய்வம் என்று.... வந்து விட்டாய் பார். உத்தமப் பெண்ணுக்கு இதுதான் அழகு” என்று பாராட்டினான் நந்தகுமாரன்.

வன்னியில் நடந்த அவலங்கள் பல பணமாக வடிவெடுத்து அவனது வீட்டைச் செழிப்பாக்கியிருந்ததைக் கண்டாள் சுபாங்கி. வார்த்தைகள் அவள் வாயில் இருந்து வர மறுத்தன. வேதனை தொண்டையை அடைத்தது. அவள் வந்த நோக்கத்தை நிறைவேற்றும் நாளுக்காகக் காத்திருந்தாள்.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. சூரியன் பூமியில் கதிர்களைப் பரப்ப ஆரம்பித்த நேரம் வீட்டில் ஒருவரும் இல்லை. காலை உணவாக பாணை வெட்டி ஜாம் பூசிக்கொண்டிருந்தாள் சுபாங்கி. நந்தகுமார் கதிரையில் அமர்ந்திருந்தான். சுபாங்கி தன் நோக்கத்தை நிறைவேற்றத் துணிந்த நேரம் நல்ல சந்தர்ப்பம். அவள் இதயம் வேகமாக அடித்தது. கைகள் நடுங்கின. ஒரு துரோகியால் தனக்கும் தேசத்துக்கும் நேர்ந்த கொடூரம் அவள் இதயத்தை இறுக்கியது. கைகள் வலிமைபெற ஒரு துரோகியை அழிக்கப் போகிறோம் என்ற நினைவு அவளுள் புது வேகத்தைக் கொண்டு வந்தது. கண்ணிமைக்கும் நேரம் பாண் வெட்டிய கத்தியை லாவகமாகச் சுழற்றி அவனை நோக்கி எறிந்தாள் சுபாங்கி. நந்தகுமார் சற்றும் எதிர்பார்க்காமல் இருக்க காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த கத்தி அவன் குரல்வளையை அடைத்திருந்தது.

“ஆ... சுபாங்கி...”

என்று அலறியவாறே நிலத்தில் சாய்ந்தான் நந்தகுமார்.



படிப்பகம்

www.padippakam.com

தன் குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள். வேகமாகச் சாலையைக் கடந்து பிரதான வீதிக்கு வந்து வடக்குநோக்கி வந்துகொண்டிருந்த பேருந்தில் ஏறி அமர்ந்துகொண்டாள். முகத்தில் வழிந்த வியர்வையோடு கண்க ளில் துளிர்த்த கண்ணீரையும் துடைத்துக் கொண்டாள் சுபாங்கி.

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# எங்க கண்ணைத் திறவுங்கோ...

அகநிலா

"ஸ்கேட் கறுப்பு... பிளவுஸ் கறுப்பில வெள்ளைப்புள்ளி.. பூள் கறுப்பு... யேய் உள்ளுக்கும் எல்லாம் கறுப்போ..."

அவள் பதில் எதுவும் சொல்லவில்லை. எப்படியெண்டாலும் இரண்டு மாதங்களுக்கு ராக்கிங் தொடரும்.

"யேய் உன்னைத்தான் கேக்கிறன்..."

அவன் நெருமிக்கொண்டு மீண்டும் கேட்டான். அவள் பதில் அப்பவும் மௌனம்தான். அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொன்னாலும் குற்றம். சொல்லாமல் விட்டாலும் குற்றம். எந்தப் பதிலானாலும் வக்கீலாய் குதறி விடுவார்கள்.

"யேய் என்னடி பேர்"?

"தமிழ்நிலா"

"என்னடி ரெஸ்ற் ரியூப்போ? நீ உருவான விந்துக்காரனுக்கு தமிழ்ப்பற்று இருந்ததோ? உன்னை வளர்த்தவனுக்



படிப்பகம்

www.padippakam.com

குத் தமிழ்ப்பற்று இருந்துதோ... தமிழ்... நிலாவாம், த..மி...ழ்.. நி...லா..."

அன்று அவன் குதறிய குதறல் பாடமாய் போக, தமிழ்நிலா ஜெயக்குமார் என்றாள். அவனுக்கு வந்ததே கோபம்.

"ஆரடி உன்ர கொப்பற்ற பேர் கேட்டது. சொல்லடி தமிழ்நிலா ரமேஸ் என்று"

அவன் தன் பெயரையும் இணைத்துச் சொல்ல வைத்தான். வம்பே வேண்டாம் என்றுதான் அவள் மௌனமாயிருந்தாள்.

எங்கிருந்தோ பாய்ந்துவந்தான் மற்றொருவன்.

"என்னவாமடா உவள்...? அம்சமாய்தான் இருக்கிறாள்"

"அம்சமாய்தான் இருக்கிறாளடா ஆனா... அழுத்தக்காரி யடா..."

நடுவில் மற்றொருவனும் சேர்ந்துகொண்டான்.

"அழுத்தமோ...? இவள் மரமடா... அதுவும் அத்திமரமடா... பட்டமரமடா..."

வந்த நாளிலிருந்து அவன் அணுகிப்பார்த்துவிட்டு வைத்த வசவுப்பெயர்கள் அவை.

"எடி முண்டம். நீ அத்திமரமோடி...?"

அவளில் எந்தச் சலனமுமில்லை.

ரூபிக்குத்தான் துடித்தது. அவளுக்கு தமிழ்நிலாவைச் சில வேளைகளில் புரிவதுபோலவும் இருந்தது. சில வேளைகளில் புரியாததுபோலவும் இருந்தது.

தமிழ்நிலா... புயலரசன்... ரூபியின் பக்கத்து வீடுதான் புயல ரசன் வீடு. புயலரசன் புயலரசனாய் தடம்பதிக்க முன் ரகுவாய் ஹாட்லிக் கல்லூரியில் அக்காவோடு நின்று படித்துக்கொண்டிருந் தவன். இடப்பெயர்வோடதான் தடத்தை மாற்றிக்கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com

என்ஜினியராய் வருவான் என்று எல்லோரும் காத்திருக்கை யில் இவன் இருப்பிழந்துபோன தேசத்தை நிர்மாணிக்கும் பணி யில் பயணித்துப் போயிருந்தான்.

ஐந்து வருடங்களின் பின் வந்தபோது அவனுடன் தான் தமிழ் நிலாவும் வந்திருந்தாள். தூரத்து உறவாய் அவளை அவளது பெற்றோர் கேட்டவர்களுக்குச் சொன்னார்கள். அவன் அப்படித் தான் சொல்லச் சொல்லியிருக்க வேண்டும். ரூபிக்கு புயலரசனின் ஒன்றுவிட்ட தங்கை வினி நண்பியாய் அவனது உறவுகள் யாவும் அத்துப்படி. அவனும் கூட அவளது நண்பனே. ஆனா யாரும் பெரிசா அவள் தொடர்பாய்க் கேட்டதில்லை. அவனுடைய முகச் சாயல் அவளிடமும் இருந்தது. பார்க்கிறவர்கள் ஏதோ ஒரு உற வுச் சகோதரர்கள் என்றும், அவர்கள் உறவே தெரியாதவர்கள் அவனுடைய சகோதரியாய் இருக்க வேண்டும் என்றும் கருதக் கூடிய வகையிலான சாயல் ஒற்றுமை.

புயலரசனும், ரூபியிடம் தமிழ்நிலா தொடர்பாய் சொன்ன தில்லை. அவளும் அவனிடம் அது தொடர்பாய் கேட்டதில்லை.

ரூபிக்கு தமிழ்நிலாவைக் கண்ட அன்றே பிடித்துப்போயிற்று. வானிலா என்று வைத்திருக்கலாம் என்று தோன்றும் அவளுக்கு. வட்ட முகம். வானத்து நிலவு போலவே எப்பவும் பார்த்துக்கொண் டிருக்கலாம்போல தோற்றம். எதையோ எப்பவும் தேடும் தீவிரம். நிலவு போலவே கலைந்துபோகும் முகிலுக்குள் வானத்தில் தேடுறதுபோல. கேட்ட கேள்விக்கு மட்டும் பதில். அவளின் உயர் உளப்பாங்குகள், அமைதி பூசித்திரியும் அழகு யாரையும் ஈர்க்கத் தான் செய்யம். வளர்பிறை என்பதும் தேய்பிறை என்பதும் நிலவுக்குத் தெரியாது... எங்கேயோ ஒரு கவிஞன் பாடிய வரிகள், ஆனால் அவளுக்கு அது தெரியும். ஒரு போது வளர்பிறை போல வருவாள். ஒரு போது தேய்பிறை போல வருவாள்.

நிலவில இருக்கிற இருட்டைப்போல அவளுக்குள்ளேயும் ஒரு இருட்டு, இரும்புத்திரை இருக்க வேணும் என்று தோன்றிற்று ரூபிக்கு.

“வந்து... நான்... தமிழ்நிலாவை நேசிக்கிறன்.. அவவால என்



படிப்பகம்

www.padippakam.com

னப் புரிந்துகொள்ள முடியேல்லப்போல... நீர்தான் ரூபி எடுத்துச்சொல்லவேணும்”

கரனின் வேண்டுதல் ரூபிக்கு உதவத்தோன்றிற்று.

“முயன்று பார்க்கிறன் கரன்... ஆ...னா...”

“ஆனா... என்ன.. ரூபி..”

“அது ஒரு பிறப்பு, முயன்று பார்க்கிறன்....”

என்றவளிடம் பெருமூச்சு. இவனுக்காக எத்தின பிள்ளையள் காத்திருக்க இவனென்னண்டால் அந்தச் சிந்தனையே அற்றிருக்கும் இவளுக்காகக் காத்திருக்கிறான்.

அன்று தமிழ்நிலா ரூமில்தான் நின்றாள். ரூபிக்கும் விரிவுரைகள் இல்லை.

“தமிழ்நிலா கேக்கிறன் எண்டு கோபிக்கக்கூடாது. ஆனா... பதில் வேணும்”

தமிழ்நிலாவுக்கு அவளின் கண்ணியமான கேள்வி சிரிப்பை வரவழைத்தது.

“ஏன் சிரிக்கிறீர் நிலா...?”

தமிழ்நிலாவைச் சுருக்கி சில வேளைகளில் அவள் அப்படித்தான் அழைப்பாள். ஆனா தமிழ்நிலாவுக்கு தமிழையும் சேர்த்து தமிழ்நிலா என்று அழைப்பதுதான் பிடித்தமானது.

“எப்ப நீர் இப்பிடிக் கதைக்கப் பழகினனீர்”

எப்பவும் வெடுசுடு என்று கதைப்பவள், கலகலப்பவள் ரூபி.

“கதைய மாத்தவேண்டாம். கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லும். கரனுக்கு என்ன குறை...?”

“கரனுக்கு என்ன குறை. நல்ல கெட்டிக்காரன். ஆளுமையுள்ளவன். தெளிவுள்ளவன். அவன்தான் எங்கட பச்சில் கிளாஸ்



படிப்பகம்

www.padippakam.com

அடிப்பான் எண்டு நினைக்கிறன்"

"ரெண்டு பேரும்தான் போட்டி போடுறியள். அப்ப ஏன் மறுக்கி றீர்...?"

"இப்ப என்ன அவசரம் ரூபி...?"

எப்பவும்போல இப்படியான கேள்விகளுக்கு அழுத்தமான பதில்தான் அவளிடம் அதுக்கு மேல பதிலளிக்கமாட்டாள். அதுக்கு மேலேயும் கேள்விகேட்டால் அவளின் பார்வையே பொசுக்கி விடுவதாய்த் தோன்றும் ரூபிக்கு. நிலவும் சுடுமா என்று எண்ணிக் கொள்வதோடு அன்று முழுவதும் சிடுசிடுத்துக்கொள்வாள் ரூபி. என்ன ரகமோ... வாழத் தெரியாதது... இதுக்குக் குடுத்து வச்சது அவ்வளவுந்தான்.

ஆருமே 'அவர்களைத்தவிர' அந்த இடப்பெயர்வை எதிர்பார்க் கேல்ல. அவர்கள் படித்துப்படித்துச் சொன்னபோது ஆற்ற காதி லையும் ஏறேல்ல. ஏறாத செய்தியின்ர விளைவு...?

வரலாற்றில் பதிவாகிப்போன அவலம். வரலாறு காணாத மனித அவலங்கள் அந்த மாபெரும் இடப்பெயர்வில் நடந்தேறின. காலம் காலமாய் பெயரோடும் புகழோடும் வாழ்ந்த மக்களில எட்டு லட்சம் பேர் ஒரு குறுகிய பரப்பால தம் மானங்காக்க இடம்பெயர்ந்த இருண்டுபோன நாட்கள் அவை.

எழுத்தாளர் தாமரைச்செல்வியின் 'மழைக்கால இருட்டு' சிறு கதைத் தொகுதியில் வரும் ஒரு சில சிறுகதைகள் அந்த அவலங் களில் ஒரு துளி. இன்னும் சொல்லப்படாத சொல்ல முடியாத செய்திகள் பெருவெள்ளமாய்.

மனித நேயத்துக்குச் சாவுமணி அடித்த இடப்பெயர்வு. மனித நேய நிறுவனங்களில் கறைபடிந்த பக்கங்கள் அது.

தொட்டிலில் கிடந்த பிள்ளையைக்கூட எடுத்து வராதுபோன, எடுத்து வரமுடியாதுபோன அவலம்...

அன்று திக்கொன்றாய் சிந்தியவர்கள்தான். பின்பு அந்த அறி வித்தலை அடுத்து, தயங்கித்தயங்கி அங்கொருவராய் இங்கொரு



படிப்பகம்

www.padippakam.com

வராய் 'வாழ்க்கை வறண்டு போய்விடுமே' என்ற அவலத்தில் கால்பதித்தார்கள்.

போட்டிப் பரீட்சையில் பெறுதற்கரிய வாய்ப்பாய் கிடைத்த மேற் படிப்பைத் தொடர வராதவர்களில் தமிழ்நிலாவும் ஒருத்தி. தேசத்தை வளமாக்கவேண்டிய புத்தி ஜீவிகளில் வசதிவாய்ப்புள்ள பலர் படித்தது போதுமென்று அந்நிய நாடுகளில் அடைக்கலம் தேடிய காலப்பகுதிகளில் அக்காலப் பகுதியும் பதிவாகியிருந்தது.

ரூபிக்கு என்னவோ தமிழ்நிலா அப்பிடிப் போயிருக்கமாட்டாள் என்றே தோன்றிற்று. ஆனாலும் அவள் பற்றி எந்தச் செய்தியும் இல்லை. சில மாதங்கள் காத்திருந்துவிட்டு அவள் ரூமில் புதிய வள் ஒருத்தியை இருத்திக் கொண்டார் வீட்டு உரிமையாளர்.

கரனுக்கும்கூட இவள் எங்கேயென்று தெரியவில்லை. அவ னும்கூட முயற்சியைக் கைவிடேல்ல.

காலங்கள்தான் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே. எது நடக்கும் என்று அஞ்சி அஞ்சிப் பயந்தார்களோ அது அன்று நடந்தேறிப்போனது.

எல்லாமே வெறிச்சோடிப்போய்.... மயான அமைதி... வானொ லிகள் தொலைக்காட்சிகள் மட்டும் கதறிக்கொண்டிருந்தன. எப்ப வும் எதுவும் நடக்கலாம்.

நிலமை தணிந்து எதிர்பார்ப்புகள் கலைந்து நடமாட்டம் தொடங்கியபோதுதான் சண்டே ரைம்ஸ் பத்திரிகையைப் பார்த்த வள் அந்தப் படத்தைப் பார்த்து உறைந்தே போனாள்.

காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லைதான், ஆனா... காலங்களுக்காக அவள் காத்திருந்திருக்கிறாள்.

ரூபியின் உதடுகள் துடித்தன. அவள் அத்திமரமல்ல. பனை மரம். ரூபிக்கு மட்டும்தான் தெரியும் அவள் முழங்கால் இறைக் குள் இருந்த மச்சம்.

* * *



படிப்பகம்

www.padippakam.com

“அம்மா எங்கட புது ரீச்சர் ஏன் உங்களுக்கு தமிழ்நிலா என்று பேர் வைச்சது, அம்மா தமிழில சரியான பற்றோ எண்டு கேட் டவா…”

“நீங்கள் என்ன சொன்னனியள்…”

“அம்மாட படிச்ச அன்ரியின்ர பேர் எண்டு அம்மா சொன்னவா எண்டு சொன்னனான். அப்ப நீங்கள் ரூபி ரீச்சற்ற மகளோ எண்டு கேட்டவா. அம்மா, தமிழ்நிலா அன்ரி வெளிநாட்டில எண்டெல்லோ சொன்னனீங்கள். எங்கட வகுப்புக் கிருத்திகாவைத் தெரியு மல்லோ, அவளிட அன்ரி பிள்ளைகளெல்லாம் சமாதானம் எண்டு வந்து நிக்கினமாம் எண்டு சொன்னவள். எங்கட தமிழ்நிலா அன்ரியும் வருவாவோ…. கிருத்திக்கு அவா வடிவான பாக், பேனா, பென்சிலெல்லாம் கொண்டு வந்தவாவாம்”

‘பிள்ளையின்ர அன்ரியும் வரக்கூடிய மாதிரி இருந்திருந்தா வந்திருப்பா. இந்த சமாதானமெல்லாம் அன்ரியை மாதிரியான வர்கள் தந்ததுதான்’

என்று சொல்ல எடுத்தவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது.

அவளுக்கு நிலாந்தன் வெள்ளிநாதத்தில எழுதியிருந்த ‘சமா தானம் சமபலம்’ என்ற கட்டுரை நினைவுக்கு வந்துது.

சமபலத்தைக் கொடுத்தவர்களில், சம பலத்தையும் மேவி நிற்கும் பலத்தை கொடுத்தவர்கள் அவர்கள். அவர்கள் அர்ப்ப ணிப்புக்கள்..

“என்னம்மா அழுகிறியள்…”?

“அது ஒண்டுமில்ல செல்லம். அம்மான்ர கண்ணில தூசி விழுந்திட்டுது. ஊதி விடுங்கோ”

“எங்க கண்ணைத் திறவுங்கோ…”

✦



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# பயணம்

குமுதினி

வாசலுக்கு இன்னும் கொஞ்சத் தூரந்தான் இருந்தது. ஆனாலுமென்னவோ யுகயுகங்களாக அந்தச் சிறு கற்பாதைகள் வழியே, இதே துன்பத்துடன் நடந்து கொண்டிருப்பதான பிரமை அவளுள் எழுந்தது. துன்பத்தின் தகிக்கின்ற ஓரங்களையெல்லாம் தன் கொடுங்கரங்களுள் பற்றியிருக்கின்ற அச்சம் வேறு. இன்று காலைக்குப்பிறகு வாரப்பட்டிராத கேசத்தினுள்ளும், கழுத்தோரங்களிலும் வியர்வை கசகசத்தது. தெருவோரப் பாரவண்டிச் சில்லினுள் எதிர்பாராமல் சிக்கிக்கொண்ட தீனமான பறவை போல இதயம் நலிந்துபோயிருந்தது.

ஒவ்வொரு காலடியையும் பெயர்ந்து வைப்பதற்கு அவள் மிகுந்த சிரமப்பட்டாள். பொங்கிப் பொங்கி எழுந்து கொண்டிருந்த அழுகையின் வீச்சு அவளைச் சுயவுலகப் பிரக்ஞையிலிருந்து அப்பாலே தள்ளிச் சூனியத்துடன் புதைத்து விடுவதான வலிமையுடன் இருப்பதாய்ப்பட்டது. அழுகையைப் புறங்கையினால் அழுத்தி அழுத்தி விழுங்க முற்பட்டாள் அவள்.



படிப்பகம்

www.padippakam.com

விக்கல்கள் விரல்களின் இடைவெளியீடு தடக்கிப் பாதையோடு நீண்டிருந்த வெளிக்குள் கலந்தன.

ஒரு சீரான கதியுடன், அவள் முன்னே ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக் கொண்டு நடந்துகொண்டிருந்த அந்தப் பையனுக்கு அவள் நிலை புரிந்திருக்க வேண்டும். ஒன்றின் நிழலை இன்னொன்று தாங்கி யபடி நெடிதுயர்ந்து பாதையின் இரு மருங்கும் நீண்டுகிடக்கின்ற அந்த வைத்தியசாலைக் கட்டடங்களை இலக்கின்றி வெறித்த வாறே அவன் நடந்துகொண்டிருந்தான். அவளின் தவிப்பும் கண் ணீரும் அவனையும் ஆழப் பிழிந்திருக்க வேண்டும். ஸ்ட்ரெச்ச ரைச் சற்றே தாமதப்படுத்தி “அக்கா...” என்றபடி சற்றே அவள் நடக்கும் பக்கமாய்த் தலையைத் திருப்பினான். அவன் குரல் அவளது உலகத்து நிகழ்வுகளில் புதைந்திருப்பது தெரிந்தது.

அவள் அவசரமாய்க் கண்களைத் துடைத்தபடி திடுக்குற்றவ ளாய் முன்னும் பின்னும் பார்த்தாள். “தெரிந்தவர்கள் யாராவது தன்னை அடையாளம் கண்டுவிடக் கூடுமோ” என்று நினைவுகள் படிந்திருந்த எண்ணம் சட்டெனப் பீதியாய் விரவிற்று நெஞ்சில். கண்வரை நீண்டிருந்த பாதையின் வீச்சினுள் எவரும் தென்படா தது சற்றே அமைதியைத்தர அவனை நோக்கினாள். எதற்காய் அவன் அழைத்தான் என்ற கேள்வி முகத்திற் படர்ந்தது.

“அக்கா... அந்த வளைவு தாண்ட, மெயின்றோட்டுக்குப்போற வாசல் வரும்.... அந்த வளைவு வரைக்கும் நான் வரமுடியும். வாசல்ல ஆரும் தெரிஞ்ச ஆக்கள், நீங்கள் வாட்டில பிள்ளையை வைச்சிருக்கேக்கை இருந்த ஆக்கள் ஆரும் நிக்கலாம். உங்க ளில வித்தியாசம் தெரியாதபடி நீங்கள் உங்கள வைச்சிருக்க வேணும் அக்கா...”

தான் சொல்லவிரும்பியது, தன்னாற் சொல்ல முடிந்தது அவ்வ ளவுதான் என்பதுபோல ஸ்ட்ரெச்சரைத் தள்ளத்தொடங்கினான். அவனை, கடந்துபோன இந்தப் பத்து நாட்களிலும் வைத்திய சாலையின் ஏதேனுமொரு பகுதியில் எப்போதாவது கண்டிருந்த தாய் அவளுக்கு ஞாபகமில்லை. ஒரேமாதிரியான வெள்ளுடைக ளில், ஸ்ட்ரெச்சரைத் தள்ளியபடி வைத்தியசாலைக் கட்டடங்களி டையே நடக்கின்ற எத்தனையோ பேர்களில் அவனையும் எப்



படிப்பகம்

www.padippakam.com

போதாவது அவள் சந்தித்திருக்கக்கூடும். ஆனாலும் புற உலகம் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் ரமணா கண் விழிக்கப்போகின்ற தருணத்திற்காகவும், அவனது 'அம்மா...' என்கின்ற குழந்தைக் குரல் ஒலிக்கப்போகின்ற கணத்திற்காகவும் தன் உயிரை விழிக ளிற் தேக்கிக் காத்திருந்தவளுக்கு அந்தப் பையனை முன்னர் அறிந்திருக்க நியாயமில்லை.

நேரம் பன்னிரெண்டு மணியைக் கடந்துவிட்டிருக்க வேண்டும். மதிய நேரப் பார்வையாளர்களால் வராண்டாக்களும், வாட்டுக ளும் நிறையத் தொடங்கியிருந்தன. வழமையான நடைமுறைகள் முடிந்துவிட்டன என்பதாய்த் தாதி சொன்ன சிறிது நேரத்தில் ரமணாவின் ஸ்ட்ரெச்சரும் வார்ட்டின் அப்பாலே சற்றுத் தள்ளியி ருந்த வராண்டாவுள் கொண்டுவந்து விடப்பட்டிருந்தது. அவள் சுவ ரோரமாய் இருந்த ஸ்ட்ரெச்சரினுள் படுத்திருந்த ரமணாவின் விழி களை வெறித்தபடி எவ்வளவு நேரம் நின்றிருந்தாளோ!

பாதை கடந்து போவோரும் வருவோரும் தன்னைக் கவனிக் கக்கூடும் என்ற நினைப்பில்லாதவள் போலச் சிலையாய் உறைந் திருந்தாள் அவள்.

"என்ன புள்ள கனநேரமாய் நிக்கிறாய்...? வீட்டுக்காரருக்கு அறிவிச்சாச்சோ....?"

காதுள் விழுந்த கேள்வியில் திடுக்குற்று நிமிர்ந்தாள்.

"ஓ... இப்ப வருவினம்...."

துன்பத்தின் அடர்வுகள் இடையிடையே படிந்த இரு கூறாக் கப்பட்டது போலிருந்தது அவள் குரல். கேட்வர்கள் போய்விட்டி ருந்தார்கள் அவள் சொன்ன வார்த்தைகளிலிருந்த பொய்மை அவளைத் தீயாய்த்தகித்தது.

தன் ஒரே மகளின் துணையிழந்த வாழ்வை எண்ணி விதியை நொந்துகொண்டிருக்கின்ற, தோல் சுருங்கி விழிகளின் ஒளிமங்கிப் போன அவள் தாயா... அந்த முதிய நிழலினுள் ஒடுங்கியபடி தங்கள் அம்மா அண்ணனைக் குணப்படுத்திக்கொண்டு வீடு வருவாள் என்று காத்திருக்கின்ற இவள் இரு சின்ன மகள்களா..



படிப்பகம்

www.padippakam.com

யாரால் அவள் பொருட்டு அங்கு வரமுடியும்? துன்பம் பாறையாகி அவளின் நலிந்த இதயத்தை நெருக்கி நசிப்பதாய்த் தோன்றிற்று, அந்தக் கணத்தில். அவளின் மூடிய விழிகள் தாண்டிக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

"அக்கா..."

ஒருவிதமான இரங்கும் தொனியுள்ள அழைப்பிற்கு அவள் விழிகளைத் திறந்தபோது இவன் அங்கு நின்றிருந்தான்.

"கனநேரமாய் நிக்கிறியள் அக்கா... ஆராவது வருவினமோ வீட்டையிருந்து?"

"....."

வார்த்தையெழாமல் அவள் தவிப்பது அவனுக்கு அவள் நிலையைக் கோடியிட்டிருக்க வேண்டும்.

"எங்க உங்கட வீடு...?"

அவள் சொன்னாள். அவன் மனத்துள் ஏதோ கணிப்பு ஓடிற்று.

"எப்பிடியும் ரெண்டு மணித்தியாலப் பயணம்... என்னத்தில போகப்போறியள்...?"

தன்னுள் தானே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்து, விடை அறியாது தவித்த கேள்வியை அவனும் கேட்டபோது அவள் கண்கள் நிரம்பின.

"ஓட்டோவில போறதெண்டாலும் வழமையான றேற்றை விடக் கூடத்தான் கேட்பாங்கள்... ஆயிரத்து ஐந்நூறு, இரண்டாயிரம் வரும்...."

அவன் தனக்குத்தானே பேசுபவனாய்ச் சொன்னான்.

அவள் கைப்பையை எடுத்து விரித்தாள். கசங்கியிருந்த ஒரு ஐம்பது ரூபாத்தாளும், ஒரு இருபது ரூபாத்தாளும் தவிர வெறுமையாயிருந்தது கைப்பை. பிறகு நலிந்த குரலில் சொன்னாள்..



படிப்பகம்

www.padippakam.com

"என்ரை அம்மாவும் இவனுக்குக் கீழை ரெண்டு மகள்களுந் தான்... இடம்பெயர்ந்துதான் இருக்கிறம். இப்ப... பஸ்ஸிலதான் போகவேணும்... இல்லாட்டி நடந்து...."

அழுகைக்கிடையேயான இவளின் முறிந்த வார்த்தைகள் அவனை மௌனமாக்கியிருந்தன.

சிறிது நேர மௌனத்தின் பின் அவளுக்குமட்டும் கேட்கக்கூடிய தான ஆழ்ந்த தொனியில் அவன் சொன்னான்...

"வாசல் வரைக்கும் நான் ஸ்ட்ரெச்சரில் கொண்டுவாறன். உங்கட இடத்துக்குப்போற பஸ் இரண்டரைக்கு வரும்... பின்பக்கப் பாதையால போறது சுகம்... சனம் கொஞ்சம் குறையட்டும்..."

அவளின் துன்பங்களின் பரிமாணத்தை ஆத்மார்த்தமாய் உணர்ந்திருப்பதை அவன் முகம் சொல்லிற்று. அவள் வார்த்தையெழாமல் நின்றிருந்தாள். இடையீடின்றிப் பிரவகித்துக்கொண்டிருந்த கண்ணீரில் நன்றி தெரிந்தது.

பையன் ஸ்ட்ரெச்சரின் வேகத்தைக் குறைத்து நிறுத்துவது தெரிந்தது. வளைவு வந்துவிட்டிருந்தது. சற்றே தூரத்தில் நின்றிருந்த காவலாளி தவிர எவரும் தென்படாதது. பதற்றம் தணித்தது. அந்தப் பொழுது பொதுவாயே அமைதியானதுதான் நோயாளியைப் பார்க்க வருகின்றவர்கள் மதியம் நிலவுகின்ற பரபரப்பையும் சந்தடியையும் தம்மோடே துடைத்து எடுத்துக்கொண்டு போகின்றாற்போன்ற அமைதி.

அவள் கையில் வைத்திருந்த தோல் பையை நிலத்தில் வைத்தாள். ஸ்ட்ரெச்சரின் நடு அரைப் பாகத்திற்கு குறைவான இடத்துள் களைத்தவன் போல ரமணா படுத்திருந்தான். தளர்ந்து சோர்கின்ற நடையுடன் அவள் ஸ்ட்ரெச்சரை நெருங்கினாள். அவன் மீது போர்த்தியிருந்த துவாலையை மெல்ல விலக்கினாள். ஒரு மென்மஞ்சள் தன்மையுடன் வெளிறியிருந்த முகத்தில் ஒரு பனிப்பூவின் மெல்லுறக்கம் போல கருமையான இமைப்போர்வையுள் விழிகள் மூடியிருந்தன. தாய்மையின் மகத்துவமான உணர்வுகளை அவளில் அறிமுகம் செய்த சின்ன மகன்! உயிரின்



படிப்பகம்

www.padippakam.com

தாபமாய் சொல்லொணாத் தவிப்பு நிறைய அவள் விழிகள் பெருகிற்று.

"அக்கா.... ரெண்டரைக்கு வரும்...."

அவளின் முன்னே காத்திருக்கின்ற கடமையை ஒரு இரக்கத் துடன் நினைவு படுத்துவதாயிருந்தது அவன் குரல். அவள் அவச ரமாய் விழிகளைத் துடைத்துக்கொண்டாள். ரமணாவை வாரியெ டுத்து தோளில் சாய்த்துக்கொண்டாள். துவாலையால் கழுத்திலி ருந்து பாதம் வரை போர்த்தாள்.

நிலத்திலிருந்த அவளது பையை எடுத்துக்கொடுக்கும்போது அவனது கண்களிலும் நீர் படலமிட்டிருந்தது தெரிந்தது.

அவனுக்கு அவள் நன்றி சொல்லத்தான் வேண்டும். எத்த னைப் பெரிய உதவி! அவள் நிலையறிந்து செய்த உதவி. விதிக ளையும் நடைமுறைகளையும், வழக்கங்களையும் அவற்றின் எல்லை தாண்டி மீறுகின்றதான அவளது 'குற்றத்திற்கு' அவனும் உடந்தையாயிருந்திருக்கிறான்.

அவளின் நெஞ்சுகள் துன்பத்தில் கரைந்து நன்றியுணர்வு கண் ணீரிற் தெரிந்தது. ஒரே கணத்தில் பலமாய் எழுந்து உருவழிந்து போகின்ற வார்த்தைகளைக் கோர்க்க முடியாமல் தடுமாறினாள் அவள்.

"பஸ் வந்திடுமக்கா..."

அவளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டவன்போல் இதமான குரலில் அவன் சொன்னான்.

"நாலு நாலரைக்குள்ள உங்கட இடத்துக்குப் போய்ச்சேர்ந்தி டலாம் அக்கா...."

வாசலை நோக்கி யாரோ வருவது தெரிந்தது. தாமதிப்பது நல்லதல்ல. அவள் மௌனமாய் விடைபெற்று வாசற்பக்கமாய் நடக்கத் தொடங்கினாள். முதுகின் பின்னே ஸ்ட்ரெச்சரின் கடகடக் குமொலி தேய்ந்து மறைந்துகொண்டிருந்தது. வாசலைக் கடந்த போது பிரதான வீதியில் குறுக்கும் நெடுக்குமாய் பிரயாணிக்கின்ற



படிப்பகம்

www.padippakam.com

மனிதர்கள் அவள் கவனத்தில் விழாமல் விழிகளில் தடக்கினார்கள்.

ரமணா வழமையைவிடக் கனப்பதாய்த் தோன்றிற்று. அல்லது ஏமாற்றங்களும் துயரங்களும் கீலங்கீலமாய்க் கிழித்திருந்த, தாங்கும் வலுவற்றுப்போன மனத்திற்குத்தான் அத்துணை பாரமோ! சற்றே தூரத்தில் தெரிந்த பஸ்தரிப்பிடம் நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

ஒவ்வொரு அடிக்கும் நடை கெஞ்சிற்று. பயணம் பற்றிய அச்சம் பதற்றத்தை அதிகரித்தது. இந்த அச்சமும் துயரமும் தாங்கித் தன்னால் இரண்டு மணிநேரம் பயணத்தைத் தொடர முடியுமாவெனக் கிளர்ந்த சந்தேகம் அவளைத் தளர்வுறச் செய்தது.

பஸ் தரிப்பிடம் எவருமில்லாத தனிமையில் அமிழ்ந்திருந்தது.

அவள் அந்தச் சிறிய கட்டடத்தின் ஓரமாய்ச் சாய்ந்து நின்று கொண்டாள். இன்னும் சில நிமிடங்களுள் பஸ் வந்துவிடலாம். எவ்வளவு விரைவாய் வந்துவிட்டாலும் நல்லது. யாரேனும் தெரிந்தவர்கள் கண்டுவிடக்கூடும் என்ற எண்ணத்தால் எழுகின்ற கால்கள் நிலத்தில் நிலைகொள்ளாத பதற்றம் சற்றேனும் தணியக் கூடும். அச்சத் தீயின் தகிப்பிலிருந்து விலகிவிட இயலும்.

ரமணாவின் முதுகை விரல்களால் மெல்ல வருடினாள். எத்துணை அருமையான கொடையாய் இருந்தான் அவன்! ஒரு பெண்ணுக்குள் தாளை மலர்த்திய நேரங்களை தன்னோடு அழைத்துவந்து அவளுக்கு அறிமுகஞ்செய்தவன் அவன். அவள் கண்கள் ஊற்றெடுத்தன. 'காணாமற்போன' அவள் கணவனின் சின்ன வார்ப்பாய் அவன் இருப்பதாயே அறிந்தவர்கள் சொல்வதுண்டு.

கூச்சலும் கும்மாளமுமாய் மினிபஸ் ஒன்று அவளைக்கடந்து சென்றது. பாடசாலைச் சேவையாக இருக்க வேண்டும். சிறுவர்கள் உலகம் எத்துணை வினோதமான இனிமை மிக்கது! உலகின் மாசுபடியாத சின்ன தேவதைகளும் தேவர்களும். இயற்கை எதன் பொருட்டு அவர்களிலும் நோயைச் சபித்துவிடுகின்றது



படிப்பகம்

www.padippakam.com

கொடூரமாய்...? அவள் ஏக்கமாய் தொலைவில் மறையும் மனி பஸ்ஸில் பார்வையைப் பதித்திருந்தாள். ரமணாவின் வயதுச் சிறு வர்கள்தான் அவர்களும்.

தூரத்தில் பஸ் வருவது தெரிந்தது. துவாலையைச் சரிசெய்து ரமணாவை ஏறக்குறைய முழுமையாய்ப் போர்த்தினாள். அவளுக் குரிய பஸ்தான். சனக்கூட்டம் அதிகமாயிருந்தது. அவள் ஏறும் போது நடத்துனரின் குரல் உயர்ந்தது..

"வருத்தக்காரப் பிள்ளையோட ஒரு அம்மா வாறா.. இடம் குடுங்கோ..."

அவளுள் திகில் படர்ந்தது. யாராவது இடங்கொடுத்தாலும் கூட அவள் உட்கார முடியாது. யாரோ 'உட்காரலாம்' என்பதுபோலத் தமது சீற்றில் விலகி உட்கார்ந்த போதும் அதைக் கவனியாதவ ளாய் பின்பக்கக் கதவுக்கும் சீற்றுக்கும் இடையேயிருந்த இடை வெளியில் அவள் தன்னைச் செருகிக்கொண்டாள். கால்கள் கெஞ் சினாலும் உட்கார முடியாது. நேரம் நகர நகர இறுகிப்போகலாம். படலமிடத்தொடங்கிய விழிகளை கண்ணாடி ஜன்னலின் அப் பாலே தெரிந்த வெளியுள் புதைத்தாள்.

இன்றைய நாளின் கடந்துபோன கணங்களெல்லாம் ஒரு கனவாய் இருந்துவிடக் கூடாதா என்று வினோதமான ஏக்கம் பிறந்தது அவளுள். நாலாபுறமும் மணல்மாதிரி பொழிகின்ற உக் கிரப் பெருவெளியுள் தான்மட்டும் தனித்துநிற்பதான பிரமையில் மனது நலிந்து சிதைந்தது. வறுமை எத்தனை பரிமாணங்களில் வாழ்வை விழுங்கி மனிதர்களைச் சக்கையாகத் துப்பிவிடு கின்றது.

பஸ்ஸின் வேகத்தில் குலைகின்ற ரமணாவின் போர்வையை அடிக்கடி சரிசெய்ய வேண்டியிருந்தது. அவனைத் தாங்கியிருந்த கை விறைத்து மரத்துப்போனது போலிருந்தது.

"புள்ள... இதில இரன்... உன்னைத்தான்...."

வயதான பெண்ணொருத்தி அவள் கைகளில் தட்டிச் சொன் னாள்.



படிப்பகம்

www.padippakam.com

"இல்லையம்மா... இருந்தா இவன்ர நித்திரை குழம்பீடும்..."

அவள் குரல் தடுமாறிற்று.

"இரண்டு மூண்டு நாளா நல்ல நித்திரையும் கொள்ளேல்ல ஆஸ்பத்திரியில..."

ஒருவிதமான பதற்றம் குரலில் நிறைந்திருந்தது.

"ஏன் கடுமையான வருத்தமோ..."

இப்ப எப்பிடிச் சுகமோ...?"

"ம்... வீட்டை போறம்..."

"பொடியின்ர முகத்தில தெளிவைக் காணயில்லை..."

மூதாட்டி யோசனையாய் முணுமுணுத்தாள்.

"இன்னும் சாப்பிடத் தொடங்கேல்ல.."

அவள் அவசரமாய் மூதாட்டியின் யோசனையைத் தொடர அனுமதிக்காதவளாய்ச் சொன்னாள். மேலும் உரையாடலைத் தொடரவிரும்பாதவள்போல யன்னலின் வெளியே பார்வையைத் திருப்பினாள். வெற்று வெளியில் கொடு வெய்யிலில் துவண்டு நின்றிருந்தன சிறு மரங்கள்.

யார் யாரோ நிறுத்தங்களில் ஏறியும் இறங்கியும் கொண்டிருந் தார்கள். அவள் சூழல் பற்றி எந்தப் பிரக்ஞையும் இல்லாதவளாய் துவண்டிருந்தாள். இடையே யாரோ 'ஆஸ்பத்திரி மணம்..' என்ப தாய்ச் சொன்னபோது இவள் திரும்பிப் பார்த்தாள். பட்டுப் பாவா டையும் சட்டையுமாய் அழகிய சிறுமி. இவள் பக்கமாய் மூக்கைச் சுழித்துக்கொண்டு தாயின் கைகளைப் பிடித்தபடி நின்றிருந்தது. இவள் மேலும் அந்தக் குறுகிய இடத்துள் தன்னைச் சுருக்கிக் கொண்டாள். காற்றின் வாசனையை எவரும் இலகுவில் அடையா ளங்கண்டு விடுகிறார்கள்.

கழுத்தோரங்கள் வியர்வையில் கசகசத்தன. கை இனிமேலும் தன்னால் சுமக்க முடியாது என்பதாய் மரத்துப்போனதாய்த்



படிப்பகம்

www.padippakam.com

தோன்றிற்று இடது கையிலிருந்து வலது கைக்கு ரமணாவை மாற்றினால் நல்லது போலிருந்தது. மெல்ல இடது கையை மாற்ற எத்தனித்தபோது துல்லியமாய் உணர முடிந்திருந்த ரமணாவின் மாற்றம் அவளைத் திடுக்குறச் செய்தது. அவளின் கரங்கள் தோற்றுவிடும்படியான இறுக்கம்.

அவளுள் அச்சம் கிளர்ந்து படர்ந்தது. இந்தப் பயணத்தின் முடிவுவரை அவளால் தன் முயற்சியில் தோற்றுவிடாதிருக்க இயலாது என்று தோன்றிற்று. கால்கள் தளர்ந்து துவள ஜன்னலில் சாய்ந்துகொண்டாள். இனித் தன்னால் எதுவுமே முடியாது என்ப தான ஆற்றாமையுள் தான் புதைந்துகொண்டிருப்பதாய் உணர்ந் தாள்.

“அரசடி இறங்கிறவை வாசலுக்கு வாங்கோ....”

நடத்துனரின் குரலில் அவளுள் திடீரென ஒரு விழிப்பு ஓடிற்று. யுகம்யுகமாகத் தொடர்ந்துகொண்டிருந்த பயணம் முடிவடையப் போகிறதா?

கண்களை விழித்து ஜன்னலின் வெளியே பார்வையைச் செலுத்தினாள். அவளுக்குப் பரிச்சயமான தெருவோரக் கட்டடங் கள், தூசிபடிந்த மரங்கள். மெல்ல நகர்ந்து வாசலருகே வந்தாள். கையில் தயாராய் வைத்திருந்த சில்லறைகளையும் தாளையும் நடத்துனரிடம் கொடுத்தாள்.

“அரை டிக்கெட்டுத் தானே...?”

அவரின் பார்வை சந்தேகமாய் ரமணாவை ஏறிட, அவள் விழி கள் பொங்காதிருக்குமாறு தன்னைக்கட்டுப்படுத்த மிகுந்த பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

அந்த இறக்கத்தில் அவளோடு இறங்குவதற்குப் பயணிகள் எவரும் இருக்கவில்லை. அவள் மெதுவாய் எவரிலும் இடித்துக் கொள்ளாமல் மிக மெதுவாய் இறங்கினாள். ரமணாவை வயிற்றிற் சுமந்த நாட்களிலும் அவள் இப்படித்தான் மிகக் கவனமாய் இருந்திருக்கிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

பஸ் புறப்பட்டுப்போய்விட எஞ்சியிருந்த வீதியின் வெறுமையின் ஒரு பாகமாய்த் தான் நடப்பதாய் அவளுக்குத் தோன்றிற்று. இரக்கமற்றுத் தொடர்கின்ற கோடைகால வெயில் விரிப்பினுள் சிறு மரங்கள் மிக வாடியிருந்தன தெருவோரமாய்.

கடந்துபோன நாட்களினதும் பக்கமாய் தொடர்கின்ற நேரங்களினதும் துன்பம் தாங்கி அடுத்த பொழுது அவளுடன் எவ்வாறு இணைந்து கொள்ளப்போகிறது என்பதான மலைப்பான துயர் எழுந்தது அவளுள். கால்கள் நடக்கும் வலுவை அறவே இழந்தாற்போல் சோர்ந்துவிட, அருகிருந்த பெயர் தெரியாத மரத்தின் கீழ் தளர்ந்து அமர்ந்தாள் அவள். வீதியின் வெறுமை அவளை மையமாக்கி விரிந்து படர்ந்தது.

ரமணாவைப் போர்த்திருந்த துவாயை எடுத்து நிலத்தில் விரித்தாள். மெல்லக் குனிந்து அவனைத் தன் தோளிலிருந்து விடுவித்து சரித்து துவாலையில் அவனைப் படுத்தினாள். கை கால்களை நிமிர்த்தி ஒருசேர வைக்கமுடியாதெனப்பட்டது. குனிந்து ஆதுரத்துடன் அவன் முகத்தை வருடினாள். எப்போதும் போலவே சின்ன உதடுகளின் ஓரத்தில் இப்போதும் குறும்பு சுழித்திருப்பதாய்த் தோன்றிற்று.

ஆத்மாவின் ஆழத்துள்ளிருந்து எழுவதான துயரில் அவள் வயிறு குழைந்தது. உயிரற்றுப்போன அவள் உயிரின் கொடி, அனலுள் தகிவதாய் அவள் உடம்பு நலிந்தது.

அவளின் தீனமான அழும் குரலில் எழுந்த துயர வார்த்தைகள் உருவழிந்து உருவழிந்து அந்த வெளியிற் கரைந்துகொண்டிருந்தன.

✦



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

தாட்சாயினி

அம்புலி

அலையிசை

ஜெ. விஜயலக்சுமி

வன்னிமகள்

சிவாஜினி சிவசங்கர்

மலைமகள்

அமரர் சந்திரா அற்புதலிங்கம்

அ. காந்தா

சிரஞ்சீவி

கிருஸ்ணவேணி

அகநிலா

குமுதினி

படிப்பகம்